Registered as a News Paper

# மன்னா

MANNA

மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

பொழிவு - 14
குவிப்பு - 11
பக்கங்கள்- 16
விலை ரூபா 40.00
நவம்பர் 2011

(ISSN 1800-2641)

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Social Communication Centre, Manna Paper Office, St.Joseph's Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789/ 023 - 3233276 / 0777420811 Fax No - 023-2250789, E. Mail : nesanmnr@gmail.com.

25 வருடங்களுக்குமுன் (1986) திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் அசிசியில் உலக சமயத் தலைவர்களைச் சந்தித்தபோது




25 வருடங்களுக்குப்பின் (2011) திருத்தந்தை 16ஆம் ஆசீர்வாதப்பர் அசிசியில் உலக சமயத் தலைவர்களைச் சந்தித்தபோது



## திருச்சபையின் வரலாற்றில் விசுவாசத்தை நிலைநிறுத்தும் நோக்கத்துடன் கிறிஸ்தவ சமயமும் வன்முறையைப் பயன்படுத்தியமை குறித்து

# இன்று நாம் வெட்கப்படுகிறோம்

### அசிசியில் நடைபெற்ற உலக அமைதிநாள் நிகழ்வில் திருத்தந்தை



ஒரு கிறிஸ்தவன் என்ற முறையில் நான் ஒன்றை இந்நேரத்தில் கூறவிழைகிறேன். திருச்சபையின் வரலாற்றில் விசுவாசத்தை நிலைநிறுத்தும் நோக்கத்துடன் கிறிஸ்தவ மறையும், வன்முறையைப் பயன்படுத்தியுள்ளது என்பதைக் குறித்து நாம் வெட்கப்படுகின்றோம். மதங்களின் உண்மை வழிகளைக் காண நாம் உரையாடல்களை வளர்ப்பதும், ஆழப்படுத்துவதும் இன்றைய நம் கடமையாகிறது என கடந்த ஒக்டோபர் மாதம் 27ஆம் திகதி இத்தாலியின் அசிசி நகரில் உலக அமைதி வேண்டி நடைபெற்ற செபவழிபாட்டின்போது திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் குறிப்பிட்டார்.

1986ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 27ஆம் திகதி திருத்தந்தை 2ஆம் ஜோன் பவுல் இத்தாலியின் அசிசி நகரில் உலக அமைதிக்காக செபிக்கும்படி பிறமதத் தலைவர்களை அழைத்தார். உலக அமைதிவேண்டி நடத்தப்பட்ட அந்த செபநாளின் 25வது ஆண்டு நிறைவையொட்டி அதே ஒக்டோபர் 27ஆம் திகதி திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் உலகின் பல நாடுகளில் இருந்து அழைக்கப்பட்டிருந்த 200க்கும் அதிகமான பல்சமயத் தலைவர்களுடன் உலக அமைதிக்காகச் செபித்தார். அங்கு உரையாற்றிய திருத்தந்தை மேலும் கூறியதாவது (தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## கார்மேல் கன்னியர்களின் முதல்வர் இலங்கை விஜயம்



கார்மேல் கன்னியர்களின் உலகளாவிய முதல்வர் (Superior General) அருட்சகோதரி ஆகத்தா மேரி (அ. கா.) அவர்கள் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.


நவம்பர் மாதம் 6ஆம் திகதி இலங்கைக்கு வந்த இவர் ஒரு மாதம் வரை தங்கியிருப்பார். இவர் இலங்கையில் உள்ள கார்மேல் கன்னியர் இல்லங்களையும், அருட்சகோதரிகளையும் தரிசித்து வருகின்றார். (தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## தலைநகரில் தமிழ் குருக்கள் தங்க புதிய கட்டிடம்

யாழ்ப்பாணம், மன்னார், திருமலை - மட்டுநகர் மறைமாவட்டக் குருக்கள் கொழும்பில் தங்கிநிற்கின்ற பொறளை கிறிகறிஸ் வீதியில் உள்ள கட்டிட வளாகத்தில் புதிய கட்டிடத்தொகுதி ஒன்று புதிதாகத் திறந்து - வைக்கப்பட்டுள்ளது.

இக்கட்டிடம் யாழ் மறை மாவட்ட ஆயரின் நிதியத்தைக் கொண்டு கட்டி முடிக்கப்பட்டு, 2011 ஆகஸ்ட் 4ம் தேதியன்று யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையினால் ஆசீர்வதிக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டது. இப்புதிய குருக்கள் தங்குமிடத்திற்கு Bishop Thomas Block என்று பெயரிடப்பட்டுள்ளது.

## முன்னாள் திருத்தந்தைக்கு முத்திரை வெளியீடு




திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் அருளாளராக அறிவிக்கப்பட்டதையொட்டி இத்தாலி அரசு திருத்தந்தையின் படம் தாங்கிய புதிய முத்திரை ஒன்றை வெளியிட்டது. அந்த முத்திரையையே மேலே காண்கிறீர்கள்.

## தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா இணையத்தளம்

இலங்கைத் தமிழ் கத்தோலிக்க மறைமாவட்டச் செய்திகளை உடனுக்குடன் உத்தியோகபூர்வமாக அறிக்கையிடும் ஓர் இணையத்தளமாக 'தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா இணையத்தளம்' ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இலங்கைத் தமிழ் கத்தோலிக்க மறை மாவட்டங்கள் தொடர்பான அனைத்துத் தகவல்களையும், செய்திகளையும் இவ் இணையத்தளத்தில் முழுமையகப் பெற்றுக்கொள்ளலாம். யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் இதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளார். (தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## இங்கிலாந்து அரச குடும்பத்தினர் கத்தோலிக்கரைத் திருமணம் செய்யலாம்



இங்கிலாந்து அரச குடும்பத்தினர் கத்தோலிக்கரை திருமணம் செய்யக்கூடாது என்று நடைமுறையில் இருந்துவந்த நூற்றாண்டுகாலச் சட்டம் தற்போது நீக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்து அரச குடும்பத்தினர் கத்தோலிக்கரைத் திருமணம் செய்யலாம். ஆனால் கத்தேலாலிக்கராக மாறமுடியாது என்ற சட்டம் இன்னும் அமுலில் இருக்கின்றது. (தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## செபமாலைக் கன்னியர்களின் புதிய முதல்வராக அருட்சகோதரி மேரி கெலன் ஜெயந்தி



செபமாலைக் கன்னியர் சபையின் புதிய முதல்வராக அருட்சகோதரி மேரி கெலன் ஜெயந்தி அவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளர்.

கடந்த ஒக்டோபர் மாதம் 19ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை மன்னார் 'ஞானோதயம்' அ.ம.தி.கள் இல்லத்தில் இடம்பெற்ற இச்சபையின் 8வது பொது அமர்விலேயே புதிய முதல்வர் தெரிவும் இடம்பெற்றது.

அருட்சகோதரி மேரி கெலன் ஜெயந்தி அவர்கள் பற்றிமா வீதி மாதகலைச் சேர்ந்த திரு. ஞானப்பிரகாசம் சாமிநாதர் மற்றும் பெரியநாவற்குளம், மாந்தையைச் சேர்ந்த அல்பேட் சவிரியம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியாவார். (தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## மன்னா சந்தாதாரர் கவனத்திற்கு!

பலருடைய சந்தாக் காலம் முடிவடைந்த நிலையிலும் நாம் தொடர்ந்து மன்னா பத்திரிகையை அனுப்பி-வருகின்றோம். ஆனால் நிதி நெருக்கடி காரணமாக நாம் தொடர்ந்து அவ்வாறு அனுப்ப முடியாமல் இருக்கின்றோம்.

எனவே தங்கள் சந்தாவை புதிப்பிக்காத உள்நாட்டு வெளிநாட்டு சந்தாதாரர் அனைவருடைய பத்திரிகைகளையும் எந்தவித முன்னறிவித்தலும் இன்றி உடனடியாக நிறுத்திவிடுவோம் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். உங்கள் சந்தாக் காலம் முடிவடையும் ஆண்டு, மாதம் உங்களுக்கு அனுப்பப்படும், பத்திரிகையின் முகவரிக்குக்கீழே தரப்படுகிறது. எனவே அதைப் பார்த்து உடனடியாக உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக்-கொள்ளுங்கள். சந்தா விபரம் இறுதிப் பக்கத்தில் உள்ளது.

(மன்னா நிர்வாகம்)

## தென்னாபிரிக்காவுக்கு விஜயம் செய்த இலுங்கை ஆயர் குழுவினர்



இனங்களுக்கிடையில் நல்லுறவை வளர்க்கும் பணியின் அனுபவத்தைப் பெறுவதற்காக இலங்கை ஆயர் பேரவையின் பிரதிநிதிகளாக ஏழு ஆயர்கள் தென்னாபிரிக்காவுக்கு விஜயம் செய்திருந்தனர். யூலை 25ம் திகதி முதல் ஓகஸ்ட் 1ம் திகதி வரை நடைபெற்ற இவ்விஜயத்திலே ஆயர்கள் இராயப்பு யோசேப்பு, வியான்னி பெனாண்டோ, வின்சன் பெனாண்டோ, கரல் பெரேரா, நோபேட் அன்றாடி, கிங்சிலி சுவாம்பிள்ளை, தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகைகள் பங்கேற்றிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா
## மனப்பொழிவு

## கிறிஸ்து இல்லாத கிறிஸ்மஸ் விழாவா?

எல்லா மதங்களிலும் மனிதன் இறைவனைத் தேடிச் செல்கின்ற நிலைப்பாட்டையே காண்கின்றோம். ஆனால் கிறிஸ்தவத்தில்தான் இறைவன் மனிதனைத் தேடிவருகின்ற வினோதத்தைப் பார்க்கின்றோம். இது ஆச்சரியமான, அபூர்பமான ஒரு நிகழ்வாகும். இறைவன் மனிதனைத் தேடிவந்தது - இறைவனே மனிதனாக இந்த மண்ணில் வந்து பிறந்தது உண்மையில், "எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தி" (லூக்.2:10) தான்.

இறைவன் மனிதனான நிகழ்வு, வரலாறு பதிவு செய்துள்ள மாபெரும் நிகழ்வாகும். அதனால்தான் உலக வரலாறே கிறிஸ்துவுக்கு முன் (கி.மு), கிறிஸ்துவுக்குப் பின் (கி.பி.) என பிரிக்கப்படுகின்ற அளவுக்கு வரலாற்றில் இந்நிகழ்வு முக்கியமான ஒன்றாகிவிட்டது.

இயேசுவின் பிறப்பினால் சரித்திரம் மட்டுமல்ல, சாம்ராச்சியங்களே ஆட்டம்கண்டன. இயேசுவின் பிறப்பு தத்துவ ஞானத்தில் மூழ்கிக்கிடந்த கிரேக்க ஞானத்தை முற்றிலும் மாற்றிவிட்டது. படைபலத்தால் இறுமாப்படைந்திருந்த உரோம பேரரசின் அடிப்படையையே ஆட்டி அசைத்தது. சம்பிரதாயத் - திலும், சன்மார்க்கத்திலும் வேரூன்றி நின்ற யூத குல சடங்காசாரங்களுக்கு முற்றுப்புள்ளியை வைத்தது. அதற்குக் காரணம் இயேசுக்கிறிஸ்து உலக மக்களுக்கு இறை வாழ்வை, புது வாழ்வைக் கொண்டு வந்ததே ஆகும். பாவத்திலும் சாபத்திலும், வறுமையிலும் வெறுமையிலும் மூழ்கிக்கிடந்த மானிடத்திற்கு ஒரு புதிய வாழ்வை அவர் கொண்டுவந்தார்.

'இயேசு' என்ற பெயருக்கு 'அவர் தமது மக்களின் பாவங்களை நீக்கி, அவர்களுக்கு விடுதலையையும், மீட்பையும் ஆருளுவார்' என்பது பொருளாகும். அவர் அவதரித்தது "துஷ்டநிக்கிரக சிஷ்ட பரிபாலனம்' என்று கூறப்படுவதுபோன்ற "கெட்டவர்களை அழித்து நல்லவர்களைக் காப்பாற்றுவதற்காக" அல்ல. மாறாக, "பாவிகளை மீட்கவே கிறிஸ்து இயேசு இவ்வுலகத்திற்கு வந்தார். - இக்கூற்று உண்மையானது : எல்லாராலும் ஏற்றுக்கொள்ளத் - தக்கது" (திமொ.1:15).

கிறிஸ்மஸ் விழா என்பது அடிப்படையில் மீட்பின் விழா!, இரட்சிப்பின் விழா!, விடுதலையின் விழா! இயேசு கொண்டுவந்த மீட்பை, இரட்சிப்பை, விடுதலையை, அனுபவிப்பதும், அதைக் கொண்டாடுவதும்தான் கிறிஸ்மஸ் விழா. இங்கே இரண்டு விடயங்கள் நமது அவதானத்திற்குரியன. ஒன்று அனுபவிப்பது மற்றது கொண்டாடுவது. முதலாவது நடைபெற்றால்தான் இரண்டாவதற்கு அர்த்தம் இருக்க முடியும். ஆனால் அந்தோ பரிதாபம்! இன்றைய உலகின் நடைமுறை என்ன? கிறிஸ்து கொண்டுவந்த மீட்பை, இரட்சிப்பை அனுபவிக்காமல் வெறும் கொண்டாட்டங்களோடு கிறிஸ்மஸ் விழா 'வழக்கம்போல', 'பழக்கதோசமாக', 'வருடாந்த நிகழ்வாக' நிறைவுபெற்று விடுகின்றது!

இறைவன் மனிதனான இந்த நிகழ்வை - "எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டிய" இந்த நிகழ்வை உலக மக்கள் ஏற்றிப் போற்றிக் கொண்டாடுவது சாலவும் பொருத்தமானதே! தேவையானதே!

கிறிஸ்மஸ் விழா அண்மித்துவிட்டால் வர்த்தக நிலையங்கள் எல்லமே உஷார் அடைந்துவிடும். வண்ண விளக்குகளும், அலங்காரங்களும் எங்கும் நிறைந்திருக்கும். புத்தாடை, பலகாரங்கள், வான வேடிக்கைகள், கரோல் கீதங்கள் என கிறிஸ்மஸ் அண்மித்தால் எல்லோருடைய உள்ளங்களிலும் புத்துணர்வு 'களை' கட்டிவிடும். இதிலொன்றும் தவறில்லை. அளவான, ஆரோக்கியமான கொண்டாட்டங்கள் மனித வாழ்வுக்கு தேவையானதே. ஆனால் கிறிஸ்மஸ் விழாவின் அடிப்படையை மறந்துவிட்டு, இயேசு கொண்டுவந்த பாவமன்னிப்பின் அனுபவத்தை, புதுவாழ்வு அனுபவத்தை மறந்துவிட்டு வெற்று ஆடம்பரங்களிலும், கொண்டாட்டங்களிலும் மட்டும் மூழ்கிவிடுவது என்பது கிறிஸ்து இல்லாத கிறிஸ்மஸ் விழாவாகவே அமையும். கிறிஸ்து இல்லாத கிறிஸ்மஸ் விழாவா? சிந்திப்போம், செயற்படுவோம்.

மீண்டும் மறுமடலில் சந்திக்கும்வரை
அன்புடன் - அருட்பணியாளர் தமிழ் நேசன்.
பதிப்பாசிரியர் - மன்னா



# வாசகர் எண்ணங்கள்



### மனம் கனிந்த மன்னா!

மாண்புறு செய்திகளை மாதமொருமுறை
மானிலமெங்கும் மணமாய் பரப்பி நிற்கும் - என்
மனம் கனிந்த மன்னாவே! - உனக்கு என்
மனதின் ஆழத்தில் இருந்து மகிழ்வான வணக்கங்கள்!

தெவிட்டாத செய்திகளும், தித்திக்கும் தகவல்களும்
தேனாகப் பாய்ந்து என் மனங்களில் இனிக்குதே!
கானக் குயிலான கவிதைப் புனல்களும்,
சிறுகதையும், சிரிப்பொலியும்.
ஆழமாய்ப் பாய்ந்து என் சிந்தையை தூண்டுதே!

வெள்ளிவிழா, பொன்விழா, வைரவிழாக் கொண்டாட்டம்
அத்தனை தகவலும் அழகாகச் சொல்கின்றாய்!
மாதம் ஒரு புனிதரை மறக்காமல் சொல்கின்றாய்!
புனிதரின் பாதையிலே மனிதரையும் அழைக்கின்றாய்!

இளையோரின் வாழ்க்கை இன்பமாய் அமைந்திட
வாழ்க்கை என்ற தொடரினை வனப்புடன் தருகின்றாய்!
எதிர்கால சிறார்களின் ஏக்கங்கள் தீர்த்திட
சிறுவர் பொழிவினை சிறப்பாகச் சொல்கின்றாய்!
உனக்கு என் மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

*அ. ஜஸ்மின் ஷறோன், ஆவணம், நானாட்டான்.*

### இனிமையான செய்தி

மல்லிகைப்பூவாய் மணம் வீசும் மன்னாவே!
மலர்கின்ற பூவாய் விடிகின்ற பொழுதெல்லாம்
உன்னைக் காணாத் தவம் கிடந்தோம்.
மாதத்தில் ஒருமுறை உன்னைக் காண ஏங்கித் தவிக்கின்றோம்!
சமாதானத்தைப் பற்றியே நீ தூது கொண்டு வருகின்றாய்!
மறு இதழ் எப்போது வருமென ஆவலோடு காத்திருக்கின்றோம்.
மன்னார் மாநகரில் உன்பெயர் ஓங்கிட
உளமார வாழ்த்தி நிற்கின்றோம்.

*பி. ஜெயறூபி, வாழ்க்கைப் பெ. கண்டல், அளவக்கை.*

### என் அன்புக் காதலி மன்னா



சோகத்தை மூட்டையாய் சுமந்து
கண்ணீரை குளத்திலே நிறைத்து
இறுதி வாழ்க்கையை நோக்கும் வேளையிலே
இதமாய் ஒரு இதழ் என் கரம் கிடைத்தது.
இன்பத்தை அள்ளிப் பொழிந்து
அன்பை மழையாய்ச் சொரிந்தது.
மாதம் ஒருமுறை வருகின்ற
என் அன்புக் காதலி மன்னாதான்
மன்னாவே... என் காதலியே
நீ நீடூழி காலம் வாழ என் வாழ்த்துக்கள்.

*- தி. வேந்தக்கோன் ஆன்டிலோஜினி,*
*திருக்குடும்ப கன்னியர் மடம், நானாட்டான்.*

### இலட்சியத்தை எடுத்துச் சொன்னாய்

மாதத்தில் ஒருமுறை தேடி வந்தாய், என் மனதைத் தொட்டாய்
வாழ்க்கை வாழ்வதற்கும் சாதனைகள் படைப்பதற்கும் என
பக்குவமாய், பணிவாய் நீ எடுத்துச் சொன்னாய்!
வாழ்வுதனில் இலட்சியம் வேண்டும் என்பதை
அனைவரும் அறிந்திட அன்பாய்ச் சொன்னாய்.
உனக்கு என் நன்றிகளும் வாழ்த்துக்களும்!

*- ஞா. மரினா மரியநாயகி, நடுக்குடா, பேசாலை.*

### உன்னாலே மண்ணில் பல மகிழ்வுகள்

மன்னா உன் நற்செய்தியால் மண்ணில் பல மகிழ்வுகள்
உறவு இழந்து உடைந்து நிற்கும் மனங்களுக்கு நீ ஓர் பகிர்வு
இன்ப துன்பத்தை தாங்கும் மனங்களுக்கு நீ ஓர் மகிழ்வு
அனாதையாய் நிற்கும் அன்னையர்க்கு நீ ஓர் அமைதி
மன்னா உன் செய்தி என்றும் வளர்கவே.

*வி. மேரி கொன்சியா, தெற்கிலுப்பைக்குளம், வவுனியா.*

## தியானப்பாடல் அல்ல மாறாக பதிலுரைப்பாடல்



அன்றாடத் திருப்பலியில் முதல் வாசகத்திற்கும், நற்செய்தி வாசகத்திற்கும் இடையேயும், ஞாயிறு மற்றும் பெருவிழாத் திருப்பலிகளில் முதல் வாசகத்திற்கும், இரண்டாம் வாசகத்திற்கும் இடையேயும் வருவது திருப்பாடல்கள் நூலிலிருந்து ஒரு திருப்பாடல் அல்லது பழைய ஏற்பாடு நூல்களில் காணப்படுகின்ற பாடல்களில் ஒரு பகுதி. அந்தத் திருப்பாடலின் வாசிக்கப்படும் அல்லது பாடப்படும் பகுதிக்குத்தான் பதிலுரைப்பாடல் என்று பெயர்.

இந்தப் பகுதியை பலர் தியானப் பாடல் என்று அழைத்தனர். இது தவறு. திருப்பலி அமைப்பில் தியானப்பாடல் என்ற பகுதி கிடையாது. பதிலுரைப்பாடல் என்று இது சொல்லப்படுவதற்கான காரணம், இறைவன் நம்மோடு பேசினார் ஆதலால் நாம் அவரது வார்த்தைக்கு பதில் அளிப்போம் என்ற பொருளில் திருப்பாடல் அமைந்திருக்கிறது. எனவேதான் இதற்குப் பதிலுரைப்பாடல் என்று பெயர். திருச்சபை இன்று பதிலுரைப்பாடல் பற்றிய விளக்கத்தை இறைமக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும் என்பதில் கவனம் கொள்கிறது. பதிலுரைப்பாடல் இறைவார்த்தை வழிபாட்டின் முழுமைக்குரிய பகுதியாகும். மக்கள் இத்திருப்பாடல்களை எளிதாக சொல்லும் வகையில் திருப்பாடல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

பதிலுரைப் பாடலில் கொடுக்கப்படுகின்ற திருப்பாடலை வாசிக்காது அதற்கு இணையாக வேறோரு பாடலைப் பாடுவது திருவழிபாட்டு விதிமுறைக்கு மாறானது. எனவே வாசக நூலில் முதல் வாசகத்திற்குக்கீழ் எந்தத் திருப்பாடல் வேண்டும் என்பதை கவனத்தில்கொள்ள வேண்டும். எந்த பாடலையும் பாடலாம் என்பது தவறு. திருச்சபை நமக்கு பதிலுரைப்பாடல்களைத் தேர்ந்தெடுத்து, தனது முதல் வாசகத்தின் மையக்கருத்தை மீண்டும் பதிலுரைப்பாடலில் பிரதிபலிக்கச் செய்வதன் வழியாக நமது பங்கேற்பை பொருளுள்ளதாக அமைக்கின்றது. எனவே தனது சொந்த விருப்பு, வெறுப்புக்களை ஒருபுறம் வைத்துவிட்டு திருச்சபையின் கருத்துக்கேற்ப பதிலுரைப்பாடலை வாசித்து முழுப்பங்கேற்புடன் திருப்பலிக் கொண்டாட்டத்தில் நம்மை இணைத்துக்கொள்வோம்.

### உண்மை உறைக்கும் — கமிலஸ்




(நன்றி - தி. மெசஞ்சர்)

### சிரிக்க மட்டும்!

#### பகவான் செயல்!

அடுத்தடுத்து ஆறு குழந்தைகளைப் பெற்று, ஏழாவது குழந்தையின் பிரசவத்திற்காக மருத்துவமனைக்குச் சென்ற ஓர் ஏழைப் பெண்ணை மகப்பேற்று மருத்துவர் மிகவும் கடிந்து பேசினார். அதற்கு அப்பெண், "நான் என்ன செய்ய? எல்லாம் பகவான் செயல்!" என்றார். "யார் அந்தப் பகவான்?" என்று கோபத்துடன் மருத்துவர் கேட்டபோது, "என் வீட்டுக்காரர் பெயர்தான் பகவான்" என்றார் அந்தப் பெண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசிசியின் அமைதிக் காற்று அகிலமெங்கும் வீசட்டும்!

## – திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் –



தீவிரவாதம் பல நேரங்களில் மதங்களின் அடிப்படையில் எழுகின்றது. வன்முறையைத் தூண்டுவதென்பது எந்த ஒரு மதத்தாலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத உண்மை என்பதை 1986ஆம் ஆண்டு அசிசி நகரில் கூடிய எல்லா மதத்தலைவர்களும் ஒரே குரலில் கூறினார்கள். இன்று நாம் மீண்டும் அதே உண்மையை உலகறியச் செய்கின்றோம். அசிசியின் அமைதிக்காற்று அகிலமெங்கும் வீசட்டும் என கடந்த ஒக்டோபர் மாதம் 27ஆம் திகதி இத்தாலியின் அசிசி நகரில் உலக அமைதி வேண்டி நடைபெற்ற செபவழிபாட்டின்போது திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் குறிப்பிட்டார்.

அங்கு உரையாற்றிய திருத்தந்தை மேலும் கூறியதாவது, 25 ஆண்டுகளுக்கு முன் 1986ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 27ஆம் திகதி அருளாளர் இரண்டாம் ஜோன் போல் இந்நகரில் உலக அமைதிக்காக பிறசமயத் தலைவர்களைச் செபிக்கும்படி அழைத்திருந்தார்.

மூன்று ஆண்டுகள் சென்ற பின்னர் 1989ஆம் ஆண்டு ஜேர்மனியைப் பிரித்திருந்த பெர்லின் சுவர் எவ்வித இரத்த சிந்தலும் இல்லாமல் தகர்க்கப்பட்டு, இரு வேறு நாடுகளாய் பிரிந்திருந்த ஜேர்மனி ஒன்றானது. பெர்லின் சுவர் இடிந்தபோது அச்சுவற்றுக்குப்பின் அடக்கிவைக்கப்பட்டிருந்த பல போர்க் கருவிகளும் மறைந்தன. எவ்வித இரத்தம் சிந்தலும் இல்லாமல் நடைபெற்ற இந்த மாற்றத்திற்குக் காரணம் மக்களின் அமைதி வேட்கையே. இந்த வரலாற்று நிகழ்வுக்குப் பின்னும் உலகில் அமைதி நிரந்தரமாகவில்லை.

நாம் வாழும் உலகில் பெரும் போர்ச் சூழல் நம்மை பயமுறுத்தவில்லை என்றாலும், பல வகையிலும் மக்கள் தங்கள் சுதந்திரத்தையும், அமைதியையும் இழந்து வாழும் அவலத்தை நாம் தினமும் கானர்கின்றோம். சுதந்திரம் உண்டு என்ற தவறான எண்ணங்கள் விதைக்கப்படுகின்றது. இன்று நிலவும் வன்முறையை நாம் சிறிது ஆழமாக ஆய்வு செய்வது பயனளிக்கும்.

இன்றைய வன்முறை இரு வகைகளில் வெளிப்படுத்தப்படுகிறது. தீவிரவாதம் என்ற வடிவத்தில் நிலவும் வன்முறை ஒருவகை. தீவிரவாதம் பல நேரங்களில் மதங்களின் அடிப்படையில் எழுகின்றது. வன்முறையைத் தூண்டுவதென்பது எந்தவொரு மதத்தாலும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத உண்மை என்பதை 1986 ஆம் ஆண்டு அசிசி நகரில் கூடிய எல்லா மதத் தலைவர்களும் ஒரே குரலில் கூறினார்கள். இன்று நாம் மீண்டும் அதே உண்மையை உலகறியச் செய்கின்றோம்.

## ஜேர்மனியில் றொபின்சன் போல் அடிகளாரின் குணமாக்கும் வழிபாடு



திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி. போல் றொபின்சன் கடந்த செம்பரம்பர் மாதம் 9, 10 ஆகிய திகதிகளில் ஜேர்மன் நாட்டில் இறை தியானத்தை நடத்தினார்.

ஜேர்மன் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் விடுத்த அழைப்பின்பேரில் ஒபகவுசன், வூப்பெற்றால், பணித்தளங்களில் அவர் இந்த குணமாக்கும் வழிபாடுகளை நடாத்தினார்.

தற்போது உரோமையில் உயர் கல்வியை மேற்கொண்டிருக்கும் அடிகளார் ஜேர்மன் மொழியைக் கற்பதற்காக ஒன்றரை மாதங்கள் ஜேர்மனிக்கு வந்திருந்தபோதே இவ்வழிபாடுகளை நடாத்தினார். கத்தோலிக்க திருச்சபைக்கு புறம்பாக நடைபெறும் குணமாக்கல் வழிபாடுகளால் குழப்பமடைந்திருக்கும் கத்தோலிக்கருக்கு இவருடைய வழிபாடுகள் அவசியம் தேவை என்றும், இதில் பங்கேற்ற பலர் மனக்குழப்பங்கள் நீங்கி அமைதி பெற்றனர் என்றும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

## டிலாசால் அருட்சகோதரர்கள் புதிய அதிபர்களாக நியமனம்



அருட்சகோதரர்
அகஸ்ரின்



அருட்சகோதரர்
சந்தியோகு

டிலாசால் துறவற சபையைச் சார்ந்த மன்னார் மண்ணின் மைந்தர்களான அருட்சகோதரர் அகஸ்ரின் மன்/ புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் அதிபராகவும், அருட்சகோதரர் சந்தியோகு மன்/ ஆனாள் மத்திய மகாவித்தியாலயத்தின் (வங்காலை) அதிபராகவும் புதிய பணிப்பொறுப்புக்களை ஏற்றுள்ளனர். இவர்களின் கல்விப் பணி சிறக்க மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னா தனது மகிழ்ச்சி நிறைந்த வாழ்த்துக்களையும், செபங்களையும் தெரிவிக்கின்றது.

உயிலங்குளம் பங்கைச் சேர்ந்த அருட்சகோதரர் அகஸ்ரின் கடந்த மே மாதம் 2ஆம் திகதி தனது புதிய பணிப்பொறுப்பை ஏற்றுக்கொண்டார். உயிலங்குளம் பங்கு பறப்பாங்கண்டலைச் சேர்ந்த அருட்சகோதரர் சந்தியோகு அவர்கள் கடந்த ஒக்ரோபர் மாதம் 18ஆம் திகதி தனது புதிய பணிப்பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

## புனித டொண் பொஸ்கோவின் திருப்பண்டம் வருகை

### கொட்டும் மழையின் மத்தியிலும்

## புனித டொண் பொஸ்கோவைச் சந்திக்க வந்த மக்கள்! மன்னார் மறைமாவட்டம் விழாக்கோலம்!

புனித டொண் பொஸ்கோவினுடைய பிறப்பின் 200வது ஆண்டு (1815 - 2015) யூபிலி விழாவுக்கு ஆயத்தமாக உலகெங்கிலும் உள்ள சலேசிய துறவற சபையினர் பணி செய்யும் இடங்களுக்கு அவருடைய திருப்பண்டம் எடுத்துச் செல்லப்படுகிறது.

புனித டொண் பொஸ்கோவினுடைய வலது கரத்தை உள்ளடக்கிய அவருடைய திருவுருவச் சுருபம் கடந்த நவம்பர் மாதம் 25ஆம் திகதி மன்னார் மறைமாவட்டத்திற்கு கொண்டுவரப்பட்டு மக்களின் வணக்கத்திற்காக பல இடங்களில் வைக்கப்பட்டது. கொட்டும் மழையின் மத்தியிலும் புனித டொண் பொஸ்கோவினுடைய திருப்பண்டபத்தை தரிசித்து வணங்க பல மக்கள் வருகை தந்தனர். (தொடர்ச்சி 15ஆம் பக்கம்)



## 2010ம் ஆண்டு உலக மறைபரப்பு தின நிதி சேகரிப்பு மன்னார் மறைமாவட்டம் முதலிடத்தில

| மறைமாவட்டம் | - தொகை |
|---|---|
| மன்னார் | 2,433,200.00 |
| கொழும்பு | 2,113,825.50 |
| சிலாபம் | 545,670.50 |
| கண்டி | 337,225.00 |
| யாழ்ப்பாணம் | 242,125.00 |
| குருநாகல் | 228,717.00 |
| திருமலை/ மட்டுநகர் | 154,944.00 |
| இரத்தினபுரி | 80,322.00 |
| அநுராதபுரம் | 67,000.00 |
| பதுளை | 50,185.00 |
| காலி | 46,080.00 |
| மொத்தம் | 6,299,294.00 |

ஒவ்வோர் ஆண்டும் உலக மறைபரப்பு ஞாயிறு தின நிதி சேகரிப்பு முயற்சிகள் மன்னார் மறைமாவட்ட பங்குகளில் உற்சாகமாக மேற்கொள்ளப்படுகின்றன.

மறைபரப்புச் சந்தை போன்ற பல முயற்சிகளை மேற்கொண்டு மறைபரப்புப் பணிக்கு மக்கள் தாராளமாக தம் பங்களிப்பை வழங்கவேண்டுமென மன்னார் ஆயர் அவர்கள் விடுக்கும் வேண்டுகோளை ஏற்று பங்குத்தந்தையர்களும், பங்கு மக்களும் பலவித முயற்சிகளை மேற்கொள்கின்றனர். இதனால் ஒவ்வோர் ஆண்டும் கணிசமான தொகையை மன்னார் மறைமாவட்டம் சேகரிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த வருடமும் (2011) இலங்கை மறைமாவட்டங்களில் மன்னார் மறைமாவட்டமே அதிகூடிய தொகையை சேகரித்ததாக மன்னார் ஆயர் இல்ல வட்டாரங்கள் தெரிவித்தன.

## யாழ் மறைமாவட்டக் குரு சகாயதாசன் அடிகளார் இறைபதம்

யாழ் மறைமாவட்டக் குருவும், பண்டியந்தாழ்வு புனித அன்னாள் ஆலயப் பங்குத் தந்தையுமாகிய அருட்பணி. அ. சகாயதாசன் அடிகளார் கடந்த கார்த்திகை 7ஆம் திகதி காலை யாழ் போதனா வைத்தியசாலையில் காலமானார்.

அடிகளார் பண்டத்தரிப்பை பிறப்பிடமாகக் கொண்ட காலம் சென்ற அந்திரேஸ் பிள்ளை, திரேசம்மா தம்பதியினரின் அன்புப் புதல்வராவார். இவர் மயிலிட்டி, யாழ். பேராலயம், மண்டைதீவு திருநெல்வேலி, ஆனைக்கோட்டை, உருத்திரபுரம், பண்டியந்தாழ்வு போன்ற பங்குகளில் பங்குத்தந்தையாகப் பணியாற்றினார்.

அவுஸ்ரேலியாவில் உயர் கல்வியைக் கற்ற இவர் இரு முதுமாணிப் பட்டங்களைப் பெற்றவர். இவர் யாழ் கொழும்புத்துறை புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியிலும், பொதுநிலை உருவாக்கல் நிலையங்களிலும் கல்விப் பணியில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மன்னார் மண்ணின் புதல்வியரான கார்மேல் அருட்சகோதரிகளின் வெள்ளிவிழா



அருட்சகோதரி
றொசாறியோ (அ.கா)



அருட்சகோதரி
மரிய ஜீவந்தி (அ.கா)

அப்போஸ்தலிக்க கார்மேல் கன்னியர் சபையைச் சேர்ந்த அருட்சகோதரி றொசாறியோ மற்றும் அருட்சகோதரி மரிய ஜீவந்தி ஆகியோர் இவ்வாண்டு தமது துறவற வாழ்வில் 25 வருடங்களை நிறைவுசெய்து வெள்ளிவிழாவைக் கொண்டாடினார்கள். இவர்கள் இருவருக்கும் மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னா செபம் நிறைந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்து மகிழ்கிறது.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## துயர் பகிர்கின்றோம்!

அருட்பணியாளர் அ. ஜெயபாலன் குரூஸ் அடிகளாரின் அன்புத்தந்தை திரு. நீக்கிலான் சூசையப்பு குரூஸ் (பேசாலை) அவர்கள் கடந்த நவம்பர் 6ம் திகதி இறைபதமடைந்தார். அன்னாரின் ஆன்ம சாந்திக்காக வேண்டுவதோடு இவரின் பிரிவால் துயருறும் இவருடைய பிள்ளைகள் மற்றும் உற்றார், உறவினர் அனைவருக்கும் மன்னார் மறைமாவட்டம் சார்பான ஆழ்ந்த அனுதாபங்களை மன்னா தெரிவித்துக்கொள்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வு தரும் வார்த்தை

# பாவத்தின் குணங்கள்

## விவிலியப் பின்னணியில் ஓர் பார்வை!

திருமதி. என். லோஜி, நூறு வீட்டுத்திட்டம், மன்னார்.

### இறைமுகத்தை மறைக்கும்

"உங்கள் பாவங்களே அவர் செவிசாய்க்காதவாறு அவரது முகத்தை உங்களுக்கு மறைத்துள்ளன" (எசா.59:2). அனைத்தையும் கடந்த பேரன்புகொண்ட, மன்னித்து மனதுருகி நிற்கும் இறைமுகத்தையே பாவங்கள் மறைத்துவிடுகிறது.

### உனக்கெதிராக சாட்சி சொல்லும்

"உம் திருமுன் எங்கள் குற்றங்கள் பெருகியுள்ளன. எங்கள் பாவங்கள் எங்களுக்கு எதிராகச் சான்று சொல்கின்றன. எங்கள் குற்றங்கள் எங்களோடுதான் இருக்கின்றன. எங்கள் தீச் செயல்களை நாங்களே அறிவோம்" (எசா. 59:12). எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தாலும் எத்தனை மனிதர்கள் நமக்கெதிராக புறப்பட்டாலும், நமக்கு எதிராக நம் பாவமே சாட்சி சொல்லும். பாவம் எப்போதும் நமக்கு எதிராகவே நிற்கும்.

### நன்மைகளை வரவிடாது

"உங்கள் குற்றங்கள் இவற்றை எல்லாம் தடுத்தன. உங்கள் பாவங்களே உங்களுக்கு நன்மை வராமலிருக்கச் செய்தன" (எரே. 5 : 25). ஆயிரம் நன்மைகளை ஆண்டவர் வைத்துள்ளார். ஆனால் அது வராமல் இருப்பதும் அல்லது வேண்டும்போது கிடைக்காமலிருப்பதும் நம் பாவங்களாலேயே என்பதை உணர்ந்துகொள்வோம்.

"யூதாவின் பாவம் இரும்பு எழுத்தாணியாலும் வைர நுனியாலும் எழுதப்பட்டுள்ளது. அது அவர்கள் இதயப் பலகையிலும் பலி பீடக்கொம்புகளிலும் பொறிக்கப்பட்டுள்ளது" (எரே 17:1).

பொறிக்கப்பட்ட எழுத்துக்களை அழிக்கமுடியாததுபோல நம் பாவங்களும் பதிவுகளை ஏற்படுத்தி நமக்குள் பொறிக்கப்படும். இந்தப் பாவங்களை இயேசுவின் இரத்தமே அழிக்க முடியும்.

### சேமித்து வைக்கும்

"எப்ராயிமின் தீச்செயல் சேர்த்துவைக்கப்பட்டுள்ளது. அவனுடைய பாவம் சேமித்து வைக்கப்பட்டுள்ளது" (ஓசே 13:12).. நம் பாவங்களுக்கு கிடங்குகள் உண்டு என்பதை புரிந்துகொண்டு இயேசுவின் வல்லமையால் அதைக் காலிசெய்ய*உள்ளங்களைத் திறந்து மனம் மாறுவோம்.

### கொடியது

"உங்கள் குற்றங்கள் எவ்வளவு மிகுதியானவை என்றும் உங்கள் பாவங்கள் எத்துணை கொடியவை என்றும் நான் அறிவேன்" (ஆமோ. 5:12). உலகில் கொடியது விஷம். அதைவிடக் கொடியது மனிதனிடம் இருக்கும் பாவமே. அது மிக மிகக் கொடியது. இதை அழிக்க யாராலும் முடியாது இயேசு ஒருவரைத் தவிர. ஆகவே சிலுவைதான் நமக்கு மீட்பு.

### தண்டனைக்கு நம்மை ஆளாக்கும்

"ஆதலால் நான் உங்களை உங்கள் பாவங்களுக்காகத் தண்டிக்கத் தொடங்கியுள்ளேன். நீங்கள் பாழாய்ப் போவீர்கள்." (மீகா 6:13). இறைவன் தண்டித்தால் எதுவும் நம்மால் செய்ய முடியாது. இந்தத் தண்டனையிலிருந்து தப்பவைக்க இயேசு தம்மையே பாழாக்கி நமக்கு நிறைவாழ்வு அளித்தார்.

### நம்மைத் தனக்கு அடிமையாக்கும்

"அதற்கு இயேசு, 'பாவம் செய்யும் எவரும் பாவத்திற்கு அடிமை' என உறுதியாக உங்களுக்குச் சொல்கின்றேன்" (யோ 8:34). நாம் பாவத்துக்கு அடிமையானால் அதைவிட மோசமான அடிமைத்தனம் உலகிலேயே இல்லை.

### நம்மை மூடனாக்கும்

"பாவக் கழுவாய் தேடுவதை மூடர் ஏளனம் செய்வர். மூடரின் இல்லத்தில் குற்றப்பழி தங்கும்" (நீதிமொழி. 14:9). வாசற்படியில் படுத்த பாவம் நம் வீட்டில் வந்து தங்கி நம்மை மூடனாக்கி நம்மோடு குற்றப்பழிகளையும் தங்கவைக்கின்றது. அங்கே இறைவன் இருக்க இயலாது.

### நோய்களைக் கொடுக்கும்


"இயேசு அவர்களுடைய நம்பிக்கையைக் கண்டு முடக்குவாதமுற்றவரிடம் 'மகனே உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன' என்றார்" (மாற் 2:5). நம் பாவங்களே நமக்கு நோய்களைத் தருகின்றது. நோய்களுக்கு பல காரணங்கள் இருந்தாலும், பாவமும் நோய்களுக்கு காரணம் என்பதை அறிந்து திருந்துவோம்.

### அலகையைச் சார்ந்தவராக்குகின்றது.

"பாவம் செய்து வருகின்றவர் அலகையைச் சார்ந்தவர். ஏனெனில் தொடக்கத்திலிருந்து அலகை பாவம் செய்துவருகிறது. ஆகவே அலகையின் செயல்களைத் தொலைக்கவே இறைமகன் தோன்றினார்" (1யோவா 3:8). பாவத்தை தொடங்கி வைத்ததும், தொடர்ந்து அதைச் செய்து மனிதனைப் பாவ வலையில் விழவைப்பதும் அலகையே.

### நெறிகெட்டவராக்கும்

"உங்களை எனக்குத் தெரியவே தெரியாது. நெறிகேடாகச் செயல்படுவோரே என்னைவிட்டு அகன்று போங்கள் என



வெளிப்படையாகவே அறிவிப்பேன்" (மத் 7:23). இறைவார்த்தைக்கு கீழ்ப்படியாமல் நம்மை நெறிகேடாகச் செயல்படச் செய்து மோட்சத்துக்கு வெளியே தள்ளி நரகத்துக்குச் செல்லவைப்பது நம் பாவமே.

இத்தனை குணங்களைத் தன்னகத்தே கொண்டு பாவம் நம்மை ஆட்கொண்டு சிதறச்செய்து இறைவனிடமிருந்து நம்மைப் பிரிக்கிறது. நம்மை மீட்க வந்த இயேசுவின் விலைமதிப்பில்லா இரத்தம் இந்த மண்ணில் விழுந்துதான், கடவுளுக்கு நம்மை பிரியமுள்ளவர்களாக்கியது. ஆகவே பாவத்தின் குணத்தை அறிந்துகொண்ட நாம் அதை விட்டுவிடுவோம். உறுதியோடு மனம் திரும்பி இயேசுவைக் காணுவோம். எம் புதுவாழ்வு உலகையே அசைக்கும் உன்னத வாழ்வாகட்டும்.

## பாவத்தின் சில பாதைகள்

**மீறுதல்** : இறைவனின் இனிய நியமங்களை மீறி நம்மை வேறு பாதையில் நடத்தும். நியமங்களின் வரம்பினை மீறி வாழத்தூண்டும். "என் பாவம் அற்றுப்போகும்படி என்னைத் தூய்மைப்படுத்தியருளும். உமது அளவற்ற இரக்கத்திற்கேற்ப என் குற்றங்களைத் துடைத்தருளும்"

**ஊனியல்பு** : "நாம் நமது ஊனியல்பின்படி வாழ்ந்தபோது சட்டத்தை ஒரு வாய்ப்பாக்கிக்கொண்டு, பாவ இச்சைகள் நம்முடைய உறுப்புக்களில் செயலாற்றின, அதனால் விளைந்த பயன் சாவு" (உரோ 7:5).

**கசப்பு** : "நீ கசப்பு நிறைந்த உள்ளத்தினனாய் தீவினைக்கு அடிமையாயிருப்பதை நான் காண்கின்றேன்" (தி.பணி 8:23). உள்ளத்தை கசப்பான பாதைக்குக் கொண்டுவந்து உன்னை கசக்கிப் பிழிந்து தீவினையால் நிரப்பி அமைதிப் பாதையை கெடுக்கிறது.

**இன்பம்** : "பாவத்தில் சிறிது காலம் இன்புறுவதைவிட கடவுளுடைய மக்களோடு சேர்ந்து துன்புறுவதையே அவர் தேர்ந்து கொண்டார்" (எபி 11:25). சுகபோகங்கள், வசதிகள் மனிதனை மயக்கும் இக்காலத்தில் இவ்வார்த்தையை புரிவது கடினம். துன்பங்கள் வந்தாலும் நமக்கு எதிர்காலத்தில் வரப்போகும் நித்திய இன்பம் உண்டு என்பதை உணர்ந்து வாழ்வோம்.

**குறிக்கோள் தவறுதல்** : "தீச்செயல் அனைத்துமே பாவம். ஆனால் எல்லாப் பாவமுமே சாவுக்குரியவை அல்ல (1 யோவா 5:17).

**ஒழுங்கை மீறுவோர்** : "திருச்சட்டம் நேர்மையானவர்களுக்காக இயற்றப்படவில்லை. மாறாக ஒழுங்குமீறுவோர், கட்டுப்பாட்டுக்கு அடங்காதோர், இறைபற்றில்லாதோர், பாவிகள், தூய்மையற்றோர், உலகப்போக்கை பின்பற்றுவோர், தந்தையைக் கொல்வோர், பிற மனிதனைக் கொல்வோர், பரத்தமையில் ஈடுபடுவோர், ஒரு பால்புணர்ச்சி கொள்வோர், ஆட்களை கடத்தி விற்போர், பொய்யர், பொய்யாணையிடுவோர் மற்றும் நலம் தரும் போதனையை எதிர்ப்போர் ஆகியோருக்காகவே திருச்சட்டம் இயற்றப்பட்டது." (1 தீமொ 1:9-10).

ஆவிக்குரிய புனித வாழ்வின் ஒழுங்கை மீறி கடமைகளைச் செய்யாது மக்கள் நடுவில் ஒழுங்கின்மையை நிலைநாட்ட பாடுபடுதல். செய்யத் தகாதவற்றை செய்துகொண்டு செய்ய வேண்டியவைகளை செய்யாமல் விடுதல். அக்கிரமத்தை விதைத்து அடங்காமல் திரிந்து ஆண்டவர் பாதையை அழித்தல்.

**நம்பிக்கைகொள்ளாதிருத்தல்** : அன்பர்களே, நம்பிக்கைகொள்ளாத இத்தகைய தீய உள்ளம் வாழும் கடவுளைவிட்டு விலகும். "இத்தகைய தீய உள்ளம் உங்களுள் எவருக்கும் இல்லாதபடி பார்த்துக்கொள்ளுங்கள்" (எபி 3:12). அவநம்பிக்கை கொண்ட கேடுகெட்ட உள்ளத்தை கொள்ளாதிருப்போம்.

**ஏமாற்றும்** : உங்களுள் எவரும் பாவத்தால் ஏமாற்றப்பட்டு கடின உள்ளத்தினர் ஆகாதவாறு ஒவ்வொரு நாளும் 'இன்றே' என எண்ணி நாள்தோறும் ஒருவருக்கொருவர் அறிவுரை கூறுங்கள். (எபி 3:13). ஏமாற்றும் பாதையைக் கொண்டது பாவம். இந்தப் பாதையில் நாம் சென்றால் ஏமாற்றமடைவோம். நாம் ஏமாந்து போகாதபடி நம் உள்ளத்தை இயேசுவின் பாதையில் இட்டுச்செல்வோம்.


## இறையன்புக்கெதிரான பாவங்கள்

"நானே உன் கடவுளாகிய ஆண்டவர். என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தல் ஆகாது. மேலே விண்வெளியில் கீழே மண்ணுலகில், பூமிக்கடியே நீர்த்திரளில் உள்ள யாதொன்றின் சிலையையோ ஓவியத்தையோ நீ உருவாக்க வேண்டாம். நீ அவைகளை வழிபடவோ அவற்றிற்குப் பணிவிடை புரியவோ வேண்டாம். ஏனெனில் உன் கடவுளும் ஆண்டவருமாகிய நான் இதை சகித்துக்கொள்ளமாட்டேன் (வி.ப 20: 2, 5).

கடவுளை வெறுத்தல் (உரோ. 1:30).
ஆண்டவரை தேடாதிருப்பது (செப். 1:6).
இறைப்பற்றில்லாதிருத்தல் (1 தீமொ. 1:9).
கடவுளை விரும்புவதைவிட சிற்றின்பத்தை அதிகம் விரும்புதல் (2 தீமொ 3:2-4).
இறைபற்றுக்கும் போதனைக்கும் ஒத்துப்போகாமலிருத்தல் (1 தீமொ 6:3).
ஆண்டவருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தல், ஆண்டவரை வஞ்சித்தல், கடவுளை பின்பற்றாமல் அகன்றுபோதல் (எசா 59:13).
சிலைவழிபாடான பேராசை (கொலோ 3:5).
பத்தில் ஒரு பங்கு கொடுக்காமல் கடவுளைக் கொள்ளையடித்தல் (மலா 3:8-9).
எப்போதும் ஆணையிடுதல், அடிக்கடி ஆணையிடுதல், கடவுளின் பெயரால் ஆணையிடுதல் (சீ.ஞா 23:10-11).
பொய்யாணையிடுதல்.
தகுதியற்ற நிலையில் நற்கருணை உட்கொள்ளுதல் (1 கொரி 11:27-29).
பெற்றுக்கொண்ட முறைப்படி ஒழுகாமல் சோம்பித்திரிதல் (2 தெச 3:6). மாற்றுக்கொள்கையைக் கற்பித்தல், இறைவார்த்தைப் போதனைக்கு ஒத்துப் போகாதிருத்தல் (1தீமொ 6:3).

# செபமாலைப் பக்தி

இ. பற்றீசியா பீரிஸ், 8ம் வட். வங்காலை.



செபமாலையைத் தினமும் செபித்து தியானிப்பவர்களுக்கு பரிசுத்த அன்னை கன்னிமரியாள் கொடுத்த வாக்குறுதிகள் பின்வருமாறு.

"செபமாலைப் பக்தி நித்திய வாழ்வின் முன் அறிகுறி. செபமாலையைத் தொடர்ந்து செபிப்பதன் மூலம் எனக்கு ஊழியம் செய்பவர்கள் சிறப்பான அருளைப் பெறுவார்கள். செபமாலை நரகத்திற்கு எதிரான வலிமை வாய்ந்த கவசம். இது தீமைகளை அழித்துப் பாவங்களைக் குறைத்து தப்பறைகளை முறியடிக்கின்றது.

தேவ இரகசியங்களைத் தியானித்து பக்தி உருக்கத்துடன் செபமாலையை செபிப்பவன் துர்ப்பாக்கியத்தால் மேற்கொள்ளப்படமாட்டான். இறைவன் அவனைத் தண்டிக்கமாட்டார். அகால மரணத்திற்கு ஆளாக மாட்டான். அருள் நிலையில் வாழ்ந்து விண்ணக வாழ்விற்கு தகுதிபெறுவான்.

செபமாலை செபித்து தன்னையே என்னிடம் அர்ப்பணிக்கும் ஆன்மா ஒருபோதும் அழிவு காணாது. செபமாலையைச் செபிப்போருக்கு தனிப்பட்ட பாதுகாப்பையும் மிகப்பெரிய அருள் வரங்களையும் வாக்களிக்கின்றேன். செபமாலையின்மீது உண்மையான பக்திகொண்டிருப்பவன் திருச்சபையின் திருவருட்சாதனங்களைப் பெறாமல் சாகான். செபமாலையைப் பிரமாணிக்கத்துடன் செபித்து வருபவர் இவ்வுலக வாழ்விலும் மரண வேளையிலும் இறைவனின் ஒளியையும் அவரது திருவருளின் பெருக்கத்தையும் அடைவர்.

மரண வேளையில் விண்ணகத்தில் புனிதர் அனுபவிக்கும் பேரின்பத்திலும் பங்கு பெறுவர். செபமாலையைப் பிரமாணிக்கத்துடன் செபிக்கும் ஆன்மாக்கள் விண்ணகத்தில் சிறப்பான மகிமையை அடைவர்.

செபமாலைப் பக்தியைப் பரப்புகிறவர்கள் என்னிடமிருந்து தங்கள் தேவைகளில் உதவி பெற்றுக்கொள்வார்கள். செபமாலை செபித்து அதன் வழியாக நீங்கள் கேட்பதெல்லாம் பெற்றுக் கொள்வீர்கள். செபமாலையைச் செபிப்பவர்கள் அனைவரும் எனது மக்கள். எனது ஏகமகன் இயேசுக் கிறிஸ்துவின் சகோதரர்கள்,

செபமாலைப் பக்தியைப் பரப்புகின்றவர்களுக்கு அவர்கள் வாழ்நாளிலும் மரண வேளையிலும் வாகை சூடுவேன். நீதிமன்றம் முழுவதும் அவர்களுக்காகப் பரிந்து பேச எனது தெய்வ மகனிடமிருந்து உத்தரவு பெற்றுள்ளேன்.

செபமாலையின்மீது பக்தியுள்ள ஆன்மாக்களை உத்தரிப்பு ஸ்தல வேதனையில் நின்று மீட்பேன். செபிக்கும் வழிகளில் மிகச் சிறந்தது செபமாலை. செபமாலை சாத்தானைத் தாக்கும் சாட்டை, செபமாலை சிறந்த ஆயுதம், செபமாலை செபிக்கும் குடும்பம் செழிக்கும் குடும்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

### "மகிழ்வோடு மறைக்கல்வியை அறிவோம் அனைவரும்"

# மன்னார் மறைமாவட்ட
# மேய்ப்புப்பணித் திட்டமிடல் மாநாடு 2012

- மறைக்கல்வி ஆண்டை முன்னிட்டு கருத்துப்பரிமாற்றம் இடம்பெற்றன!
- மறைக்கல்வி தொடர்பான ஆக்கபூர்வமான ஆலோசனைகள் பெறப்பட்டன!

மன்னார் மறைமாவட்ட வருடாந்த மேய்ப்புப்பணித் திட்டமிடல் மாநாடு கடந்த நவம்பர் மாதம் 18, 19ஆம் திகதிகளில் மன்னார் புனித செபஸ்தியார் பேராலய கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. அடுத்த வருடம் (2012) மூன்று தமிழ் மறைமாவட்டங்களிலும் மறைக்கல்வி ஆண்டாகக் கடைப்பிடிக்கப்பட இருப்பதால் இந்த மாநாடு மறைக்கல்வியை மையப்படுத்தியதாக இடம்பெற்றது.

18ஆம் திகதி மாலை வழிபாடு, கொடியேற்றல், மங்கள விளக்கேற்றல் போன்ற ஆரம்ப நிகழ்வுகளை அடுத்து வரவேற்புரையை மேய்ப்புப்பணித் திட்டமிடல் குழு உறுப்பினர் தமிழ் நேசன் அடிகளார் நிகழ்த்தினார். மறைக்கல்வி ஆண்டு பற்றிய அறிமுக உரையை மறைக்கல்வி நிலைய இயக்குனரும், திட்டடமிடல் குழு உறுப்பினருமான அருட்பணி. எவ். எக்ஸ். றெஜினோல்ட் நிகழ்த்தினார். ஆசியுரையை மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் வழங்கினார். நிறைவுறும் இளைஞர் ஆண்டின் பங்கு மீளாய்வு அறிக்கையை அன்பிய இயக்குனரும், மேய்ப்புப்பணி திட்டமிடல் குழுவின் செயலாளருமான அருட்பணி எஸ். டக்ளஸ் மில்ரன் லோகு அவர்கள் சமர்ப்பித்தார். நிறைவுறும் இளைஞர் ஆண்டின் ஆணைக்குழுக்களின் அறிக்கைத் தொகுப்பை குருமுதல்வர் ஏ. விக்ரர் சோசை அடிகளார் வழங்கினார்.

அடுத்தநாள் 20ஆம் திகதி காலைச்செபம், திருப்பலி, காலை உணவைத் தொடர்ந்து 8.45 மணிக்கு மாநாட்டு உரை இடம்பெற்றது. "விசுவாசப் பயிற்சி, வளர்ச்சி, முதிர்ச்சி நோக்கிய பயணத்தில் மறைக்கல்வியின் பல்பரிமாணங்கள்" என்ற தலைப்பில் மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு ஆணைக்குழு இயக்குனரும், மன்னா பத்திரிகை ஆசிரியருமான தமிழ் நேசன் அடிகளார் உரை நிகழ்த்தினார்.

உரையைத் தொடர்ந்து கருத்துப் பரிமாற்றமும் குழு ஆய்வும் இடம்பெற்றன. குழு ஆய்வின்பின் குழுவில் கலந்துரையாடிய விடயங்கள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டன. அதைத்தொடர்ந்து பொது அமர்வு இடம்பெற்றது. இதன்போது பலவித கருத்துப்பரிமாற்றங்கள் இடம்பெற்றன. நன்றியுரையுடன் மாநாடு நிறைவுபெற்றது.

மறைமாவட்டத்தில் பணியாற்றும் அனைத்துக் குருக்களும், துறவற சபைகளின் பிரதிநிதிகளும், பங்குப் பிரதிநிதிகளான பொதுநிலையினரும், சிறப்பு வல்லுனர்களுமாக ஏறக்குறைய 250ற்கும் அதிகமானவர்கள் இந்த இரு நாள் மாநாட்டில் கலந்துகொண்டனர். மன்னார் ஆயரின் வழிநடத்தலில், குருமுதல்வரின் தலைமையில் மாநாட்டுக் குழுவினரின் ஒத்துழைப்போடு மாநாட்டின் செயலர் டக்ளஸ் அடிகளார் இம்மாநாட்டிற்கான ஏற்பாடுகளை சிறப்பாக மேற்கொண்டிருந்தார்.










## மணிவிழாச் சேவை நிறைவில் மன்னார் மணி



கவிஞரும், எழுத்தாளரும், பேச்சாளருமாக விளங்கும் 'மன்னார் மணி' என அறியப்பட்ட வஞ்சியன்குளம் கிராமத்தைச் சேர்ந்த திரு. அலஸ் மரியதாஸ் அவர்கள் தனது நாற்பது வருடகால அரச சேவையிலிருந்து அண்மையில் ஓய்வுபெற்றுள்ளார்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## அருட்பணி மாக்கஸ் இந்தியாவில் உயர் கல்வி



மன்னார் மறை மாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் எஸ். மாக்கஸ் அடிகளார் தனது உயர் கல்வியை மேற்கொள்வதற்காக இந்தியா சென்றுள்ளார்.

இந்தியாவின் சென்னையில் உள்ள பிரசித்திபெற்ற லோயலாக் கல்லூரியில் ஊடகக் கலைகள் துறையில் முதுமாணிப் பட்ட கற்கைநெறியை இவர் மேற்கொண்டுள்ளார்.

தனது உயர் கல்வியை சிறப்பாக மேற்கொள்ள மன்னா தனது நல்வாழ்த்துக்களையும், செபங்களையும் மாக்கஸ் அடிகளாருக்கு தெரிவித்து மகிழ்கிறது.

### ம.து.ம. சங்கத்தின் ஏற்பாட்டில்
## ஆதரவற்ற சிறுவருக்கான ஒன்றுகூடல்
## சங்கத்தின் செயற்பாடுகள் விபரிப்பு

மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கம் (ம.து.ம.சங்கம்) தனது வருடாந்த ஆதரவற்ற சிறுவர்களுக்கான ஒன்றுகூடலை, கடந்த 30.10.2011 அன்று மன்னார் Y. M. C. A மண்டபத்தில் வெகு விமரிசையாக நடாத்தியது. சுவிஸ்லாந்து தேசத்தில் இருந்து கொடை வள்ளலாகிய திரு. எஸ். மௌஸ் அவர்கள் இவ்விழாவில் கலந்துகொண்டமை சிறப்பு அம்சமாகும். இவர் ஒவ்வொரு வருட இறுதியிலும் மன்னாருக்கு வருகை தந்து சிறார்களின் கல்வி முன்னேற்றம், ஆக்க முயற்ச்சிகளை நேரில் கண்டு பல வெகுமதிகளை கொடுத்துச் செல்வதுண்டு.

இவ்விழாவிற்கு தலைமை வகித்த மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கத் தலைவர் வண பிதா சேவியர் குரூஸ் அடிகளாரும், செயலாளர் திரு. சிங்கிளாயர் பீற்றர் அவர்களும் ம. து. ம. ச. வின் சேவைகளை விளக்கிக் கூறினர்.

MARR

அருட்திரு. சேவியர் குரூஸ் அடிகளார் உரையாற்றுகையில்,

இவ்வாண்டில் 69 இற்கு மேற்பட்ட தாய், தந்தையர்களை இழந்த மூவின சிறார்களுக்கு மாதாந்த கல்வித்தொகை வழங்கப்படுவதாகவும், இவர்கள் இந்நிதியைக்கொண்டு தமது பாடசாலை உபகரணங்களுக்கும், ரியூசன் செலவிற்கும், துவிச்சக்கர வண்டி கொள்வனவிற்கும், கணனிப் பயிற்சி எடுப்பதற்கும் செலவிடுவதாகக் கூறினார்.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

### இலுப்பைக்குளம் பங்கில்
## மாபெரும் செபமாலைப் பேரணி

இலுப்பைக்குளம் பங்கு இளைஞர் ஒன்றியத்தினரால் பங்கின் அனைத்து மக்களையும் ஒன்றுசேர்த்து செபமாலைப் பேரணி நடாத்தப்பட்டது. இச்செபமாலைப் பேரணியானது வீரபுரம் புனித வேளாங்கன்னி ஆலயத்திலிருந்து ஆரம்பமாகியது.

பாடல்கள், செபங்கள் மூலம் பவனியாக வந்து நேரியகுளம் திரு இருதய ஆண்டவர் ஆலயத்தில் தரித்து நின்றது. அங்கு செப வழிபாடு இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து ஆராதனை, செபங்கள் மூலம் பவனியாக எடுத்துவரப்பட்டு இலுப்பைக்குளம் புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் வைத்து இறுதி நன்றி செப வழிபாடு செய்யப்பட்டு அன்னையின் ஆசீருடன் இச்செபமாலைப்பேரணி இனிதே நிறைவுபெற்றது. இந்நிகழ்வை இலுப்பைக்குளம் பங்குத் தந்தை அருட்பணியாளர் ஆரோக்கியம் அவர்கள் சிறப்பாக ஒழுங்குபடுத்தியிருந்தார்.

*- இலுப்பைக்குளம் இளைஞர் ஒன்றிய நிர்வாகம்.*



இலுப்பைக்குளம் பங்குத் தந்தை அருட்பணி. ஆரோக்கியம்





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இளைஞர் மொழிவு

இளைஞர் ஆண்டு சிறப்புக் கட்டுரை

## உன்னுள் உன்னை உற்றுப் பார்...!

அ. ஜஸ்மின் ஷறோன், ஆவணம், நானாட்டான்.

"தேடல் உள்ள உயிர்களுக்கே தினமும் பசியிருக்கும்; தேடல் என்பது உள்ளவரை வாழ்வில் ருசியிருக்கும்!" என்ற திரையிசைப் பாடல் எம் எல்லோர் மனங்களையும் தொட்டுச் செல்கின்றது. அந்த வரிகளை சற்று ஆழமாகச் சிந்தித்தால் நாம் எதைத் தேடவேண்டும் என்ற கேள்வி எழுகின்றது. எம்மையே நாம் என்றாவது தேடிப்பார்த்தோமா? எம்மைப்பற்றி நாம் சிந்தித்தோமா? நான் யார்? எப்படிப்பட்டவன் (ள்)? எனக்குள் இருக்கும் திறமைகள் எவை? எனது நல்ல, தீய குணாதிசயங்கள் எவை? ஏனையோர் என்னை எவ்வாறு பார்க்கின்றார்கள்? அடுத்தவனை திருத்த முயற்சிக்கின்றேன், நான் திருந்திவிட்டேனா? என்றெல்லாம் சிந்தித்துப் பார்ப்பது அவசியமாகிறது.

"உன் கண்ணில் இருக்கும் துரும்பை எடுத்துவிட்டு அடுத்தவன் கண்ணில் இருக்கும் துரும்பை எடு!" என்கிறது திருவிவிலியம். உனது கண்ணில் உள்ள துரும்பு யாது? கெட்ட நடத்தை, கெட்ட செயற்பாடு, கெட்ட சிந்தனைகள் இவ்வாறான தீய செயல்களை எடுத்துவிட்டால் தான் நாம் அடுத்தவனைத் திருத்த முடியும். அப்படித் திருத்தவும் நமக்கு உரிமை கிடைக்கும். அப்படி இல்லை எனில் மற்றவர்முன் தலைகுனிய வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆழாகநேரிடும்.

மனிதன் இன்றுவரை ஓர் விசித்திரமான பிறவியாகவே இருக்கின்றான். நவநாகரீகம் நிறைந்த இன்றைய உலகில் எது எதற்கோவெல்லாம் ஆராய்ச்சி செய்யும் மனிதன், "நான் யார்?" என்று ஒவ்வொருவரும் கேட்கும் கேள்விக்கு இன்றுவரை விடை கண்டுபிடிக்க முடியவில்லை என்பது விசித்திரமாகவே உள்ளது.

அடுத்தவனை திருத்த முயற்சிப்பது என்பது மிகவும் சுலபமான விடயம். ஆனால் நான் யார்? என்று நம்மை நாமே கேட்டு எம்மைத் திருத்த முயற்சிப்பது மிக மிகக் கடினமான செயல்தான். என்றாலும் ஓரளவாவது எம்மைக் கட்டுப்படுத்தி இந்தச் சுய ஆய்வை நாம் மேற்கொள்ள வேண்டும். "தேடித் தேடி தேடும் மனது தொலைகிறதே" என்பதுபோல எமது தேடலில் சலிப்பின்றி தேடினோமேயானால் நம்மை நாம் கண்டுகொள்வோம்.

ஒருமுறை நம் ஆண்டவர் பூமியில் உள்ள மனிதரை பார்த்துவிட்டு வருவோம் என நினைத்து பூமிக்கு வந்தார். அங்கு வந்த ஆண்டவரை அடையாளம் கண்டுகொண்ட பலர் அவரிடம் வந்து அதைத் தா, இதைத் தா என்று கேட்டுக் கேட்டு அவரைத் தொந்தரவு செய்யத் தொடங்கினார்கள். என்ன செய்வதென்று தெரியாமல் எல்லா இடத்திற்கும் ஆண்டவர் ஓடினார். ஓடி ஒழிந்துகொள்ள முயற்சி செய்தார். நகரம், கிராமம், கடைத்தெரு இப்படியாக ஓட அங்கெல்லாம் வந்து மக்கள் அவரைத் தொந்தரவு செய்தனர். இதைப் பார்த்த கடவுள் சற்று நிதானமாக நின்று சிந்திக்க ஆரம்பித்தார். "மனிதன் தன்னைப்பற்றி தானே சிந்திப்பதில்லை. வெளி உலகிலே, அடுத்தவனிலே எப்போதும் கண்ணும் கருத்துமாக இருக்கின்றான். எனவே அவனுக்குள் போய் ஒழிந்துகொண்டால் அவன் என்னைக் கண்டுபிடிக்கவே மாட்டான்." என எண்ணியவாறு அவனுடைய மனதில் போய் ஒழிந்துகொண்டார்.

இக்கதை ஓர் நகைச்சுவை உணர்வுடன் தென்பட்டாலும், இக்கதையை ஆழமாகச் சிந்தித்தால் நமது உண்மை நிலை தெரியவரும். அடுத்தவரின் குறை, குற்றங்களிலே எம் கவனத்தைச் செலுத்தும் நாம் எம்மையே உற்றுநோக்கினால், நமது நிலமையைப் புரிந்துகொள்வோம்.

உண்மைக்கு மாறான நமது மனக்குறைகளையும், எமது தீய செயற்பாடுகளையும் கண்டுணர்ந்து அவற்றைக் களைந்துவிட்டு எம்முள் குடிகொண்டிருக்கும் இறைவனை கண்டுகொள்வோம்.



"உன்னை அறிந்தால்! நீ உன்னை அறிந்தால்! உலகத்தில் போராடலாம்!" என்ற சினிமாப்பாடல் வரி நாம் அனைவரும் அறிந்ததே. நான் யார்? எப்படிப்பட்டவன்(ள்)? இப்போது என்ன செய்துகொண்டிருக்கின்றேன்? வீட்டில், சமூகத்தில் எனது பணி என்ன? என்ற கேள்விக்கு பதிலைத் தேடிப் பார்த்தோமேயானால் நிச்சயம் எம்மால் விடை காண முடியும். "சோதனை செய்யப்படாத வாழ்வு வாழத்தகுந்தது அல்ல!" என்கிறார் தத்துவ மேதை சோக்கிரட்டீஸ்.

தன் குறைகளை தானே ஏற்றுக்கொள்ளாமை, குறைகளை மறைக்க மீண்டும் மீண்டும் பல தீமைகளைச் செய்வது, துன்பங்களைத் தாங்கிக்கொள்ளும் மனப்பக்குவம் இல்லாமை, சமூகம் தன்னை தப்பாக நினைக்குமோ என்ற பய உணர்வு, இவ்வாறான உணர்வுகளால் எம்மை நாமே அழித்துக்கொள்ள முயற்சிக்கின்றோம்.

தமது பெருமைகளைப்பற்றி பறைசாற்ற முனைவோர், தமது தவறுகளைப்பற்றிச் சிந்திப்பதில்லை. அதைத் சுட்டிக்காட்டும்போது தாம் அவமானப்படுத்தப்பட்டதாக எண்ணி அவ்விடத்தைவிட்டு அகன்று நகர்ந்துவிடுவர்.

எம்முள் எம்மைத் தேடுவதற்கு சற்று தனிமை, தன்னடக்கம், தியாகம் போன்றவை அவசியமாகின்றது. இவற்றிற்கு பணமோ, பொருளோ தேவையில்லை. உன்னையே நீ தேடும்போது உன்னுள் அபாரமான சக்திகள் புதைந்திருப்பதை நீ காண்பாய். உன் நல்ல குணங்களையும், தீய குணங்களையும் பிரித்துப்பார்ப்பாய். எது சரி, எது பிழை என்ற தெளிவு உனக்குள் பிறக்கும். ஆகவே "நமது கட்டுப்பாட்டிறக்குள் நமது மனம் செயற்படும்படி நாம் பார்த்துக்கொள்வோம்!. நமது மனம், தன் இஸ்ரப்படி நம்மை ஆட்டிப்படைக்க விட்டுவிடாதிருப்போம்!".

## துறவற வாழ்வில் வெள்ளிவிழாக் காணும் அருட்சகோதரி நிர்மலா



இயற்கை வளம் நிறைந்த பழம்பெரும் பதியாம் கற்பிட்டி இறையழைத்தலின் விளைநிலமாக விளங்குகின்ற பங்குகளில் ஒன்றாகும். இறைமகன் கிறிஸ்துவுக்கும், அவரது நற்செய்தி மதிப்பீடுகளுக்கும் சான்றுபகரும் பாரம்பரியக் கத்தோலிக்கர்களைக் கொண்ட இப்பங்கில் காலத்துக்குக் காலம் பெருகிவரும் அழைத்தல்கள் பலவாகும். அவ்வழைத்தல்களில் ஒருவராக இருப்பவர் அருட்சகோதரி நிர்மலா. இவர் திரு, திருமதி செபஸ்ரியன் தம்பதிகளின் அன்பு மகளாவார். இவர் இறைவனின் அழைப்புக்கு செவிமடுத்து 1986 ஆம் ஆண்டு ஆவணி மாதம் தன்னை நல்லாயன் சபையில் இணைத்துக்கொண்டார்.

இயேசுவின் பாதையில், காலத்தின் தேவையை அறிந்து முழுமனித விடுதலைக்காக இறையாட்சி சமூக உருவாக்கற் பயணத்தில் எம்மை அர்ப்பணிப்பதே உண்மையான அழைத்தல் வாழ்வாகும். அதற்கிணங்க அருட்சகோதரி நிர்மலா தான் 'அனுப்பப்பட்டவர்' என்ற உணர்வையும், மனநிலையையும் எப்போதும் கொண்டிருந்தார். வாழ்வில் எளிமையும், மனத்தில் உறுதியும், ஆழ்ந்த விசுவாசமும் கொண்ட அருட்சகோதரி சாதி, மத, மொழி, இனம் என்னும் எல்லைகளைக் கடந்து இயேசுவின் சாட்சியாக அவரது நற்செய்திக்கு சான்று பகர்வது கண்கூடு.

இலங்கையின் பல மறைமாவட்டங்களில் தனது பணியினைச் செய்த அருட்சகோதரி அவர்கள் தான் பணிபுரியும் இடங்களில் மக்களின் மனங்களையும் சூழ்நிலைகளையும் நன்றாக அறிந்துகொண்டு அதற்கேற்ப தனது வாழ்வையும் பணியையும் அமைத்தார்.

1990 - 2001 வரையான 11 வருடங்கள் பாப்பரசரின் தேசிய திருப்பாலத்துவ சபையில் தமிழ்ப் பிரிவு பொறுப்பாளராகச் சிறப்பாகப் பணியாற்றினார்.

2007இல் வாழைச்சேனையில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் பணிபுரிந்தார். அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் நல்லாயன் கன்னியர் மடத்தில் அனாதைக் குழந்தைகளுக்கு பொறுப்பாளராக இருந்தார். தற்போது மானிப்பாய் பங்கில் அமைந்துள்ள நல்லாயன் கன்னியர் இல்லத்தின் பொறுப்பாளராகப் பணியாற்றி வருகின்றார்.

புன்னகை தவழும் முகமும், அன்பான வார்த்தைகளும், அளவான கண்டிப்பும் கொண்ட இவர் எப்போதும் இயங்கிக்கொண்டிருப்பவர்.

சவால்கள் நிறைந்த பணித்தளத்தில் பணியாற்றிவந்த அருட்சகோதரியின் வாழ்வில் இறைவனின் அருட்கரம் செயலாற்றியது என்பது பேருண்மை.

துறவற பணிவாழ்வில் வெள்ளி விழாக் காணும் அருட்சகோதரி நிர்மலாவை மன்னா மனதார வாழ்த்துகின்றது. இறைவனின் அருளாசீர் வேண்டுகின்றது.

# வாழ்க்கை!

அருட்சகோதரி மார்த்தா (CIC) எழுதும் தொடர் சிந்தனை

## இரண்டாம் குழந்தைப் பருவ முதியோரின் வாழ்வு ...!

முதியோர்கள் முதிர்ச்சியானவர்கள். இரண்டாம் பருவத்துக் குழந்தைகள். ஆனால் விவேகமானவர்கள். இயக்கம் குறைந்தவர்கள், ஆனால் இயங்கச் சொல்லித்தருபவர்கள். கவர்ச்சியற்றவர்கள், ஆனால் பிறர் கவர்ச்சிக்கு வழிவகுப்பவர்கள். குறைகளைச் சுட்டிக்காட்டி, தொடர்ந்து வளர கரம் கொடுப்பவர்கள். தம் இருத்தலால் மற்றவர் வாழ்வை வளமாக்கி வருபவர்கள். சுயகட்டுப்பாட்டில் சுகம் கண்டவர்கள். உழைப்பினால் உறவை, வாழ்வைப் பெற்ற இவர்களின் வாழ்க்கை தற்பொழுது கேள்விக்குறியாகி வருகிறது என்பது நாம் அறிந்த உண்மையே.

மரபுவழிச் சிந்தனைகள், பண்பாடு, நாகரீகம்... என அனைத்திலும் பழமையை விரும்பாத நம்மவர்கள் மூத்தோரையும் விரும்புவதில்லை. பழமையில் உள்ள தரத்தையும், பயன்பாட்டையும் விரும்புவது குறைவாகிவரும் சூழ்நிலையில், முதியோர் இல்லம், முதியோர் சங்கங்கள் உருவாகி வருகின்றன. சில அமைப்புக்கள் இவர்களின் தேவைகளை நிறைவுசெய்ய முயற்சிகள் எடுத்து செயல்பட்டு வருகின்றன.

தந்தை, தாய், தாத்தா, பாட்டி ஸ்தானத்தில் இருக்கும் மூத்தோர் சமுகத்திலும், குடும்பத்திலும், சுருதியிழந்து, மதிப்பிழந்து ஓரங்கட்டப்பட்டுக் கிடக்கிறார்கள் என்பதும் உண்மையே! தம்மை இழந்து எதற்காக உழைத்தார்களோ அந்த உழைப்புக்கு மதிப்புக் கொடுக்காமல் அன்பையும், உழைப்பையும் உறிஞ்சிக் குடித்த பிள்ளைகள் தங்கள் தேவை முடிந்ததும் இவர்களை வீதிக்குத் தள்ளிவிடுகின்றனர். இதனால் உடலளவிலும், மனதளவிலும் பாதிக்கப்பட்டு உடல் நோயினால் வரும் இயலாமையைவிட, தனிமையே பெரிய வியாதியாகிறது இவர்களுக்கு.

சார்ந்து வாழ்வதுதான் வாழ்க்கையின் நியதி என்றாலும், இவர்களின் சார்பு நிலையை யாரும் ஏற்றுக்கொள்வதில்லை. காரணம் இவர்களுக்கு கொடுப்பதால் பயனேதும் இல்லை. தான் எதையும் திரும்ப பெறமுடியாது என்ற நன்றியற்ற உணர்வு! ஆதலால் தன் சொந்த வீட்டில் வாடகை கொடுப்பவர்களாகவும், கண்ணியமான இடத்தில் இருக்கிறார்கள் எனக்கூறப்படும் முதியோர் 'முதியோர் இல்லத்தில்' விற்கப்பட்டவர்களாயும், வீதிகளில் காணக் கூடியவர்களாயும் வாழ்ந்து



வருகிறார்கள். தங்கள் பிள்ளைகளால் கைவிடப்பட்ட நிலையில் பிச்சையெடுக்க மனமில்லாது சில முதியோர் தம் மதிப்பை இழக்க விரும்பாது, யாருக்கும் சுமையாக இருக்கக்கூடாது என்பதற்காக, தெருக்களிலும் பேரூந்து நிலையங்களிலும், இரயில் நிலையங்களிலும் கடலை, மாங்காய், கொய்யாக்காய், புத்தகங்கள் போன்றவற்றை விற்றும், வடைசுட்டு விற்றும் தம் வாழ்க்கைக்கு உயிர் கொடுத்து வருவது அன்றாடம் நாம் கண்டுவரும் நிகழ்வுகள். பெரும்பாலான முதியோர் இறுதிவரை வேதனையின் விளிம்பிலேயே வாழ்ந்து மரிப்பதையும் காண்கிறோம்.

செய்தித்தாள் ஒன்றில் ஒரு மூதாட்டியைப் பற்றி போட்டிருந்ததைப் படித்தேன். அந்த மூதாட்டி பேருந்து நிலையத்தில் 30, 40 ரூபாய் விலையுள்ள புத்தகங்களை விற்றுவருபவர். அவரைப் பார்த்த நிருபர் ஒருவர் அவரிடம், "உங்களுக்கு பிள்ளைகள் இல்லையா? ஏன் இந்த முதிர் வயதில் ஒவ்வொரு பேரூந்தாக ஏறி இறங்குகிறீர்கள்?" என்றார். அதற்கு அந்த மூதாட்டி, "ஒரு மகன் இருக்கிறான். அவனால் அவன் குடும்பத்தையே சரிவர கவனிக்க முடியவில்லை. எனவே நானும் சுமையாக இருக்க விரும்பவில்லை." என்றாள். "ஏன் முதியோர் இல்லத்திற்கு சென்றிருக்கலாமே!" எனக் கேட்க, "உழைக்க முடியும் என்ற நிலையில் முதியோர் இல்லத்திற்கு சென்றால் நான் வாழ்ந்த வாழ்க்கைக்கு அர்த்தம் இல்லாமல் போய்விடும்" எனக் கூறி புத்தகங்களின் பெயரை சொல்லி கூவிக்கொண்டு சென்றாள்.

இறந்த பின்பு நம் முதியோரின் படத்தை வைத்து வருடாவருடம் வணங்கி மரியாதை செலுத்தும் நாம் அவர்கள் வாழும்போதே, கொடுக்கவேண்டிய மரியாதையைக் கொடுப்போம். முதுமை என்ற முதிர்ச்சியில் இருக்கும் சுவையை, அவர்கள் சுவைக்கச் செய்வோம். அவர்களின் உணர்வுகள் மற்றும் குழந்தைத்தனமான செயல்பாடுகளை ஏற்றுக்கொண்டு அவர்களின் அறிவிலும், அனுபவத்திலும் பாடம் கற்க முன்வருவோம்.

முதுமை என்பது தவிர்க்க முடியாத ஒரு யதார்த்தம். இன்றைய முதியவர்களை நாம் எப்படி நடத்துகிறோம் என்பது முக்கியமானது. ஏனெனில் நாமும் ஒருநாள் முதுமை என்ற நிலையை அடைந்தே தீருவோம். இன்று அவர்களுக்கு நாளை நமக்கு என்பதை நாம் உணரவேண்டும்.

முதியோர்களைக் கவனிக்கும், மதிக்கும் கலையை அறிந்திருப்போம். அப்போதுதான் வாழ்க்கையை வாழ்வதற்கான நுணுக்கம் தெரிந்தவர்கள் வாழ்ந்தும் செத்தவர்கள் என்ற நிலையினால் அவர்கள் புறக்கணிக்கப்படமாட்டார்கள்.

(தொடரும்.....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

## மனிதகுலத்தின் மகத்தான சொத்து குழந்தைகளே!

# இறைவனின் திட்டத்தை உணர்ந்து குழந்தைகளின் தனித்துவமான ஆற்றல்களை வெளிக்கொணர்வது ஆசிரியர்களின் பாரிய பொறுப்பு

### கர்தினால் மல்கம் றஞ்சித்

மனித குலத்தின் மகத்தான சொத்து குழந்தைகளே ஆவர். ஒவ்வொரு குழந்தையினுள்ளும் இறைவன் ஒரு திட்டத்தை வைத்துள்ளார். அவர்களுக்கே உரிய தனித்துவமான ஆற்றல்களையும் வைத்துள்ளார். இறைவனின் திட்டத்தை உணர்ந்து அவர்களின் தனித்துவமான ஆற்றல்களை வெளிக்கொணர்வதே ஆசிரியர்களினதும் பெற்றோர்களினதும் பாரிய பொறுப்பாகும் என கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 11ஆம் திகதி கொழும்பு உயர் மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் தினப்பெருவிழா கொழும்பு புனித சூசையப்பர் கல்லூரியில் இடம்பெற்றபோது முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கூறியதாவது, பெற்றோர்கள் ஒவ்வொருவரும் தம் பிள்ளைகளைப்பற்றி பெருங்கனவுகளை வைத்துள்ளார்கள். எதிர்காலத்தில் நல்ல தலைவர்களாக தம் பிள்ளைகள் வரவேண்டும் என்பதே அவர்களது கனவு ஆகும். எனவே இறைவன் ஒவ்வொரு பிள்ளையினுள்ளும் வைத்துள்ள திட்டத்தைப் புரிந்துகொண்டு அவர்களிடம் காணப்படும் அற்புத ஆற்றல்களை இனங்காண வேண்டும். கத்தோலிக்க சமய விழுமியங்களுக்கு ஏற்ப அந்த ஆற்றல்களை வளர்த்து வெளிக்கொணரவேண்டியது ஒவ்வொரு கத்தோலிக்க ஆசிரியர்களதும் கடமையாகும்.



## கொழும்பு குருக்கள் ஐரோப்பாவுக்கு திருப்பயணம்

கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் பணியாற்றும் அருட்தந்தையர்கள் 50 பேர் அடங்கிய குழு கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகையுடன் ஐரோப்பிய திருத்தலங்களுக்கான திருப்பயணத்தை மேற்கொண்டிருந்தனர்.

கடந்த புரட்டாதி 10 - 24ஆம் திகதி வரையான 14 நாள் பயணத்தின்போது லூர்து அன்னை திருத்தலம், வத்திக்கான் நகர் போன்ற பல வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை இவர்கள் தரிசித்தனர்.

“அருளாளர் யோசவ்வாஸ் : எதிர்கொண்ட சவால்களும் நிலைநாட்டிய சாதனைகளும்”

## பேராசிரியர் பிலேந்திரன் அடிகளார் பேருரை



யாழ் மறைமாவட்ட குருக்கள் மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆயர் வ. தியோகுப்பிள்ளை அறக்கொடைப் பேருரை கடந்த ஒக்ரோபர் மாதம் 24ம் திகதி யாழ் பாதுகாவலன் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின்போது அன்றைய பேருரையை பேராசிரியர் ஞா. விக்ரர் பிலேந்திரன் அடிகளார் வழங்கினார். “அருளாளர் யோசவ்வாஸ் : எதிர்கொண்ட சவால்களும் நிலைநாட்டிய சாதனைகளும்” என்ற தலைப்பில் பிலேந்திரன் அடிகளார் இப்பேருரையை வழங்கினார். இவருடைய இந்த உரை நூல் வடிவாகவும் வெளியிடப்பட்டுள்ளது. அடிக்குறிப்புகளுடன் அமைந்த சிறந்த ஆய்வாக இந்த நூல் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## இறையடியார் கர்தினால் கூரேயை அருளாளராக உயர்த்துவதற்கான முன்னெடுப்புகள்



கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் முதலாவது சுதேச பேராயரான கர்தினால் கூரே ஆண்டகை இறையடியாராக அறிவிக்கப்பட்டது அனைவரும் அறிந்த விடயமே. மேலும் தேவத்தை பசிலிக்காவின் கீழ்தளத்தில் உள்ள சிற்றாலயத்தில் அவரது பூதவுடல் அடக்கம் செய்யப்பட்ட கல்லறைக்கு முன்பாக விசுவாசிகள் ஒன்றுகூடி செபிப்பதையும் அருகில் வைக்கப்பட்டுள்ள புத்தகத்தில் வேண்டுதல்கள் மற்றும் நன்றிகளை எழுதுவதையும் வழக்கமாக கொண்டிருக்கிறார்கள்.

அவரது விண்ணகப் பிறப்பின் 23வது வருடத்தை நினைவுகூரும் விதமாக கார்த்திகை 5ஆம் திகதி தேவத்தை பசிலிக்காவில் விசேட திருப்பலி கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகையின் தலைமையில் நடைபெற்றது.

இதேவேளை அவரைப் புனிதராகப் பிரகடனப் படுத்துவதற்கான படிமுறைகளில் இடைநிலைப் படியான அருளாளர் (முத்திப்பேறு பெற்றவர்) நிலைக்கு உயர்த்தும் பணிகள் தகுந்த முறையில் நடைபெறுகிறது என்று ஏற்பாட்டாளர்கள் கூறுகிறார்கள்.

# சதாசகாய மாதா 3000மாவது நவநாள் நினைவு முத்திரை வெளியீடு






கொழும்பு பொறளையில் அமைந்துள்ள அனைத்துப் புனிதர் ஆலயத்தில் இடம்பெற்று வந்த சதாசகாய மாதா நவநாள் 3000ஐ எட்டியது. இதனை நினைவுகூருமுகமாக சதாசகாய மாதா 3000மாவது நவநாள் நினைவு முத்திரை வெளியிடப்பட்டது. கடந்த யூலை மாதம் 6ஆம் திகதி இடம்பெற்ற 3000மாவது நவநாள் திருப்பலியை கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகை அவர்கள் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார். திருப்பலியைத் தொடர்ந்து அவர் நற்கருணை ஆசீர்வாதம் வழங்கினார் அதைத்தொடர்ந்து தபால் மற்றும் தொலைத்தொடர்பு திணைக்களம் முத்திரையையும், விசேட உறையையும் வெளியிட்டது.


## தேசிய மறைக்கல்வி நிலைய இயக்குனர் அருட்பணி. நிக்கலஸ் லோவ் இறைபதம்



சிலாப மறைமாவட்டக் குருவும் தேசிய மறைக்கல்வி நிலைய இயக்குனருமான நிக்கலஸ் லோவ் அடிகளார் கடந்த நவம்பர் மாதம் 7அம் திகதி கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனையில் இறைபதமடைந்தார். 10ஆம் திகதி சிலாப ஆயர் தலைமையில் நல்லடக்க ஆராதனை இடம்பெற்றது. அடிகளாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

## பொன்விழாக் காணும் இலங்கை இயேசு சபையினர்





இயேசு சபையினரின் இலங்கை மாகாண முதல்வர் ஜெயராஜ் இராசையா அடிகளார்

இயேசு சபையினரின் இலங்கை மாகாண பொன்விழாக் கொண்டாட்ட நிகழ்வுகளை கடந்த 26.08.2011 அன்று ஆரம்பித்து வைத்தார்.

இரத்தினபுரி ஆயர் மேதகு கிளிற்றஸ் பெரேரா அவர்கள் மேற்படி பொன்விழாக் கொண்டாட்ட தொடக்கத் திருப்பலியை தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார்.

2011 - 2012 காலப்பகுதி பொன்விழா ஆண்டாகக் கொண்டாடப்படவுள்ளது.

கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்தில்

## நூதனசாலை அடிக்கல் நாட்டு விழா

### முதல் பெண்மணி சிரந்தி ராஜபக்ஷ பங்கேற்பு

கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்தில் நூதனசாலை மற்றும் யாத்திரிகர் நிலையம் போன்றவற்றுக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் கடந்த ஒக்ரோபர் மாதம் 13ஆம் திகதி இடம்பெற்றது.

திருத்தலப் பரிபாலகர் அருட்திரு. கிளமன்ற் ரொசைறோ அடிகளாரின் அழைப்பின் பேரில் வருகை தந்த கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ஆண்டகையினால் முதல் கல்லும், கொழும்பு வடக்கு சிறப்புப் பணி முதல்வர் அருட்திரு. பொனி பெனாண்டோபுள்ளே அடிகளாரினால் இரண்டாவது கல்லும், இலங்கையின் முதல் பெண்மணி சிரந்தி இராஜபக்ஷ அவர்களினால் மூன்றாவது கல்லும் நாட்டப்பட்டது.

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களின் மனைவி திருமதி சிரந்தி ராஜபக்ஷ அவர்கள் ஒரு கத்தோலிக்கராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## அருட்தந்தை திசாநாயக்காவுக்கு விருது

திருகோணமலையில் நீண்ட காலமாக பல்லின, பலசமய மக்கள் மத்தியில் சமாதான சக வாழ்வுக்காக அரும்பெரும் பணியாற்றிய புனித மரியாள் பேராலயப் பங்குத்தந்தை ஜோர்ஜ் திசாநாயக்க அடிகளாருக்கு அண்மையில் இரு விருதுகள் வழங்கப்பட்டன.

முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்ட தேஷ மானவஹித்தை, தேஷமான்ய ஆகிய கௌரவ விருதுகளே இவருக்கு வழங்கப்பட்டன. மூன்று வருடங்களுக்கு ஒருமுறை பௌத்த மாகாபீடாதிபதிகளாலும் ஏனைய பீடாதிபதிகள் மற்றும் உயர் பௌத்த சங்க சபையாலும் அரச அனுசரணையோடு இந்த விருதுகள் மக்களைக் கவர்ந்த - பிரபலமான பல துறைகளில் பணியாற்றுகின்ற - குருக்கள், துறவிகள், பொதுநிலையினர்களுக்கு வழங்கப்படுகிறது.

திருகோணமலையில் அனைத்து மக்களாலும்



மதிக்கப்படுகின்ற அருட்தந்தை ஜோர்ஜ் திசாநாயக்க அடிகளாரைப் பாராட்டுகின்றோம்.
(நன்றி - வெட்டாப்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளையோரின் தந்தையும் நண்பரும் ஆசிரியருமான

# புனித டொன் பொஸ்கோவின் வாழ்வும் வழியும்




"என்னங்க நம்ம பையன் விக்டர் 'ஆரட்டரி' போனதில் இருந்து வீட்ல நல்லபடியா நம்மிடம் பழகுகிறான். வீட்ல உள்ள வேலையை ஒழுங்காக கவனிக்கிறான். பக்கத்தில் உள்ள எல்லோரும் பாராட்டும்படியா நல்ல காரியங்கள் செய்துவிட்டு வர்றான்.

அது என்னவோ தெரியலிங்க 'ஆரட்டரி' அவனை மாத்திடுச்சு. ஊர் சுத்தியின்னு பேர் வாங்கினவன், இப்போ எல்லோரும் மெச்சும்படியா நடந்துகிறான்னு கேட்கும்போது நமக்கு பெருமையா இருக்குதுங்க. நம்ம பையன் ஆரட்டரி போனதிலிருந்து 'டொன்போஸ்கோ, டொன்போஸ்கோன்னு' அடிக்கடி பேசிட்டு இருக்கிறதைக் கேட்டேனுங்க. அவரு யாருங்க? ஏன் அவன் அப்படி அவரைப் பற்றி அடிக்கடி பேசனும்?"

"அடியே விக்டோரியா! உனக்கு அவரைப்பற்றி தெரியாதா? உனக்கு அவரைப் பற்றிச் சொல்லுறன் கேட்டுக்கோ."

## பிறப்பு

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஐரோப்பா நாடெங்கும் ஏற்பட்ட தொழில் புரட்சி காரணமாகக் கிராமப்புறத்தில் இருந்த இளைஞர்கள் வேலைக்காக நகர்புறம் நோக்கிப் படையெடுத்தார்கள். அப்போது இளைஞர்களைச் சமுதாயமும், அரசாங்கமும் ஒரு பொருட்டாக மதிக்காத சமயத்தில் இளைஞர்களின் தந்தையாக, ஒரு வழிகாட்டியாக 1815ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 16ஆம் நாள் வட இத்தாலியில் தூரியனுக்கு அருகில் பெக்கி என்னும் ஊரில் திரு. பிரான்சிஸ் போஸ்கோ, திருமதி. மார்கிறட் ஒக்கியோனாவுக்கும் மகனாகப் பிறந்தார் ஜோன் போஸ்கோ. இவருக்கு அந்தோனி, ஜோசப் என்ற இரு அண்ணன்மார் இருந்தார்கள்.

ஜோன் தனது 2ஆவது வயதில் தந்தையை இழந்தார். வறுமையில் வாடிய குடும்பத்தைக் காப்பாற்றும் பொறுப்பு தாயின்மீது விழுந்தது. ஜோன் தன் உடன் பிறந்தவர்களைவிட அறிவிலும், ஆற்றலிலும், அடக்கத்திலும், பக்தியிலும் சிறந்து விழங்குவதைப் பார்த்த தாய், ஜோனை எப்படியாவது கல்வி பயிலவைத்து நல்ல குருவாக உருவாக்க வேண்டும் என்ற எண்ணம்கொண்டிருந்தாள். ஆனால் ஜோனின் அண்ணன் அந்தோனி பல விதங்களில் இதற்குத் தடையாக இருந்தான். இதைக் கண்ட தாய், தன் நோக்கம் நிறைவேறக் கடவுளிடம் தன மகனுக்காக மன்றாடினாள். அவரின் விருப்பம் வீண் போகவில்லை!

## இறைவெளிப்பாடு

ஜோன் தமது 9-வது வயதில் ஒரு கனவு கண்டார். அதில் பல இளைஞர்கள் குடித்துக்கொண்டும், ஒருவரை ஒருவர் திட்டிக்கொண்டும், அடித்துக்கொண்டும், பல தீய செயல்களில் ஈடுபட்டுக்கொண்டும் இருப்பதாகக் கண்ட ஜோன் கோபம் கொண்டு அவர்களை அடிக்கச் செல்கிறார். அப்போது வெண்ணாடை அணிந்த மனிதர் ஒருவர் காட்சியில் தோன்றி, "என் இனிய மகனே, அவர்களை அடிக்கதே, அன்பால் திருத்து" என்றார். அதற்கு ஜோன், "எங்ஙனம் இச்செயலை இந்த வயதில் செய்ய முடியும்?" என்றார். அதற்கு அந்த மனிதர், "மகனே உனக்குத் துணையாக என் அன்னையை அனுப்புவேன்" என்று கூறி மறைந்தார். பின் அந்த இளைஞர்களைப் பார்த்தார். அந்த இடத்தில் கொடிய விலங்குகளின் கூட்டம் இருப்பதைக் கண்ட ஜோன் அவைகள் செம்மறிகளாக மாறுவதையும் கண்டார்.

அதன்பின் அவர் தூக்கத்தில் இருந்து விழித்துக்கொண்டார். தாம் கண்டது கனவு என்றாலும், எதிர்காலத்தில் நடக்கவிருக்கும் வாழ்க்கை நிகழ்ச்சி என்பதை உணர்ந்தார். இவ்வாறு பலமுறை கண்ட கனவுகள் அவரது வாழ்வில் நனவாகி இருக்கின்றன.

## திருவழிபாடுகளில் ஆர்வம்

ஜோன் சிறுவானக இருக்கும்போது திருப்பலியிலும், நாற்கருணை விருந்திலும் தினமும் கலந்துகொள்வார். கடும் குளிர் என்றுகூடப் பார்க்காமல் பல மைல் தூரம் நடந்து திருப்பலியில் பங்கேற்று மறையுரையைக் கவனமுடன் கேட்டு உள்ளத்தில் பதித்துவந்தார். நற்கருணை தினமும் பெறக்கூடாது என்ற நிலை இருந்தும் இறைவனின் வரவை உள்ளத்தில் ஏற்று அவரின் போதனைகளுக்கு ஏற்ப வாழ்ந்தவர் ஜோன் போஸ்கோ. மறு உலக வாழ்வு பற்றித் தம் நண்பர்களுடன் கலந்து ஆலோசித்து அதற்கான தயாரிப்பைச் சிறு வயது முதல் மேற்கொண்டவர் ஜோன்.

இளைஞர்களின் நண்பர் எனப் பாராட்டப்படும் டொன் போஸ்கோ இளைஞர்கள்மீதுள்ள தமது அன்பைத் தமது இளமைப் பருவத்திலேயே வெளிப்படுத்தினார். தாம் இளைஞராக இருந்தபோதே, சிறுவர்களை ஒன்றுசேர்த்து, வித்தைகள், வேடிக்கைகள் மூலம் அவர்களை மகிழ்வித்தார். இத்தகைய மகிழ்வூட்டும் செய்கைகளை அவர்களது நல்வாழ்விற்காக நல்ல கருத்துடன் முடிப்பது அவரது வழக்கம். ஜோனின் கல்வி மேம்பாட்டிற்கு அவரது மாமா மைக்கலும், பங்குத்தந்தையும், கலாசோ அடிகளாரும், தையல்காரராகப் பணியாற்றிய திரு. இராபர்ட்டும் உதவியாக இருந்தனர். அவர் இசைக்கருவிகள் வாசிக்கவும் கற்றுக்கொண்டார்.

## குருவாக உருவாதல்

தாய் கொடுத்த ஞானமும், பெரியவர்கள் கொடுத்த ஊக்கமும், ஜோன் குருவாக உருவாவதற்கு உதவின. 1841ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5ஆம் நாள் குருப்பட்டம் பெற்றார். அதன்பின், "நான் என் வாழ்நாள் முழுவதும் இளைஞர்களுக்காகவும், மக்களின் ஆன்ம ஈடேற்றத்திற்காகவும் உழைப்பேன்" என்று மக்கள் மத்தியில் வீர முழக்கமிட்டார். தமது நற்பணிகளை ஏழை, அனாதைச் சிறுவர்களுக்காக விரிவுபடுத்தினார்.

## ஆரட்டரி / சிறுவர் மன்றங்கள்

ஏழ்மையில் பிறந்து ஏழ்மையிலேயே வளர்ந்து, தகுந்த புகலிடம் இன்றித் தெருக்களில் வாழ்ந்த சிறுவர்களோடு இணைந்து வளர்ந்தார். எனவே தங்கள் வீடுகளில் என்றும் பெறமுடியாத உணவிற்கும், அன்பிற்கும் ஏங்கும் அவர்களின் ஏக்கங்களை அவர் நன்கு உணர்ந்திருந்தார். இத்தகைய சிறுவர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில், தங்களுடைய நேரத்தைப் பயனுள்ள வகையில் செலவிட "ஆரட்டரி" அல்லது "சிறுவர் மன்றங்களைத்" தொடங்கினார். அவர்களில் பலருக்கு இத்தகைய உதவி தொடர்ந்து தேவைப்படுவதை உணர்ந்து, ஆரட்டரியை அனாதைச் சிறுவர்களின் இல்லமாக விரிவுபடுத்தினார்.

## சமூக சேவையில் டொன் போஸ்கோ

1847-1850 ஆம் ஆண்டுகளில் இத்தாலியில் பல இடங்களில் புரட்சிகளும், குழப்பங்களும் நடைபெற்று அரசியல் மாற்றம் அடைந்தது. இதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஜோன் போஸ்கோ இளைஞர்களோடு இணைந்து உதவிசெய்தார். இளைஞர்களின் எண்ணிக்கை அதிகமாகவே, பினார்த்தி என்ற இல்லத்தை சிலரின் உதவியோடு விலைக்கு வாங்கினார். ஏழைச் சிறுவர்களுக்கு இடமளித்த இறைவனுக்கு 1852 இல் பிரான்சிஸ்க்கு சலேசியரின் பெயரில் ஆலயம் கட்டினார். அதன்பின் அச்சகமும், ஒரு பெரிய இரும்புத் தொழிற்சாலையுடன்கூடிய தொழில் நுட்பப் பயிற்சிப் பள்ளியும் நிறுவினார். இதுவே இத்தாலியின் முதல் கத்தோலிக்கத் தொழிற்பயிற்சிப் பள்ளி என குறிக்கப்படுகிறது. 1846-1856 ஆண்டுகளில் பல அனாதை இல்லங்களையும், தொழிற் கூடங்களையும், கல்விக் கூடங்களையும், இத்தாலி முழுவதும் நிறுவினார். இளைஞர்களுக்கு மறைக்கல்வி போதித்தார். ஒப்புரவு அருட்சாதனத்தை வழங்கினார். இளைஞர்கள் தங்கள் வாழ்வைப்பற்றிச் சிந்திக்க தியானங்களும் நடத்தினார். 1854 ஆம் ஆண்டு இத்தாலியில் கொலரா நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவினார்.

## சலேசிய சபையின் தோற்றம்


டொன் போஸ்கோவும், அவரைச் சார்ந்தவர்களும் இத்தாலியிலும், வெளிநாடுகளிலும் தொழிற்கூடங்களையும், கல்விக்கூடங்களையும், இளைஞர் மன்றங்களையும் அமைத்தனர். இப்பணியில் தம்மைப் பின்பற்றி, தங்களையே அர்ப்பணித்தவர்களை ஒன்றுதிரட்டி, வீதிகளில் சுற்றியலைந்த இளைஞர்களை நல்ல குடிமக்களாகவும், இறைப்பற்று கொண்ட மனிதர்களாகவும் மாற உதவினார். இளைஞர்களின் உள்ளங்களைக் கவர்ந்திட 'தடுப்பு முறையைக்' (Preventive System) கையாண்டார். பகுத்தறிவு, சமயம், அன்பு இவற்றின் ஒருங்கிணைந்த சாரமே 'தடுப்பு முறை' என்றார் டொன் போஸ்கோ. இளைஞர்கள் மத்தியில் அவருடைய மாபெரும் வெற்றியின் இரகசியம் எதுவென அவரிடம் கேட்டபோது, 'அன்பே' என்று கூறினார்.

அவர் ஆரம்பித்த இப்பணியைத் தொடர 1859 – ஆம் ஆண்டு சலேசியர்கள் என அழைக்கப்படும் குருக்களும், சகோதரர்களும் கொண்ட துறவறச் சபையைத் தோற்றுவித்தார். இவர்கள் இளைஞர்களின் கல்விக்காகவும், சிறப்பாக ஏழை, திக்கற்றவர்களுக்காக உழைக்கும் ஒரு சபையினராவர். தமது பணியை ஏழை, அனாதை இளம் பெண்களுக்கும் ஆற்ற, புனித மரியா மசரெல்லோவின் உதவியோடு சலேசிய சகோதரிகள் என்று அழைக்கப்படும் கிறிஸ்தவர்களின் சகாய அன்னையின் புதல்வியர் சபையை 1872ஆம் ஆண்டு தோற்றுவித்தார். இவ்விரு சபைகளைத் தவிர துறவறத்தில் ஈடுபடாமல் தொன் போஸ்கோவின் உள்ளுணர்வோடு இளைஞர்களுக்காகப் பணிபுரியும் இல்லறத்தில் ஈடுபட்ட ஒருசிலரையும் இணைத்து சலேசிய உடனுழைப்பாளர் இயக்கம் என்ற 3வது ஆன்மீகக் குடும்பத்தையும் 1876ஆம் ஆண்டு தோற்றுவித்தார்.

தமது 72வது வயதில், 1888ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் தேதி அவர் இறைவனடி சேர்ந்தபோது, அவர் கூறிய இறுதி வார்த்தைகளாவன, "நான் அவர்களுக்காக விண்ணகத்தில் காத்துக்கொண்டு இருக்கிறேன் என்று என் இளைஞர்களுக்கு கூறுங்கள்!" இவ்வாறு, வாழ்வின் இறுதி மூச்சுவரை தம் நோக்கத்தை நிறைவேற்றி, அனைத்துலக இளைஞர்களின் உள்ளங்களில் நீங்கா இடம்பெற்றுவிட்டார்.

"என்ன? விக்டோரியா! அப்படியே மலைத்துப்போய் உட்கார்ந்திட்டே....! இல்லிங்க, டொன் போஸ்கோவின் வாழ்க்கையைப் பற்றிக் கேட்கும்போது, பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த இப்புனிதர் நம்முடைய மகன் விக்டர் வாழ்வில் மாற்றத்தைக் கொண்டுவந்ததை நினைக்கும்போது எனக்கு ஆச்சரியம்தாங்க!

"எத்தனை ஆண்டுகள் வாழ்கிறோம் என்பது முக்கியமன்று, மாறாக எப்படி வாழ்ந்துகொண்டிருக்கிறோம் என்பதுதான் முக்கியம்" என்ற பொன்மொழிக்கேற்ப வாழ்ந்து சரித்திரம் படைத்த வரலாற்று நாயகன்தான் தந்தை டொன் போஸ்கோ. வறுமையில் பிறந்து, வாழ்வின் ஒவ்வொரு கட்டங்களிலும் துன்பப்பட்டு உழன்றபோதும் தாம்பட்ட துன்பங்களை இவ்வுலகில் எந்த இளைஞனும் படக்கூடாது என்ற நல்லெண்ணத்துடன் இறையன்பு, பிறரன்பு என்பதன் அடிப்படையில் இளைஞர்களின் நல்வாழ்வுக்காகத் தம்மையே அர்ப்பணித்துக்கொண்ட தூய டொன் போஸ்கோவின் வழியே தனிவழி. அவரது ஆன்மீகம் மிகச் சிறப்புடைய ஆன்மீகம்.



இறைவா, ஆன்மாவை மட்டும் தந்து மற்ற எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளும்.

புனித டொன்பொஸ்கோவின் விருதுவாக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத் திருச்சபைச் செய்திகள்

# உண்மைக்கான அக்கறையை எச்சூழலிலும் கைவிடாதீர்கள்

## இளம் பேராசியர்களுக்கு திருத்தந்தை அறிவுரை



பல்கலைக்கழகம் என்பது மனிதனுக்கேயுரிய உண்மையைத் தேடும் ஓர் இல்லமாகும். கத்தோலிக்கத் திருச்சபை பல்கலைக்கழகங்களை ஊக்குவித்து வருவதற்கு இதுவும் ஓர் காரணமாகும். உண்மையைத் தேடிக்கண்டறிய சிறந்த காலம் இளமை. 'இளமையிலேயே உண்மையைத் தேடு, இல்லையெனில் பின்னர், அதை நீ தேடி அடைவதற்கு முன் தப்பிவிடும்' என்றுரைத்தார் பிளேட்டோ. உண்மைக்கான ஏக்கத்தை ஒரு கொடையாக தனிப்பட்ட முறையிலும் எடுத்துக்காட்டுகள் மூலமும் உங்கள் மாணவர்களுக்கு வழங்குங்கள். உண்மைக்கான அக்கறையையும், ஆர்வத்தையும் எச்சூழலிலும் கைவிடாதீர்கள். என ஸ்பெயின் பல்கலைக்கழகங்களின் இளம் பேராசிரியர்கள் மத்தியில் உரையாற்றிய திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் தெரிவித்தார்.

சிலவேளைகளில் பல்கலைக்கழக பேராசிரியர்களின் பணி என்பது, வேலை வாய்ப்பளிக்கும் ஒரு கல்வியை மட்டுமே வழங்குவதாக அமைந்துவிடுகிறது. கல்வியிலும் இத்தகைய ஒரு நுகர்வுக் கலாச்சார அணுகுமுறை பரவலாகக் காணக் கிடக்கின்றது. நேரடிப் பயனுடையவைகளுக்கு மட்டுமே முதன்மையிடம் என்ற பாதையில் செல்லும்போது அங்கு இழக்கப்படுவது அதிகம் என்பது மட்டுமல்ல, அதன் விளைவுகளும் துன்பம் தருவதாக இருக்கும்.


தன்னைத் தாண்டி எதுவுமே இல்லை என்ற உறுதிப்பாட்டுடன் செயற்படும் அறிவியல் தவறாகப் பயன்படுத்தப்படல். மற்றும் அதிகாரத்தை மட்டுமே நம்பி, அதற்குமேல் இருக்கும் ஒரு சக்தி குறித்து கவலையின்றிச் செயற்படும் அரசியல் சர்வாதிகாரப்போக்கு போன்றவை உருவாகவும் வாய்ப்புள்ளது. ஆனால், பல்கலைக்கழகங்களின் உண்மை நோக்கமோ, இத்தகைய குறுகிய போக்குகளிலிருந்து நம்மைக் காப்பதாகும்.

கல்வி கற்பித்தல் என்பது ஒரு விஷயத்தை எடுத்துச்சொல்வது மட்டுமல்ல, இளைய தலைமுறையை உருவாக்குவதுமாகும். முழு அர்ப்பணம் மற்றும் அன்பையும், பகுத்தறிவையும் நம்பிக்கையையும் புரிந்துகொள்ளல் போன்றவைகளின் பாதையே உண்மையின் முழுமைத்தன்மைக்கான பாதை ஆகும். நாம் ஏதாவது ஒன்றைப்பற்றி அறியவேண்டுமானால் முதலில் அன்பால் அதை நோக்கி நகர்த்தப்பட வேண்டும். புரிந்துகொள்ளுதலும் அன்பும் வெவ்வேறு துறைகளைச் சேர்ந்தவை அல்ல. அன்பில் 'புரிந்துகொள்ளுதல்' உள்ளது. புரிந்துகொள்ளுதலில் 'அன்பு' உள்ளது. உண்மையும், நன்மைத்தனமும் ஒன்றிணைந்து செல்லுவதுபோல அறிவும், அன்பும் இணைந்தே செல்கின்றன.

அன்பை நாம் தேடலாம், அதன் அருகில் செல்லலாம். ஆனால் அதனை முழுமையாக கைப்பற்றிவிட முடியாது. மாறாக அதுவே நம்மைக் கைப்பற்றிக்கொண்டு நமக்குத் தூண்டுதலாக இருக்கும். நாமும் மாணவர்களை நம்மிடம் ஈர்க்காமல், உண்மையை நோக்கிய பாதையில் அவர்கள் வழிநடக்க உதவவேண்டும். அந்த உண்மையைத்தான் நாம் அனைவரும் ஒன்றிணைந்து தேடுகிறோம்.

## இங்கிலாந்து கடவுளை இழந்ததால் நன்நெறியையும் இழந்துள்ளது

### இங்கிலாந்துக் கலவரங்கள் தொடர்பாக லீட்ஸ் மறைமாட்ட ஆயர்



கடவுளையும் கிறிஸ்தவத்தையும் இங்கிலாந்து இழந்துள்ளதால் நன்நெறி மதிப்பீடுகளையும் இழந்துள்ளது என இங்கிலாந்து லீட்ஸ் மறைமாவட்ட ஆயர் ஆதர் றோச் (Arthur Roche) தெரிவித்தார்.

ஸ்பெயின் மட்றிட் நகரில் இடம்பெற்ற உலக இளையோர் தின நிகழ்வில் பங்கேற்றிருந்த ஆயர் றோச், அண்மைய இங்கிலாந்து கலவரங்கள் குறித்து, உலக இளையோர்களால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையில் : இங்கிலாந்திலுள்ள இளையோர்களில் பலர் கடவுள், மதம் ஆகியவற்றை இழந்து வாழ்வதால் அவர்களிடம் வளர்ந்துவரும் விரக்தி, ஏமாற்றம் ஆகியவையே இக்கலவரங்களில் அவர்களை ஈடுபடுத்தியுள்ளது என்று தெளிவுபடுத்தினார்.


இதற்கிடையே இங்கிலாந்து கலவரங்களால் பாதிக்கப்பட்டோருக்கென முதல்தர கிறிஸ்தவ வானொலி என்ற நிறுவனம் வெஸ்ற்மினிஸ்ரரில் ஏற்பாடு செய்திருந்த திருவிழிப்புச் சடங்கில் நூற்றுக்கணக்கானோர் பங்கேற்றிருந்தனர். பல்வேறு கிறிஸ்தவ சபைகளும் இணைந்து நடத்திய இத்திருவிழிப்பு சமுதாயத்தில் நம்பிக்கையை வளர்க்க எடுத்த முயற்சியென இக்கூட்டத்தில் பேசிய சவுத்கோல் ஆயர் கிறிஸ்தோப்பர் கூறினார்.

## நற்செய்திப் பணி ஆரம்பித்து 150 ஆண்டுகள் நிறைவுபெறுவதை முன்னிட்டு ஆபிரிக்க நாடான பெனினுக்கு திருத்தந்தை விஜயம்

### திருத்தந்தை வருகையால் அந்நாட்டில் மரண தண்டனை நீக்கம்

திருத்தந்தை கடந்த நவம்பர் 18 தொடக்கம் 20வரை குறுகிய காலத் தரிசிப்பாக ஆபிரிக்க நாடான பெனின் (Benin) ற்கு பயணம் செய்திருந்த சூழ்நிலையில் அந்நாடு மரண தண்டனையை முற்றிலும் ஒழித்துவிட்டதாக அறிவித்துள்ளது. இத்துடன் ஆபிரிக்காவில் மரண தண்டனையை ஒழித்துள்ள 17வது நாடாகவும், உலகில் 74வது நாடாகவும் பெனின் மாறியது. பெனின் நாட்டில் நற்செய்திப் பணி ஆரம்பித்து 150 ஆண்டுகள் நிறைவுபெற்றதை நினைவுகூரும் முகமாக கடந்த நவம்பர் மாதம் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் அவர்கள் இத்திருப்பயணத்தை மேற்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அருளாளர் யோவான் பவுல் திருத்தந்தைக்கு உலகிலேயே முதல் ஆலயம்




அண்மையில் அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்ட திருத்தந்தை யோவான் பவுலுக்கு உலகிலேயே முதல் ஆலயம் இந்தியாவின் பங்களூர் உயர் மறைமாவட்டத்தில் கட்டப்பட்டுள்ளது. அந்த ஆலயத்தின் தோற்றத்தையே மேலே காண்கிறீர்கள்.

## ஈராக்கில் கிறிஸ்தவர்களின் தொகை குறைகிறது

ஈராக்கில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் வன்முறைகளினால் அந்நாட்டில் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து குறைந்து வருகின்றது என்று பாக்தாத் கல்தேய ரீதி கத்தோலிக்கத் துணை ஆயர் ஷெல்மான் வர்தூனி கூறினார்.

தற்சமயம் ஈராக்கில் 2 இலட்சம் கிறிஸ்தவர்கள் உள்ளனர். இவ்வெண்ணிக்கை 2003ம் ஆண்டு ஆக்கிரமிப்பிற்கு முன்னர் 12 இலட்சமாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. சிறுபான்மையினரான கிறிஸ்தவர்கள் அந்நாட்டில் பலவித கெடுபிடிகளைச் சந்திக்கிறார்கள்.


## பத்து வயது நிறைவைக் காணும் 'உறவுகள்' பத்திரிகை

பிரான்ஸ் நாட்டில் உள்ள இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் காலாண்டு பத்திரிகையான 'உறவுகள்' பத்திரிகை இவ்வாண்டு பத்து வருடங்களை நிறைவுசெய்கின்றது. "உறவின் வழியே இறைவன் மொழியாம்" என்ற விருதுவாக்கோடு மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை இப்பத்திரிகை வெளிவருகின்றது. உறவுகள் தொடர மன்னா மகிழ்வோடு வாழ்த்திப் பாராட்டுகின்றது.

## முத். 2ம் யோவான் பவுலின் திருப்பண்டங்கள் மெச்சிக்கோவில் மக்களின் வணக்கத்திற்காக

## நாடு போதைபொருள் பாவனையில் இருந்து விடுபட அருளாளர் 2ஆம் யோவான் பவுலிடம் வேண்டுங்கள்

### மெக்கிச்கோ பேராயர்



மெக்சிக்கோ நாட்டில் அமைதியும், நல்லிணக்கமும் வளர்வதற்கும் சிறப்பாக அந்நாடு போதைப்பொருள் நாட்டங்களிலிருந்து விடுபடுவதற்கும் அருளாளர் திருத்தந்தை 2ஆம் யோவான் பவுல் அவர்களின் பரிந்துரைகளை நாடவேண்டும் என மெச்சிக்கோ பேராயர் கரேரா தெரிவித்தார்.

மெச்சிக்கோ நாட்டில் 2006ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை வன்முறை மற்றும் போதைப்பொருள் பாவனையால் நாற்பதாயிரம் பேர் உயிரிழந்துள்ளனர்.


அருளாளர் 2ஆம் யோவான் பவுலின் திருப்பண்டங்கள் தற்போது மெச்சிக்கோவில் மக்களின் வணக்கத்திற்காக பல்வேறு நகரங்களுக்கும் எடுத்துச் செல்லப்படுகின்றன. இப்புனித பயணத்தில் மெச்சிக்கோவின் விசுவாசிகள் அனைவரும் பங்கேற்க வேண்டுமென கருதினால் கரேரா அழைப்பு விடுத்துள்ளார்.

திருத்தந்தை 2ஆம் யோவான் பவுல் அவர்கள் தனது பணிக்காலத்தின்போது 5 தடவை மெச்சிக்கோ நாட்டிற்கு விஜயம் செய்திருந்தார். மெச்சிக்கோ நாட்டில் எந்த சமூக, சமய, அரசியல் தலைவருக்கும் இல்லாத செல்வாக்கும், மதிப்பும், அன்பும் திருத்தந்தைக்கு இருந்தமை குறிப்பிடத்தக்கது. மெச்சிக்கோ மக்களால் அவர் அதிகம் அன்புசெய்யப்பட்டார்.

அருளாளர் 2ஆம் யோவான் பவுல் அவர்களின் இரத்தம் அடங்கிய பாத்திரம் ஒன்று இம்மாத இறுதிவரை மெச்சிக்கோ நகரப் பேராலயத்தில் மக்களின் வணக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ளது. கீழே திருத்தந்தையின் கல்லறை.



## சமாதான நோபல் பரிசுபெற்ற தென்னாபிரிக்க முன்னாள் அங்கிலிக்கன் பேராயர் டெஸ்மன் டுட்டுவுக்கு 80 வயது



தென்னாபிரிக்காவில் பல ஆண்டுகளாகத் தொடர்ந்துவந்த வெள்ளையரின் இன ஒடுக்கல் கொள்கைக்கு (Apartheid) எதிராக துணிந்து குரல்கொடுத்தவரும், உலக அரங்கில் நன்கு அறியப்பட்டவரும், 1984ஆம் ஆண்டு சமாதான நோபல் பரிசைப் பெற்றவருமான தென்னாபிரிக்க அங்கிலிக்கன் பேராயர் டெஸ்மன்ட் டுட்டு அவர்கள் இவ்வாண்டு (07.10.1931 - 07.10.2011) தனது 80வது பிறந்தநாளைக் கொண்டாடினார். தென்னாபிரிக்க நாட்டின் தந்தையர்களில் ஒருவராக இவர் கணிக்கப்படுகின்றார். அந்நாட்டு மக்களால் பெரிதும் அன்புசெய்யப்படுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிர்வுகள் .....!

## அருட்பணியாளர் அன்புராசா (அமதி) எழுதும்

### சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர் 2

அரசியல் பற்றிக் குறிப்பிடுகிறபோது, "ஒன்றின்மேல் ஒன்றைக் குறிபார்த்து எறிந்து குண்டு விளையாடினோம், கோலி விளையாடினோம், இன்று எவரெவரோ வந்து எறிந்து விளையாட, நாமே குண்டுகளானோம்," என்பார் கவிஞர் மு. மேத்தா.

நான்கு குடும்பப் பெண்கள் தங்கள் கணவன்மார்களைப் பற்றிப் பேசிக்கொண்டார்கள். "என்ர புருசன் கொண்டக்ரரடி (Conductor). எப்ப பாத்தாலும் 'வாசல்ல நிக்காத உள்ள போ, வாசல்ல நிக்காத உள்ள போ,' என்று தொல்லைப் படுத்திறாரடி," என்றாள் ஒருத்தி. பதிலுக்கு மற்றவள், "அது பரவால்ல, நான் ஒரு வாத்தியாரக் (Teacher) கட்டியிட்டு படுற பாடு! 'வீட்டு வேல செய்யாட்டி கதிரையில ஏத்தி விடுவன்,' எண்டு கஸ்ரப்படுத்திறாரடி," எனக் கூறி முடிப்பதற்குள் அடுத்தவள், "என்ர புருசன் றவிக் பொலிஸ்காரனடி (Traffic Police). அடிக்கடி கை நீட்டுவாரு. அந்த நேரத்தில எல்லாம் ஐம்பது ரூபாய கைக்குள்ள வைச்சிற்றா நீட்டுன கைய மடங்கீருவாரு," என்றாள். நான்காமவள்,"நீங்க எல்லாம் தப்பீற்றீங்கடி! நான் முடிச்சிருக்கிறது ஓர் அரசியல்வாதியை. நான் கற்பமாயிருக்கறன் எண்டு சொல்ல, 'அது எதிர்கட்சி ஆட்கட வேலையாத்தா இருக்கணும் என்கிறாரடி அந்த மனிசன்!' எனக்கூறி முடித்தாள்.

"முப்பது ஆண்டுகாலப் போர் முடிவுக்கு வந்து இரண்டு ஆண்டுகளாகியும் சமாதானமும் சிறுபான்மை இன மக்களின் உரிமைகளும் பகல் கனவாகவே இருக்கிறது" என இலங்கை ஆயர் மன்ற செயலர் ஆயர் நோபட் அன்றாடி அவர்கள் குறிப்பிட்டிருப்பது கவனத்தில் கொள்ளத்தக்கது. அமலமரித்தியாகிகளால் உருவாக்கப்பெற்ற 'சமுகத்துக்கும் சமயத்துக்குமான நிலய' நாற்பது ஆண்டு நிறைவு விழா நிகழ்வில் புரட்டாசி 03, 2011இல் இதனைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்.

மேலும், "சிறுபான்மையினரின் உரிமைகள் பெரும்பான்மை மக்களால் மதிக்கப்படவில்லை. பெரும்பாலானோர், மூன்று தசாப்த போரின் பின்னர்கூட பல்மொழி, பல்சமய, பண்பாட்டு தீர்வை ஏற்பதற்கு விரும்புகிறார்கள் இல்லை," எனக் கூறிப்பிட்ட ஆயர் அவர்கள், "கடந்த காலத்தை இலேசாகப் புதைத்துவிட்டு, உண்மையான சமாதானத்தை உருவாக்க முடியாது. கடந்த காலக் காயங்களை ஆற்றக் கற்றுக்கொள்ளவேண்டி இருக்கிறது. இழைத்த தவறுகளில் இருந்து பாடம் படிக்க வேண்டிய தேவை இருக்கிறது," எனவும் கருத்து உரைத்திருக்கிறார்.

தொடர்ந்து, எதிர்காலச் சமாதானப் பணிகள் பற்றியும், தற்கால நிலமைகள் பற்றியும் குறிப்பிடுகையில், "இதனால், நாட்டின் அர்த்தமுள்ள சமாதானத்திற்காகப் பணியாற்றுவது சவாலாக மாறியிருக்கிறது. வெவ்வேறு அபிப்பிராயங்களையும், மற்றவர்களின் யோசனைகளையும் வரவேற்கும் மனநிலை இப்போது குறைந்து கொண்டு போகிறது. படையினருக்கும், அரசியல்வாதிகளுக்கும் இடையிலான உறவைப்பற்றி கேள்வி எழுப்பவேண்டி இருக்கிறது. அரசியல்வாதிகள், சட்டத்தையும், ஒழுங்கையும் தம் கையில் எடுத்துக்கொள்ள முயற்சிக்கிறார்கள். ஆகவே, அரசியல் செல்வாக்குகளைக் கடந்த சமுதாயத்தை உருவாக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டு இருக்கிறது," என்றும் கூறியிருக்கிறார்.



மேலும், மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்கள் பி. பி. சி (B.B.C.) செய்தி நிறுவனத்துக்கு அண்மையில் அளித்த செவ்வி ஒன்றில், "உண்மையை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்துடன் தமிழ் மக்களின் பிரச்சினையை அணுக வேண்டும்" எனக் குறிப்பிட்டு, "...தமிழ் மக்கள் அனுபவித்த துன்பங்களை ஆட்சியாளர்கள் உணர்ந்து, நீதியான அரசியல் தீர்வுத்திட்டத்தை வழங்க முன்வந்தால் மட்டுமே நாட்டில் நிலையான சமாதானத்தையும், ஐக்கியத்தையும் எதிர்பார்க்க முடியும்" எனத் தெளிவாக மீண்டும் கூறியிருக்கிறார்.

கொழும்பு மறைமாவட்டத்திலிருந்து வெளிவரும் 'த மெசஞ்சர்' (The Messenger) பத்திரிகை ஆசிரியர் 2011, காத்திகை 06 இல் வெளியிட்ட தமது ஆசிரியர் தலையங்கத்தில், "தமிழ் மொழியை உத்தியோகபூர்வ மொழியாகவும் தமது கருமங்களை ஆற்றுவதற்கு அது ஏதுவாகவும் இருக்கும் என தமிழ் மக்கள் கேட்கும் அழுத்தமான வேண்டுகோள் நியாயமானதே" எனக் கூறியிருக்கிறார். தொடர்ந்து, "..... இத்தகைய தமிழர்களின் நியாயமான வேண்டுகோளை சிங்கள அரசியல் தலைவர்கள் நிறைவேற்றாமல் போனதனால்தான் தமிழீழ விடுதலைப் புலிகள் உருவாகவும் அவர்கள் ஆயுதம் தூக்கவும் காரணமாகியது, ஏனெனில் அவர்களின் தலைவர்கள் பேச்சுவார்த்தைகளின் ஊடாக நியாயமான வேண்டுகோளை நிறைவேற்றுவதில் தோல்வி கண்டனர். இந்த வரலாறு திரும்பத் திரும்ப மீட்டப்படாதிருப்பதாக. ஆனால் தற்போதைய அரசு துரதிஸ்ரவசமாக விபரீதமான வழியை தெரிந்தெடுத்துக்கொள்வதோடு அதிகாரங்களை மாகாண சபைகள் நடைமுறைப்படுத்துவதற்குப் பதிலாக இராணுவ மனிதனை கிழக்கு மாகாணத்தின் அரச அதிபராக நியமித்து, வடக்கில் அத்துமீறிய அதிகாரத்தை (Veto power) இராணுவத்திற்குக் கொடுத்துள்ளது. மாகாண சபைகளைப் பலப்படுத்தி மத்திய அரசின் அதிகாரத்தை, இராணுவ பலம் உட்பட, அநாவசிய வழியில் மக்கள் நிர்வாகத்தின்மீது பிரயோகிக்காமல் செயல்ப்படுவதற்கு இதுவே தருணமாகும். அரசு அடுத்த ஆண்டு தொடக்கத்தில் வடக்கு – கிழக்கு மாகாணசபைத் தேர்தல்களை நடத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் வடக்கிலும் கிழக்கிலும் தம் அதிகாரத்தை செயற்படுத்த அனுமதிப்பது அவசியமானது. இதுவே தமிழ் மக்களின் தொடர்ச்சியான அழுத்தமான வேண்டுகோளாய் இருக்கிறது," எனக் குறிப்பிட்டிருக்கிறார்.

இப்படி, சமுக அக்கறை கொண்ட ஒருசில தலைவர்கள் சொல்ல வேண்டியதை சொல்லிக்கொண்டுதான் இருக்கிறார்கள். மற்றவர்கள் தங்கள் இருக்கையைப் பாதுகாத்துக்கொண்டு நாட்களை நகர்த்துகிறார்கள் அல்லது 'பட்டும் படாமலும்' ஏதாவது சொல்லுகிறார்கள் அல்லது 'சந்தை அரசியல்' பேசுகிறார்கள்.

கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் கருதினால் மல்கம் றஞ்சித் அவர்கள், "கடுமையான இனவாத, மதவாதக் கோட்பாடுகளை கத்தோலிக்க திருச்சபை வன்மையாகக் கண்டிக்கிறது. அதேநேரம் மதகுருமார் அரசியலில் ஈடுபடுவது பொருத்தமற்றது. எந்தவொரு மதகுருவையும் கட்சி அரசியலுக்குப் பொருத்தமானவர் எனக் கருதமுடியாது," என்று குறிப்பிட்டதாக 2011 கார்த்திகை 08இல் 'வலம்புரி'ப் பத்திரிகையில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர் தொடர்ந்து கூறுகையில், "...யாழ். மறைமாவட்டத்திலிருந்து வெளிநாட்டுக்கு சென்று தற்போது பொருத்தமற்ற அரசியலில் ஈடுபட்டுவரும் இம்மானுவேல் அடிகளாரின் நடவடிக்கைகளை அனுமதிக்க முடியாது" என்றும் கூறியிருக்கிறார்.

முதலில், பேராயர் அவர்கள், தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளுக்காக இதய சுத்தியுடன் குரல் கொடுத்தால் - செயற்பட்டால்! அதற்குத் தமிழ் மக்களாகிய நாங்கள் நன்றிக் கடன்பட்டவர்கள். அடுத்து இம்மானுவல் அடிகளாரின் குரல் 'கட்சி அரசியலை'க் கடந்து 'தேசத்தின் குரல்' ஆக இல்லாவிட்டாலும் உரிமையிழந்த தமிழ் மக்களின் குரலாக ஒலிக்கிறது. "...எவ்வாறாயினும், மனித ஆட்களுடைய அல்லது சமுகக் குழுக்களுடைய உரிமைகளைக் கடுமையாக மீறக்கூடிய ஏகாதிபத்திய அல்லது சர்வாதிகார முறைகளை ஓர் அரசு கையாளுமேயாயின் அது மனிதத்தன்மையற்ற செயலாகும்," என இரண்டாம் வத்திகான் சங்க 'இன்றைய உலகின் திருச்சபை' என்ற கொள்கைத் திரட்டின் 75ஆவது கூற்றில் சொல்லப்பட்டிருக்கிறது. மனிதத்தன்மையற்ற யாருடைய செயலாக இருப்பினும் அதனை சுட்டிக்காட்டுவது ஒவ்வொரு அருட்பணியாளனுடைய 'இறைவாக்கினன் கடமை'யும் அழைப்புமாகும். அதை அவர் செய்கிறார். தொடர்ந்து செய்ய வேண்டும்.

நம் மக்களின் உரிமைகளுக்காக உரத்துக் குரல் கொடுக்க வேண்டிய காலம் இதுதான். இப்போது பேசாமல் நம் தலைவர்கள் வேறு எப்போது பேசப்போகிறார்கள்? சலுகைகளைப் பெற்றுக் கொள்ளப் பழக்கப்பட்டவர்கள் உரிமைகளைப் பற்றி எப்படி சிந்திக்க முடியும்? சாதாரண, பெரும் எண்ணிக்கையிலான மக்கள் தங்கள் பிழைத்தலுக்கான போராட்டத்தோடு 'மினக்கட்டுக் கொண்டிருக்க,' அனேக தலைவர்கள் தங்கள் இருக்கைகளுக்கான போராட்டத்தில் வெற்றிபெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

'உயரமாய் வளர்ந்திருக்கும் மரங்கள் எல்லாம் உயர்ந்த மரங்கள் என்றுதான் நினைத்தோம்! ஆனால், அவை எல்லாம் உயர்ந்தவை அல்ல,' என எப்போதோ படித்த வரிகள் இப்போது நினைவுக்கு வருகின்றன. உயர் நிலையில் - உயர் தகமையில் - உயர் பதவியில் ஏன் 'உயர் பணி'யில் உள்ள பெரும்பாலானவர்கள் தங்களைப் பார்த்துக்கொள்ளும், தங்களின் கதிரைகளைப் பாதுகாத்துக்கொள்ளும் முனைப்பில்தான் இப்போது உள்ளனர்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

# புனிதர்களின் பாதையில்

### மாதமொரு புனிதரை அறிந்து கொள்வோம்

### நவம்பர்

## கன்னி, மறைசாட்சி – (கி.பி. 230)

## புனித செசிலியா



இப்புனிதையின் பெயராலே உரோமையில் 5 ஆவது நூற்றாண்டில் ஒரு பேராலயம் எழுப்பப்பட்டது. "புனித செசிலியாவின் திருப்பாடுகள்" என்னும் நூலின் காரணமாக இவரது பேரும் புகழும் நாற்றிசையிலும் விரைவில் பரவத் தொடங்கியது. கிறிஸ்தவப் பெண்குலத்தின் ஆபரணமாக இவர் இந்நூலில் காட்டப்பட்டிருக்கிறார்.

முன்பு இருந்த கட்டளை ஜெபப் புத்தகத்திலும் இவரைப் பற்றிய சில ஆதாரங்கள் கிடைக்கின்றன. அநேகமாக கி .பி 230ஆம் ஆண்டில் மன்னர் அலெக்ஸாண்டர் செவேரஸ் காலத்தில் இவர் மறைசாட்சியாக மரித்திருக்கலாம் என நம்பப்படுகிறது. 1599ஆம் ஆண்டு இவரது கல்லறை திறக்கப்பட்டது. உயர்ரக சைப்ரஸ் மரத்தினால் செய்யப்பட்ட பெட்டியில் இவரது உடல் காணப்பட்டது. அஃது அழியாத் நிலையில் இருந்தது மாத்திரமன்றி, அப்போதுதான் உயிர் பிரிந்த உடல்போலவும் இருந்தது. ஸ்டீபன் மடெர்னா என்ற சிற்பி இந்த உடலைப் பலமுறை கூர்ந்து கவனித்ததன் பயனாகப் பளிங்குக் கல்லில் இவரது உருவத்தைச் செதுக்கியிருந்தார். மத்திய நூற்றாண்டுகளிலிருந்து, "ஆலய கீதங்களுக்கு இவர் பாதுகாவலி" யாகக் கருதப்படுகிறதற்குக் காரணம் பழைய கட்டளை ஜெபப் புத்தகத்தில் "இசைக் கருவிகள் இசைத்து" என்ற சொற்றொடர் காணப்படுவதால் இவருக்கு இந்த பட்டம் சூட்டப்பட்டுள்ளது என்று கருதலாம். வரலாற்று அடிப்படையில் சீர்தூக்கிப் பார்த்தால் இவளைப் பற்றிய தகவல் அதிகம் கிடைப்பதற்கில்லை. பழைய கட்டளை ஜெபப் புத்தகத்திலிருந்து அடியிற் காணப்படும் தகவல்களை நாம் அறியமுடிகிறது.

"இந்த மகிமையான கன்னிப் பெண் எப்பொழுதும் கிறிஸ்துவின் நற்செய்தி நூலை எங்கும் எடுத்துச் செல்வார். எப்போதும் கைகளை விரித்து ஜெபம் செய்வார். உடை இவளது உடலை மூடியிருக்கும். ஆனால் உடைக்குக் கீழே முள் ஒட்டியாணத்தால் தன் புலன்களை அடக்கி, இறைவனிடம் கண்ணீர்விட்டு மன்றாடுவார்."

தனது வாழ்நாளெல்லாம் கன்னிமையில் வாழ்வதற்கு வார்த்தைப்பாடு கொடுத்திருந்தார். இவரை விரும்பிய வலேரியன் என்ற வாலிபன் இவரை மணந்து கொள்ள முயன்றார். திருமணம் நிறைவேற அனைத்தும் தயாராயிருந்தன. "இசைக் கருவிகள் எல்லாம் ஒலிக்கப்பட்டன. ஆனால் கன்னி செசிலியா தனது ஒரே மணவாளனாம் ஆண்டவருக்குப் பண் இசைத்தார். கலியாணத்திற்குப்பின் முதலிரவு வந்தது. "வலேரியன்! நான் ஓர் இரகசியம் சொல்கிறேன். கேளுங்கள். கடவுளின் தூதர் என்னை அன்பு செய்கிறார். அவரே எனது உடலை துணிச்சலுடன் காத்துக் கொள்கிறார்" என்றார். அத்தகைய தூதரை நான் காண முடியுமானால் நானும் உனது வேதத்தில் சேர்ந்துகொள்கின்றேன்" என்று வலேரியன் கூற, "ஞானஸ்நானம் இன்றி அவரைப் பார்க்கவொண்ணாது" என்றார். வலேரியன் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள உடன்பட்டார்.

அந்நாட்களில் திருத்தந்தை உர்பன், வேதகலகத்தின் காரணமாக மறைந்து வாழ்ந்தார். அவரிடம் வலேரியனைச் செசிலியம்மாள் அனுப்பினார். உடனே திருத்தந்தை மண்டியிட்டு ஆண்டவரிடம் நன்றி கூறினார். "ஆண்வரே அச்சமூட்டும் சிங்கத்தைப் போல் (செசிலியாவை) அடைந்த (வலேரியனை) அவர் உம்மிடம் ஓர் அமைதியான ஆட்டுக் குட்டியாக ஒப்படைக்கிறார்" என்றார்.

பின்னர் திருத்தந்தை வலேரியனுக்கு ஞானஸ்நானம் அளித்தார். வலேரியன் மீண்டும் தன் இல்லத்திற்கு வந்து சேர்ந்தபோது செசிலி தனது அறையில் ஜெபத்தில் ஆழ்ந்திருப்பதையும், அருகில் தேவதூதர் நிற்பதையும் கண்டு திகிலுற்றார். பிறகு அவருடைய தம்பி திபூர்சியுசும் மனந்திரும்பினார்.

அல்மாக்கியஸ் என்ற ஆளுநன் இதைக் கேள்வியுற்றான். மாக்சிமஸ் என்ற அதிகாரியை அனுப்பினான். இவர்களைச் சிறைப்படுத்தக் கட்டளையிட்டான். வலேரியனையும், திபூர்சியஸையும் கொல்லவும் ஆணை பிறந்தது.

இவர்கள் இறக்கும் நாள் அதிகாலையில் செசிலியா இவர்களை நோக்கி, "கிறிஸ்துவின் வீரர்களே, எழுவீர், இரவுக்கு உரிய செயல்களை எறிந்து போடுங்கள். ஒளியின் பேராயுதத்தை அணிந்து கொள்ளுங்கள்" என்று சொல்லி ஊக்குவித்தாள்.

இவர்கள் மறைசாட்சிகளாக மரிப்பதற்கு முன், மாக்சிமசையும் அவரது குடும்பத்தினரையும் மனந்திருப்பினார். பின்னர் செசிலி ஆளுநரிடம் அழைத்து வரப்பட்டபோது, "இயேசுவின் புனித நாமத்தை அறிக்கையிடுவோம் அவரை மறுதலிக்க மாட்டோம்" என்றார். அவர் சித்திரவதை செய்யப்பட்டார். உயிர் பிரியவில்லை. கொலையாளி மும்முறை இவரது கழுத்தை வெட்டி, இரத்த வெள்ளத்தில் மிதக்க வைத்தான். இக்கொடூரமான நிலையிலும் மூன்று நாட்கள் உயிர் ஊசலாடியது.

தனது இல்லம் எப்பொழுதும் ஓர் ஆலயமாக அமையட்டும் என்று தனது இறுதி விருப்பத்தைத் தெரிவித்தார். இதுவும் நிறைவேறியது! தனது தூய ஆன்மாவை இறைவனிடம் கையளித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செபமாலைத்தாசர் சபை ஸ்தாபகர்

# இறை அடியார் தவத்திரு பி. ஏ. தோமஸ் (அமதி) அடிகளார்

## குருத்துவ நூற்றாண்டு நினைவாக (1911 – 2011)

### இந்தியாவின் இறாஞ்சி மறை மாவட்டத்தின் பேராயர் சேவ்றின் (சே.ச) ஆண்டகையும், திருமலை - மட்டுநகர் முன்னாள் ஆயர் எல். ஆர். அன்ரனி ஆண்டகையும் தோமஸ் அடிகளாரைக் குறித்து வழங்கிய சாட்சியங்கள்

*- தொகுப்பு - அருட்திரு. பொஸ்கோ (செ.தா)*

அருட்திரு தோமஸ் அடிகளார் ஒரு குறிப்பிட்ட மக்களுக்கோ அல்லது நாட்டுக்கோ உரியவர் அல்ல. மாறாக அவர் முழு உலகத்துக்கும் சொந்தக்காரர். ஏனெனில் அவர் நிறுவிய சபை செபத்திலும் தபத்திலும் ஆணித்தரமாக அத்திவாரமிடப்பட்டது. அதனால் முழு உலகத்தையும் செபதபத்தில் இணைத்து தம் துறவிய வாழ்வைக் கற்றுக்கொடுத்தார். அந்த வகையில் எமது அண்டை நாடான இந்தியாவின் அம்பிகாபுரின் இறாஞ்சி மறை மாவட்டத்தின் பேராயர் சேவ்றின் (சே.ச) ஆண்டகை பின்வருமாறு கூறுகின்றார்:

### பயன்தரு மரம்

"ஒரு சொற்ப நேரத்துக்காவது தோமஸ் அடிகளாரைச் சந்திக்கக்கூடிய சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்கவில்லை. அவருடைய இறைபக்தியும் ஆர்வமும் என்னைப் பெரிதும் கவர்ந்தன.

அவருடைய தனிப்பட்ட வாழ்க்கையைப்பற்றி எழுதுவதற்கு எனக்குத் தகைமை இல்லாது இருந்தாலும் 18 வருடங்கள் அவருடைய சேவைகளை அவதானித்ததன் பலனாக சாட்சியம் பகரக்கூடியவனாக இருக்கின்றேன். எனது வேண்டுகோளுக்கு இணங்க அவரே 1954ம் ஆண்டு அம்பிகாபூரில் புதிதாக நிறுவப்பட்ட மறைமாவட்டத்திற்கு ஒரு சிறு மௌன தியானிகள் குழுவை அனுப்பிவைத்தார். புதிய மறைமாவட்டம் பாரிய அவலக் கெடுபிடியில் அன்று சிக்கியிருந்தது. அநேகமான மீறல்கள் மத்தியில் 'கிறிஸ்தவ மறைபரப்பினரின் முயற்சிகள்' விசாரணை செய்யப்பட்டன. விசாரணைக்கு மத்திய பிரதேச அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட உத்தியோகபூர்வமான விசாரணைக்குழு மிகுந்த திகிலூட்டுவதாக இருந்தது. இந்தக் குழுவினர் பிரதேசம் முழுவதும் சுற்றிவந்து 'மறைபரப்பினருக்கு' எதிராகவுள்ள தங்கள் முறைப்பாடுகளை குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு எல்லாத் தரத்தினரையும் அழைத்தனர்.

இச்சூழ்நிலை மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியது. இதே கூட்டத்தில் மௌனத் தியானிகள் அங்கு வந்து அம்பிகாபூருக்கு அண்மையிலுள்ள நாம்னா என்னுமிடத்தில் தங்கள் ஆச்சிரம் என அழைக்கப்பட்ட பாழ்மண்டபத்தில் குடியேறினர். தங்களை சுற்றிவர நடந்த எதிர்ப்பியக்கங்களையும் குரோத செயல்களையும் பொருட்படுத்தாது தங்கள் தியான வாழ்வையும் செபங்களையும், பரித்தியாகங்களையும் மௌனத்தையும் செயற்பாடுகளையும் மேற்கொள்ளலாயினர்.

அவர்களின் பிராத்தனைகள் விண்ணை முட்டியிருக்கவேண்டும். அந்த விசாரணைக் குழுவினரின் கண்டுபிடிப்புக்கள் பொருத்தமற்றதும் ஆதாரமில்லாதவையெனவும் அறியப்பட்டதனால் அக்குழுவின் அறிக்கைகளின் விற்பனையை மத்திய அரசாங்கம் விரைவிலே தடைசெய்தது. இந்த அடக்கமான சிறு சமூகமாகிய மௌனத்தியானிகளின் செபமே இந்த எதிர்பாராத முடிவுக்குக் காரணமாகும்.

இந்த நிஷ்களங்க ஆச்சிரமம் மந்தகதியில் பரந்து விருத்தியடைந்து முன்னேறியது. படிப்படியாக இந்து சமுதாயத்தால் அறியப்பட்டு அவர்கள் மத்தியில் முழுமையான செல்வாக்கை ஏற்படுத்தலாயிற்று. நவீன கிறிஸ்தவ சந்நியாசிகள் மௌனமாக செபிப்பதையும் வயல்களில் தொழிலாற்றுவதையும் பார்ப்பதற்காக இந்து மக்கள் ஆச்சிரமத்தைத் தரிசித்தனர். தங்களைச் சூழவுள்ள கிராமங்களில் இம்மறைபரப்பினரால் தோற்றுவிக்கப்பட்ட பலன்தரு மறைத்தொண்டுக்கு இவர்களின் தாளாத உடல் உழைப்பும் இடையீடற்ற செபங்களுமே காரணம் என்பது என் துணிவு. கிறிஸ்தவ பான்மையான தியான வாழ்வு இந்திய கத்தோலிக்க சமுதாய முயற்சிகளில் முன்னர் இடம்பெறாதிருந்தது மிகவும் வருந்தத்தக்கதொன்றாகும்.


இந்தியாவில் மறைத்தொண்டின் பலன்களை ஈனுதலுக்குக் கத்தோலிக்க தியான வாழ்வின் தேவையை 50 வருடங்களுக்கு முன்னதாகப் புரிந்துணர்ந்த பெருமை அன்றைய யாழ் ஆயர் கியோமார் அவர்களையும் செபமாலைத் தாசர்கள் மூலமாக அதை நடைமுறைப்படுத்திய தோமஸ் அடிகளையும் சாரும்.

### யார் இந்த தோமஸ் அடிகளார்?

ஆசிய தேசத்தின் அழகிய தீவாம் இலங்கைத் தீவில் யாழ் மண்ணில் 1886ம் ஆண்டு 7ம் திகதி பங்குனி மாதத்தில் திரு. திருமதி வஸ்தியாம்பிள்ளை தம்பதிகளின் புதல்வனாக பிறந்தவர்தான் இறையடியான் தோமஸ் (அமதி).

பிறப்பிலே நோயாளியாக இருந்த இவரை இறைவன் தனது கருவியாகப் பயன்படுத்தியதைப் பார்க்கும்போது எமக்கு ஆச்சரியமாக இருக்கின்றது.

தவத்திரு தோமஸ் அடிகளார் ஒரு "தவஞானி". இறைவனுக்கும் அன்னை மரியாளுக்கும் ஏற்புடைய ஒரு "தவயோகி". இவ்வுலக வாழ்வில் இவர் இறைவன் மட்டில், மரியாளின் மட்டில், மக்கள் மட்டில் கொண்டிருந்த அன்பு இவரை



இவ்வுலகிலே மகிமையடைய இறைவன் செய்தருளியிருக்கின்றார். ஆம், இலங்கையில் முதன் முதலாக "இறையடியான்" (Servant of God) என்ற புனித நிலையை இவருக்கு இறைவன் திருச்சபையூடாகக் கொடுத்திருக்கின்றார்.

எனவேதான் இவரை திருச்சபை புனிதர்களின் வரிசையில் உயர்த்தவுள்ள நிலையில் இவரின் குருத்துவ நூற்றாண்டில் இவரைப்பற்றி இவரோடு வாழ்ந்தவர்கள், இவரை நன்கு அறிந்தவர்கள், அறிஞர்கள், பெருமக்கள் எழுதிய சில கருத்துக்களை உங்களோடு பகிர்ந்துகொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன். இந்த வகையில் முன்னாள் திருமலை, மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் எல். ஆர். அன்ரனி ஆண்டகை அவர்கள் எழுதிய சிந்தனைத்திரட்டு.

### ஆசிய ஞானி

"உலகைப் படைத்த எல்லாம் வல்ல இறைத்தந்தை தமது ஞானத்தினாலும், அன்பினாலும் தமது சிறப்புப் பணிகளை நிறைவேற்ற ஒவ்வொரு யுகத்திலும், தேசத்திலும் பணியாளர்களைத் தோற்றுவிக்கின்றார். எம் மனதில் ஆபிரகாம் முதல் திருமுழுக்கு அருளப்பர் வரை பிதாப்பிதாக்கள், இறைவாக்கினர்கள், பழைய ஏற்பாட்டு அரசர்கள் முதலியோரே நினைவுக்கு வருகின்றனர். உலக மீட்புக்கான இறை நோக்கமும், திருமகன் கிறிஸ்துவின் வழியைச் செப்பனிடுதலும் இவர்களுடைய வாழ்க்கையின் குறிக்கோளாகும். இறைமகனாகிய மீட்பர் பிறந்தபோது இந்த நோக்கம் நிறைவேறியது. பின்பு புதிய ஏற்பாட்டில் திருச்சபையின் மீட்புப்பணியை தொடர்வதற்காக வானகத்தந்தை வேறு ஆண் பெண்ணினரை தோற்றுவிக்கின்றார். எங்கு பாரிய தேவைகள் ஏற்படுகின்றனவோ அங்கு தகுதியானோர் தோன்றுகின்றனர்.

இந்த புனித மக்கள் தொகுதியின் மத்தியில் தோலகட்டித் தோமஸ் அடிகளாரும் பிரபல்யமான இடத்தை வகிக்கின்றார். இலங்கையில் இன்றைய திருச்சபையில் உண்டான வெற்றிடத்தை நிரப்பக் கடவுளின் மனிதர் ஒருவர் தேவைப்பட்டார்? ஆம் இலங்கையில் திருச்சபை ஆரம்பிக்கப்பட்டு 500 வருடங்களுக்கு மேலாக இருந்தபோதும் அஞ்ஞாத வாழ்வும் தியான வாழ்வும் அதில் காணப்படவில்லை. தோமஸ் அடிகளின் மெலிந்த உருவமும் தவக்கோலமும், பரித்தியாக வாழ்க்கையும் ஒருவர் மனக்கண்முன் திருமுழுக்கு அருளப்பரைத் தேற்றுவிப்பதாகப் பலர் அபிப்பிராயப்படுகின்றனர். இந்த உடன்பாடு இத்துடன் முடிவுறவில்லை. யோர்தான் நதிக்கரையை கிறிஸ்து யேசு அண்மித்தபோது இதோ இறைவனின் செம்மறி என்று தம்முடைய சீடர்களுக்கு அருளப்பர் சுட்டிக்காட்டவில்லையா?

தமது தவசிகளை தேவநற்கருணையில் பிரசன்னமாகவுள்ள தேவனின் செம்மறியை இடையறாது ஆராதனைச் செய்யத் தோமஸ் அடிகள் இட்டுச்சென்றாரல்லவா? இறைமகன் யேசுவும் அன்னை மரியும் அருளப்பரோடு மிக நெருக்கமாக இணைந்திருந்ததுபோல தோமஸ் அடிகளார் விண்ணக உணவில் வீற்றிருக்கும் கிறிஸ்துவை இடையறாது ஆராதிப்பதோடு மரியன்னையின் திருச் செபமாலையைச் சங்கிலித் தொடர்பாகச் செபித்தலையும் இணைத்துள்ளார். இந்த ஒப்புமைகள் கற்பனையோ அல்லவோ என்றாலும் 1928ம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் செபமாலைத்தாசர் சபையை நிறுவுவதற்கு முன்னதாகவே இலங்கையில் செபதவம் அடங்கிய அஞ்ஞாத துறவு வாழ்வை ஏற்படுத்திவைக்க வேண்டுமென்ற எண்ணம் தோமஸ் அடிகளின் மனதில் அலைமோதிக்கொண்டிருந்தது.

இந்த எண்ணம் மலர்வதற்கு பதினோராம் பத்திநாத பாப்பரசரின் சுற்று நிருபமே காரணமாக அமைந்தது. வேதபோதக நாடுகளில் மௌன தியானிகள் சபைகள் மேற்கத்திய தியான சபைகளினாலோ அல்லது சுதேச மௌன சபைகள் ஏற்படுத்தப்படுவதனாலோ நிறுவப்பட வேண்டுமென பாப்பரசரின் நிருபம் கோரியது. இந்த எண்ணத்தைத் தோமஸ் அடிகள் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டார் ஆண்டகை கியோமர் அவர்களும் அவருக்கு அனைத்து உற்சாகத்தையும் அளிக்கலானார். எனவே 1928ம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் தோமஸ் அடிகளாரும் அவருடைய இளம் வேட்பினர்கள் அறுவரும் யாழ்நகரிலிருந்து 10 மைல்களுக்கப்பால் அமைந்துள்ள தோலகட்டிக் கிராமத்தில் தமது துறவற வாழ்க்கையை ஆரம்பிப்பதற்காக கைவிடப்பட்ட புனித அந்தோனியார் ஆலயத்தையும், குருமனையையும் நோக்கி பயணத்தை ஆரம்பித்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சம்பவம் நிகழலானது.

கரம்பன் பங்குத்தந்தையாக இருந்த அருட்திரு. ஏபிரகாம் அடிகள் பூசைப்பரிசாரர்களாகிய எம்மை தோலகட்டி ஆச்சிரமத்துக்கு வருடாந்த சுற்றுலாவுக்கு அழைத்துச்சென்றபோதுதான் முதன்முதலாக தோமஸ் அடிகளாரைச் சந்திக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. தோமஸ் அடிகளார் அந்த என் இளம்பராயத்தில் மதிப்பிற்குரிய மனப்பதிவை ஏற்படுத்தலானார். சில காலத்தின் பின்னர் நான் ஆரம்ப குருமடத்தில் சேர்ந்தபோது சந்தர்ப்பவசமாக குருமடத்திலிருந்து விலக நேர்ந்ததால் தோலகட்டி ஆச்சிரம வாழ்க்கையைத் தழுவிக்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்துக்கு மேற்படி மனப்பதிவே காரணமாகும். அந்தப் பிரச்சினை எனக்கு ஏற்படவில்லை. குருமாணவர்களாகிய நாம் மயிலிட்டியில் விடுமுறைக்காலங்களை கழிக்கும்போது நான் அடிக்கடி தோமஸ் அடிகளைச் சந்திக்க நேர்ந்தது. தோமஸ் அடிகளாரின் ஆளுமை மட்டுமன்றி எமக்கு பரிமாறப்படும் விருந்துகளினாலும் கவரப்பட்டமையே அந்தத் தூரத்தையும் நாங்கள் நடந்து தாண்டிச் செல்ல எங்களை ஊக்குவித்தது.

உயர் குருமடத்தைச் சேரத்தீர்மானிப்பதற்குமுன் அவர் பாதப்படிகளில் பன்னிரண்டு தினங்களாக ஆற்றிய தியானத்தின் போதுதான் அவரைக் கூடுதலாக அறியமுடிந்தது. தவசியாவதா இல்லையா என்பதே என் பிரச்சினை. களங்கட்டிய காளையாக நான் தனிமையில் அந்த மகாரிஷி முன்னிலையில் ஆறு நாட்கள் தியானம் செய்யத் துணிந்தேன். ஆறு நாள்கள் பத்து நாள்களாகிப் பன்னிரெண்டுமாயிற்று. நான் புனித பேர்னாட் உயர் குருமடத்தில் சேரவேண்டியிருப்பதையும் தத்துவ இயல் பாடத்தொடரை முடித்த பின்னரே தவசி வாழ்க்கையை மேற்கொள்ளுவதை இறுதியாகத் தீர்மானிப்பேன் என்பதையும் தோமஸ் அடிகளுக்குத் திட்டவட்டமாகக் கூறவேண்டியிருந்தது. எனினும் நான் ஆச்சிரமத்தில் சேர்ந்துகொள்ளுவேன் என்ற உன்னத நம்பிக்கை தோமஸ் அடிகளாரிடம் இருந்தது. அத்துடன் தான் எனது தந்தையாரின் உடன் மாணவராகப் புனித பத்திரிசியார் கல்லூரியில் பயின்றதாகக் கூறிவந்தார். நான் 53 நாள்கள் மாத்திரம் அகவையினனாக இருந்தபோது எனது தந்தையார் காலமானதினால் அந்தப் பன்னிரு நாள்களும் தோமஸ் அடிகளாரே எனது நிசத்தந்தையைப்போல அமைந்திருந்தார்.

அவருடைய ஆன்மீகத்தில் ஒரு சிறு பகுதியை பற்றிக்கொண்டு நான் 1948ம் ஆண்டில் உரோமைக்குச் சென்றேன். தோமஸ் அடிகளின் அறிவுரைகளுக்கமைய தியானத்துக்கு நற்செய்தியையும், ஞான வாசனைக்குரிய சிறிய புஷ்பத்தின் சுயசரிதையையும் எத்தனங்களாகக் கொண்டு நித்திய நகரில் என் வாழ்க்கையை ஆரம்பித்தேன். எனது ஏழு வருட உரோமை வாழ்க்கைக்கு அது அடித்தளமாக அமைந்தது. அக்காலத்திலும் தோலகட்டி ஆச்சிரம வாழ்க்கையின் எண்ணங்கள் என் மனதில் ஊசலாடின. தவசியாவதா, இல்லையா என்ற பழைய வினா என்னை அச்சுறுத்தியது. ஒரு பக்கத்தில் எனது பங்குத்தந்தை இதற்குச் சாதகமாக ஆலோசனை கூறினார். மறு பக்கத்தில் எனது ஆயர் நான் திருநிலைப்படுத்தப்படும்வரை என் தீர்மானத்தை ஒத்திவைக்குமாறு தூண்டினார். பிந்திய ஆலோசனை என்னை ஆட்கொண்டது, தீர்மானமுமாயிற்று. பின்னோக்கிப் பார்க்கும்போது தூய ஆவியானவர் ஆச்சிரம வாழ்வைவிட வேறு பணியை எனக்கு ஏற்படுத்தியிருந்தார் என்பது இப்போது எனக்குப் புலனாகின்றது.

இருந்தும் நாலு வருடங்கள் நான் தோலகட்டி ஆச்சிரமத்தின் இயக்குனராகப் பணியாற்றியதை ஒரு பெரும் வரப்பிரசாதமாகக் கருதுகிறேன். அப்போதுதான் தோமஸ் அடிகளின் நற்செய்தியிலும் மீட்பரின் தகிக்கும் அன்பிலும் அடித்தளங்கொண்டிருந்த விசாலமான ஆத்மீகத்தை உற்றுணர்ந்தேன். தமது தவசிகளில் அவர் தோற்றுவித்த ஆன்மீக வாழ்க்கையில் ஏதும் குறைபாடுகளோ, பிணிப்புகளோ சிறிதும் இருக்கவில்லை. அவர் அறிவும், ஞானமும் நிறைந்தவர். நித்திய வாழ்வின் முன்சுவை உணர்வுள்ளவர். அவர் இறைமட்டில் உண்மை உணர்வுங் கொண்டவர். முதுமையும், தளர்வும் உண்டான காலத்தில் மனித இயல்புகளின் சாதாரண குறைபாடுகளுக்கு அவர் உட்பட்டிருக்கலாம். ஆனால் இவற்றைத் தமது ஆழ்ந்த விசுவாசத்தினாலும், பாறை போன்ற வைரமான நம்பிக்கையினாலும் மேற்கொள்ளலானார். இவர் தமது தியானிகளோடு கழித்த முதல் இருபது, முப்பது வருடங்கள் ஆசிய திருச்சபையின் வரலாற்றில் ஈடிணையற்ற காலமாகும். இதற்கு அவரோடு ஒருங்கிணைந்த பலர் சாட்சியம் பகர்வர். அவர்களிற் சிலரைத் தாமே பயிற்றிக் குருக்களாக்கினார். தான் உருவாக்கிய செபமாலைத்தாசர் சபைக்குருக்கள் எவரேனும் தமது பணியைத் தமக்குப் பின் தொடர்ந்து ஆற்ற தலைமை இல்லத்தில் இல்லாமையே அவருக்கு அந்திய நாட்களில் உண்டாயிருந்த பெருவிசனமாகும்.

அவருக்கு 72ம் பராயம் நடக்கும்போது அவருடைய செப்புத்தகத்துக்குள் வைக்கப்பட்டிருந்த ஒரு துண்டுக் காகிதத்தை நான் கண்டெடுத்தேன். (தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கியச் சாளரம்

## கவிதைக் களம்

### நட்பு

முள்ளில் வளர்வது ரோஜா
கொடியில் வளர்வது மல்லிகை
நீரில் வளர்வது தாமரை
எனது உள்ளத்தில்
வளர்வது நட்பு!

நிழலில் வளர்வது மிருகம்
மரத்தில் வளர்வது பறவை
எனது நெஞ்சில்
வளர்வது கல்வி!

எங்கு சென்றாலும்
எப்போது சென்றாலும்
என்னை விட்டுப்
பிரியாதது நட்பு!

*கி. மேரி கிருஸ்பினா,*
*சிறுமியர் இல்லம்,*
*பூவரசங்குளம்.*



### நரை முது சமுதாயம்

ஆழப்புதைந்த வேர்கள்
ஆண்டாண்டு காலம்
மண்ணுக்குள் புதைந்து
மரத்தை வளர்ப்பதுபோல்
சமூகம் எனும் விருட்சம்
சிறப்புற்று வாழ
முதுநரை முதியோர்
சேவையும் பங்கும்
எம் தேசத்திற்கு வேண்டும்.

கோடியாண்டு கண்ட சமூகம்
கொள்கை மறந்து
இளந்துடிப்புடன்
இளஞரெல்லாம்
இங்கிதம் பேசும் காலம்.
மங்கி மறையா
மாணிக்கம் போன்ற
முதியவரின் சேவை பல
இன்றும் உண்டு நாட்டில்.
கைத்தொழில் அபிவிருத்தி
கனவாய் பெருகியபோதும்
களப்பைத் தொட்டு உடல்
தளர்ந்து மூத்தோர்
நின்றபோதும்
நரைதிரைகூடி
அனுபவ மூப்பால்
மூத்தோனே முதல்வனாய்
உள்ளாய் நாட்டில்.



உரம் சேர்க்கும் வலியோர்
அனுபவச் சோலையிலே
பட்டைதீட்டிய கத்திகளாய்
அபிவிருத்திப் பாதையில்
நாட்டை உயர்த்துவர்.

முதியவர் என்றால்
பழசு என்று
பார்த்தவரெல்லாம்
ஒதுங்கும் காலம்.

வயோதிபர் இல்லம்
வாசல் தேடி
உழலும் மூத்தோர்
இன்றும் உள்ளார்.

*பு. டனிஸ் ஷர்மிலன்,*
*இல.95, முதலியார் குளம்,*
*செட்டிகுளம்.*

### உயிரின் வலி

இழப்புக்கள் எங்களுக்கு
பெரிதில்லை,
இந்த ஊனமும் எங்களுக்கு
பெரிதாகவில்லை,
ஏனெனில் எம்
நெஞ்சத்திலுள்ள
தன் நம்பிக்கை
என்றும் ஊனமுறவில்லை.

புதுயுகம் எனும் புயலாக
எழுந்துவிட்ட எம் ஊனம்
புதுயுகத்தில் ஓர் புதிரானது.
எம் தன்னம்பிக்கை
ஓங்கி ஒலிக்க என்றும்
எங்கள் புதுயுகச்
சேவை தொடரட்டும்!
அதுவரையும் நாம்
வாழ்ந்திடுவோம்
இவ்வுலகில் இனிமையாய்!

*S. டயானா,*
*பெரியகுளம்.*
*பறப்பாங்கண்டல்.*



# சிறுவர் பொழிவு

சிறுவர் கதை

## உண்மையான நட்பு வேண்டும்

*றொ. மெனாலின், யோசப்வாஸ் நகர், தோட்டவெளி.*

ஆற்று நீர் சலசலத்தோடும் தண்ணீரூற்று அழகிய கிராமம். வடக்கே முருகன் ஆலயமும் தெற்கே மாதா கோவிலும் கிழக்கே யாமிஆ பள்ளிவாசலும் அமைந்த சமரச கிராமம் அது. சதீசும், சகீவும் அக்கிராமத்திலே பிறந்தவர்கள். அவ்வூர் பாடசாலையில் ஒன்றாகப் படித்தவர்கள். நல்ல நண்பர்கள்.

ஒரு நாள் அவர்கள் இருவரும் விளையாடுவதற்கு கடற்கரைக்கு சென்றனர். அவர்கள் கடற்கரையில் விளையாடிக்கொண்டு இருந்தபோது ஏதோ ஒன்று தூரத்தில் ஒளிவீசியது. அவர்கள் அது என்ன என்று சென்று பார்த்தபோது ஒரு சங்கிற்குள் அவ்வொளி வீசியது. அவர்கள் அந்தச் சங்கை எடுத்தனர். அப்போது சங்கின் மேற்பகுதியில் ஏதோ ஒன்று எழுதப்பட்டிருந்தது. அப்போது அவர்கள் கடற்கரையிலிருந்த ஒருவரை அழைத்து, "இச்சங்கில் எழுதியுள்ளதை வாசியுங்கள்" என்று கூறினர். அவர் சங்கைப் பார்த்து, "இதில் ஒன்றும் எழுதவில்லையே" என்று கூறினார். அப்போது சதீஸ், "இச்சங்கில் எழுதியுள்ளது நமக்கு மட்டும் தான்தெரியும்போல் இருக்கிறது" என்றான். சகீவ், "அப்படியானால் நாம் அதிஸ்டகாரர் அல்லவா? சரி வா சதீஸ் இதைக் கொண்டு நாம் வீடு செல்லலாம்" என்றான். இருவரும் இதைப் பற்றி கதைத்துக்கொண்டு வீடு வரைக்கும் சென்றபோது, "நண்பா இச்சங்கை யார் பாதுகாத்து வைப்பது? சதீவ் நீயே உன் வீட்டில் பத்திரமாக வை" என்றான் சதீஸ். "நண்பா இதை நீயே வைத்துக்கொள்" என்றான் சகீவ். "இல்லை நீயே வைத்துக்கொள்" என்றான் சதீஸ். இப்படி அவர்கள் மாறி மாறிக் கூறனார்கள். அப்போது சதீஸ், "நாம் இதைக் கொண்டுசென்று பள்ளிவாசலில் பத்திரமாக வைத்து நாளை எடுப்போம்" எனக் கூறி அங்கே வைத்தனர்.



விடிந்ததும் அவர்கள் அச்சங்கை எடுத்துக்கொண்டு விளையாட மீண்டும் கடற்கரைக்குச் சென்றனர். அவர்கள் ஒரு மறைவான இடத்திலிருந்து சங்கை உற்றுப் பார்த்தனர். அப்போது அதிலிருந்ததை அவர்கள் வாசிக்க தொடங்கினர். வாசித்த பிறகு அச்சங்கிற்குள் இருந்து ஒரு இரத்தினக்கல் வெளியே வந்து ஒளி வீசியது. அவ்வொளியைப் பார்த்து வியந்தனர். அவ்வொளி, "என்னைக் கண்டெடுத்த நீங்கள் அதிஸ்டசாலிகள்" எனப் பேசத் தொடங்கியது. அப்போது அவர்கள், "நீ யார்?" எனக் கேட்க, அது "நான் நான் ஒரு மந்திரக்கல். என்னிடம் எதையும் கேட்டால் நான் கொடுப்பேன்" என்றது. "என்னை ஒருவர்தான் வைத்திருக்க முடியும். அவர்களுக்குத்தான் கேட்டதையெல்லாம் கொடுப்பேன்" எனக் கூறியது. அப்போது சதீஸ் "நீயே வைத்துக்கொள்" என்றான். சகீவ், "இல்லையடா நீயே வைத்துக்கொள்" என்றான். இவ்வாறு அவர்கள் மாறி மாறிச் சொல்லிக்கொண்டிருந்தனர்.

அந்த மந்திரக் கல் அவர்களது உண்மை நட்பை புரிந்துகொண்டது. "இருவருக்கும் நான் கிடைப்பேன். கவலை வேண்டாம். நான் உங்களது உண்மை நட்பை புரிந்து கொள்வதற்காகத்தான் உங்களை சோதித்துப் பார்த்தேன்" என்று கூறியது. அவர்கள் அந்த மந்திரக்கல்லை நற் தேவைக்காகப் பயன்படுத்தி வாழ்வை நன்றாகக் கழித்தனர்.

# சிரிப்பு(பூ)க்கள்

ஒருவர் : தமிழ் பண்டிதரே அந்த டான்ஸ் ரீச்சர் ஏன் உங்களுக்கு கன்னத்தில அடிசிட்டு போரா?

பண்டிதர் : தமிழில் வாழ்த்தினதுக்கு!

மற்றவர் : அடப்பாவமே! சரி அப்ப எப்படித்தான் வாழ்த்தினீங்கள்?

பண்டிதர் : "ஒரு காலத்தில் நீங்கள் சரியான ஆட்டக்காரர் என்று எனக்கு தெரியும். இப்பவும் ஆடுறீங்களா? சரி ஆடுங்கோ" என்றுதான் வாழ்த்தினேன்.

****

ரவிக் பொலிஸ் : எந்த தயிரியத்திலடா நீ லையிசன்ஸ் இல்லாம வந்தாய்?

வந்த நபர் : நூறு ரூபா இருக்கு என்ற தைரியத்திலதான்

*- பி. அன்ரனிகுறுஸ் சரண்சலாமேரி,*
*துட்டுவாகை, நேரியகுளம்.*

நீதிபதி : பொலிஸ் வீட்டில் ஏன் நீ இரண்டு தடவைகள் திருடினாய்?

கள்ளன் : ஐயா, நான் முதல் தடவை திருடிவிட்டு வாசல்படியை பாக்கும்போது, "நன்றி மீண்டும் வருக" என்று எழுதியிருந்துச்சு.

****

விமலா : கீதா உன் வீட்டில் தினமும் சண்டையாக உள்ளதே

கீதா : நான் அவரின் சேட்டை அயன் பண்ணி குடுக்க அவர் எனக்கு கன்னத்தில் அடித்துவிட்டார்.

விமலா : நீ நல்ல காரியம்தானே செய்திருக்கிறாய்?

கீதா : இல்லை, அவர் சேட் போட்டுக்கொண்டிருக்கும்போது நான் அயன் பண்ணிவிட்டேன்.

*ம. டிசாளினி, 47/2, தாஸ்கோட்டம்,*
*நெளுக்குளம், வவுனியா.*

ராமு : வைக்கோல் சாப்பிட்டால் கண் பார்வை நன்றாகத் தெரியுமா? தாமு : யாரும் அப்படிச் சொல்லவில்லையே!

ராமு : என்னடா? தாமு : எந்த மாடாவது கண்ணாடி போட்டிருக்கா? வைக்கோல் சப்பிடுவதன் காரணம் அதுதான்!

*ச. அஸ்ரோ அகஸ்ரன், அச்சங்குளம்.*

# மன்னா விளம்பரப் பலகை

உலகம் நீங்கள் கொடுப்பதை மணலில் எழுதுகிறது
நீங்கள் பெறுவதை இரும்புக் கைகளால் எழுதுகிறது.

*- யே. றொசாளினி, பிடாரிகுளம், முருங்கன்.*

- "துணிவுள்ள மனைவியை அடைந்த கணவன் வாழ்வில் அனைத்தையும் பெற்றவன் ஆவான்."
- "உன் முதுகில் குத்தவருபவனுக்கு நெஞ்சைக் காட்டு. உன் அன்பின் பார்வை அவனையும் மனிதனாக்கும்."
- "போதும் போதும் என்றபோதும் பணத்தை தேடி ஓடும் மனிதனின் கடைசி வழி மரணக்குழி"
- "இளைஞர்களே! நீரோடை அருகில் வளரும் றோஜாவைப் போன்றது உங்கள் வாழ்வு. அதை பயன்படுத்திக் கொள்ளுங்கள்"

*- ஜெ. இ. காஞ்சனா,*
*வேப்பங்குளம், நேரியகுளம்.*

- "பிறரை அன்பு செய்வதைவிட மேலான மகிழ்ச்சிக்குரியது வேறொன்றுமில்லை."
- "ஒரு மனிதனின் ஆடையைவிட அவனது முகமே அவனைப்பற்றிய சரியான தகவல் தருகிறது."
- "வாழ்வு ஒரு கல்வி நிலையம். அன்பு செய்யக் கற்றுக்கொள்பவர்கள் மேலான பட்டம் பெறுகின்றனர்."

*அ. தர்சினி தற்குருஸ்,*
*தரவன்கோட்டை, மன்னார்.*

- "விடைபெறும் வேளைகளில் அன்பான வார்த்தைகளைப் பேசுங்கள். ஒருவேளை நீங்கள் வாழ்வில் மறுபடியும் சந்திக்காமலே இருக்கக்கூடும்"
- "அதிகமாக ஆசைகொள்ளும் பொருளில்தான் விரைவாக வெறுப்புத் தோன்றும்"
- "சுலபமாகவே எல்லாம் முடிந்துவிட்டால் வாழ்க்கையில் சுவை என்பதே இராது"
- "வெற்றி என்பது பெற்றுக்கொள்வது தோல்வி என்பது கற்றுக்கொள்வது"
- "வலிக்காமல் இருப்பதில்லை சிறகுகள். என்றாலும் பறக்காமல் இருப்பதில்லை பறவைகள்"

*- யோ. யோணியா, H5 மடுக்கோயில், மடு.*

- "சோகம் என்னும் புயல் காற்று வீசும்போது நம்பிக்கை என்னும் குடைதான் நம்மைக் காப்பாற்றக்கூடியது."
- "இதயம் றோஜாப் பூவாக இருந்தால் பேச்சில் அதன் வாசனை தெரியும்."
- "இதயம் முழுக்க அன்பு இருக்கும்போது உலகம் முழுவதும் அழகாகவே இருக்கும்."

*தா. சங்கீதா,*
*ஆத்திக்குழி.*
*முருங்கன்.*

அன்பைப் பார்க்க இயலாது
ஆனால் மறைக்கவும் முடியாது.

*- யே. நிலோஜினி,*
*பொன்தீவுகண்டல், அளவக்கை.*

[illegible] இருக்கக்கூடிய சிந்தனைகளை நீங்களும் எழுதி அனுப்புங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்மீன்களை நோக்கி .....

– ஆங்கில மூலம் –

தொடர் கட்டுரை

அமரர். அருட்கலாநிதி பப்ரிஸ் குருஸ் FSC

அத்தியாயம் – 09

*தமிழாக்கம்: அ. யோ. மரியநாயகம் சோசை J.P வங்காலை.*

## யங்கோன் கடுகதியில் இருந்த இளம் யுவதி

"உயர்வை நோக்கி உண்மையாக உழை" என்ற தலைப்பிலான கருத்தரங்கைத் தொடர்ந்து கண்கவரும் நகரமான மேமையோவில் எங்களது ஞான ஒடுக்கம் ஆரம்பமாகியது. அது முடிவுற்றதும் நாடோடிகள் பிரதிநிதிகளின் தலைவரும், எனது நண்பருமான சகோதரர் லெயனார்ட் லூயிஸ் உடன் சுறுசுறுப்பான நகரமாகிய மண்டேலேவிலிருந்து மே மாதம் 1ம் திகதி யங்கொன் கடுகதியில் ஏறினோம்.

சரியாக மாலை 5.30 மணிக்கு யங்கொன் கடுகதி மண்டலே புகையிரத நிலையத்தில் இருந்து புறப்பட்டவேளை எல்லாம் ஒழுங்காக இருந்தது. பகட்டான சூரிய அஸ்தமனம், தனது கணக்கிலடங்கா கதிர் வர்ணங்களை அடிவானத்தில் வீசிக்கொண்டு வசீகரமாகத் தோற்றமளித்தது. தூரத்தில் தெரிந்த ஏற்ற இறக்கமான மலைகளும் பச்சைப் பசேலென்ற பரந்த நெல் வயல்களின் காட்சிகளும் இருள் சூழ்ந்ததைக்கூடத் தெரியாமல் எம்மை மெய்மறக்கச் செய்துவிட்டன. யங்கொன் கடுகதி ஒரு புகையிரத நிலையத்தை நெருங்கும்போது அமைதிக்கு அச்சம் ஊட்டும் வகையில் அது ஊதிய பயங்கர விசில் ஒலிமட்டும் காதைத் துளைத்தது. திடீரென ஒரு கீச்சிடும் பயங்கர சப்தத்துடன் புகையிரதம் தடைப்பட்டு நின்றுவிட்டது. அப்பொழுது நேரம் இரவு 10.30 மணி.

எங்களுடைய புகையிரதப் பெட்டிக்குள்ளே உள்ள பயணிகள் சற்றுத் திகிலுடன் ஒவ்வொருவிதமான அபிப்பிராயங்களைப் பகிர்ந்துகொண்டார்கள். எனது நண்பர், சகோதரர் லெயனார்ட் பர்மிய மொழியில் அவர்கள் பேசுவதை எனக்கு மொழிபெயர்த்துக்கொண்டிருந்தார். சிலரின் கூற்றுப்படி மண்டலே கடுகதியை போகவிடுவதற்காக தமது புகையிரதம் நிறுத்தப்பட்டுள்ளது என்றும், சிலர் சமிக்ஞை விழவில்லை என்றும், இன்னும் சிலர் நிட்சயமாக அது ஒரு இயந்திரக் கோளாறுதான் என்றும் பேசிக்கொண்டனர்.

வெளியிலே இருளாக இருந்தபடியால் புகையிரத நிலையத்தின் பெயர் தெளிவில்லாமல் இருந்தது. காலையில் சூரியன் எழுந்ததும் பிரயாணிகளுக்குள்ளே ஒரு வகை சிரிப்பு ஏற்பட்டது. காரணம் அந்தப் புகையிரத நிலையத்தின் பெயர் 'சீமையோ' அதாவது 'தங்க நகரம்'. சங்கடமான இயந்திரக் கோளாறு ஏற்படுவதற்கு என்ன ஒரு இடம்! நாங்கள் அங்கு காலை 8.30 வரையும் காத்திருந்தோம். மற்றுமோர் எஞ்சின் இன்னுமொரு புகையிரத நிலையத்தில் இருந்து பயணிகளின் ஆரவாரத்தினூடே வந்துசேர்ந்தது.

நாங்கள் எங்களுடைய புகையிரதப் பெட்டியினுள் தூக்கமற்ற இரவில் சோர்ந்து ஒன்றும் செய்யமுடியாத நிலையில் இருக்கும்பொழுது எங்களது சோர்ந்த மனதை 'கின் திட்டா சுவி' என்ற ஒரு இளம் யுவதி தனது சுறுசுறப்பான நடவடிக்கையால் உற்சாகமூட்டிக்கொண்டிருந்தாள். அவள் எல்லோருடைய கண்களுக்கும் ஒரு கவர்ச்சியாக இருந்தாள். அவள் தன்னுடைய தாய்க்கும், இரண்டு மாமிகளுக்கும் அவர்களுடைய பிள்ளைகளுக்கும் எப்படி சுறுசுறுப்பாக சேவை செய்துகொண்டிருந்தாள் தெரியுமா? அவர்கள் ஒவ்வொருவருக்கும் மாறிமாறி உதவி செய்து தனது சேவையை உற்சாகத்துடன் செய்துகொண்டிருந்தாள். அவள் தன்னுடைய சின்னச் சகோதரர்களையும், சகோதரிகளையும் கழுவி புத்துயிர் ஊட்டிக்கொண்டிருந்தாள். பின்னர் ஒரு தாய் தன் பிள்ளைகளுக்கு உணவு ஊட்டுவதுபோன்று ஊட்டிவிட்டாள். கடைசியாக தனது இளைய சகோதரிக்கு உடுத்தினாள். அக்குழந்தை அன்பும் கவர்ச்சியும் நிறைந்த ஒரு பொம்மையைப்போன்று இருந்தாள். அங்கிருந்த அனைவருக்கும் கையசைத்து தனது அன்பை காட்டிக்கொண்டிருந்தாள். அவளுடைய உற்சாகத் தன்மையில் நாங்கள் அனைவரும் மெய்மறந்திருந்தோம்.




அவள் சகோதரர் லெயனார்ட்டிடம் வந்து பர்மியப் பாசையில் சம்பாஷனையில் ஈடுபட்டிருந்தாள். நான் அவளைப்பற்றிய எனது உள்ளக்கிடக்கைகளையும், பாராட்டையும் தெரிவிப்பதாக சகோதரர் மூலம் அவளுக்குத் தெரியப்படுத்தினேன். அவள் என்னைப் பார்த்து ஒரு பரந்த புன்னகை செய்தாள். அவளுக்கு ஆங்கிலம் ஓரளவு பேசமுடியும் என்றும் பல்கலைக்கழகம் சேருவதற்காக பரீட்சை எழுதிவிட்டு முடிவுக்காகக் காத்திருக்கிறாள் என்றும் படிப்படியாகத் தெரிந்துகொண்டேன்.

மியன்மாரைப்பற்றி என்னுடைய அபிப்பிராயத்தை அவள் தனது தடைப்பட்ட - ஆனால் சரியான ஆங்கிலத்தில் கேட்டாள். மியன்மார் ஒரு வசீகரமான ஊர் என்றும் அங்குள்ளவர்கள் மிகவும் அழகான கவர்ச்சிகரமான உபசரணையுள்ள மக்கள் என்றும் கூறினேன். அவள் அதைக் கேட்டு மிகுந்த மகிழ்ச்சி அடைந்தாள். சரியாக காலை 8.30 மணிக்கு அங்கிருந்துவந்த எஞ்சினின் உதவியுடன் புகையிரதம் புறப்பட்டது. புகையிரதம் வேகமாகச் செல்லத் தொடங்கியதும் கின் திட்டா சுவி தனது தாய்க்கும் மாமியாருக்கும் அவர்களுடைய குழந்தைகளுக்கும் மறுபடியும் உதவிசெய்யத் தொடங்கினாள். மேலே இருந்து எடுத்து தனது சிறு சகோதரர்களுக்கும் சகோதரிகளுக்கும் உணவு ஊட்டினாள். பின்னர் அந்தப் பொதிகளை இருந்த இடத்தில் வைத்தாள். 'சேவையாளி' என்ற சொல் அவளுடைய முகத்திலே எழுதப்பட்டிருந்தது! அவளுடைய உற்சாகமும், ஊக்கமும் தனது குடும்பத்துக்கு உதவிசெய்யக்கூடிய ஊக்கத்தை அவளுக்கு அளித்திருந்தது. நாங்கள் யங்கொனை நெருங்கிக்கொண்டிருக்கும் பொழுது அவள் என்னிடம் வந்து கூறினாள், "சகோதரரே அடுத்தமுறை நீங்கள் யாங்கொனுக்கு வரும்பொழுது தயவு செய்து எங்கள் குடும்பத்தை வந்து சந்தியுங்கள், நீங்கள் மிக அன்பாக வரவேற்கப்படுகின்றீர்கள்". "நான் கண்டிப்பாக வருவேன் அந்த நாளை நான் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்" என்று கூறினேன். யங்கொன் கடுகதியின் நீண்ட பயணம் வருங்காலத்தில் எனது நினைவுகளில் நீங்காது நிற்கும் கின் திட்டா சுவியின் அன்புக்கும், சேவைக்கும் மிக்க நன்றி.

## செபமாலைத்தாசர் சபை ஸ்தாபகர் ... 11ஆம் பக்கத் தொடர்ச்சி

"இன்று எனக்கு வயது 72. எந்த உயிர்ப்பிராணியையும் கொல்லாதீர் எறும்பு உட்பட" என வரையப்பட்டிருந்தது. அவர் எவ்வாறு சிருட்டிகரோடு இணைந்திருந்தார் என்பது புலனாகிறது. இவர் புனித பிரான்சிஸ் அசிசியைப்போல இயற்கையின் காதலராகவும் இறைவனின் சிருட்டிகளில் மிகுந்த மதிப்புக் கொண்டவராகவும் இருந்தார் என்பது வெள்ளிடைமலை. பவுல் அப்போஸ்தலர் கூறுவதுபோல நாம் அருள் நிலையில் இருக்கும்போது சிருட்டிகளோடு ஆன்மீக உடன் பிறவிகளாகிறோம். அருள் வாழ்வு என்பது தெய்வீக வாழ்வில் நாம் பங்குகொள்வதற்கு இறைவனால் அருளப்பட்ட வரமெனப் புனித இராயப்பரும் கூறுகிறார்.

நித்திய பிதா தமது நேசமகன் வழியாகக் காலாகாலமாக அற்புதங்களை நிகழ்த்துகின்றார். யேசுவினதும் மரியன்னையினதும் நேச தாசராகிய தோமஸ் அடிகள் மூலமும் இதை ஆற்றியுள்ளார். பத்திமாவிலும் லூர்து மலையிலும் தேவ அன்னையால் எடுத்தோதப்பட்ட செபதப உணர்வுகள் இந்த ஆச்சிரமத்தின் வாழ்க்கை முறையாக அமைந்துள்ளன. தோமஸ் அடிகளார் அமலமரித்தியாகியாக வாழ்ந்து மறைந்தபோதிலும் தமது தியானிகளை இச்செபதப உணர்வில் வழிநடத்திய முதல்வராவார். அவருடைய அந்திய வாழ்வுக் காலத்தின் இறுதி சில வருடங்களில் சிறிய புஷ்பத்தின் புனித தந்தையைப்போல அவருடைய புத்தி சித்தம் தெளிவற்றதாக இருந்தது. ஆய்வுக்கு அப்பாற்பட்ட இறைவனின் திட்டப்படி இவர் அந்திய வருடங்களில் அனுபவித்த வேதனை விதனங்கள் இவருடைய ஆப்த செபமாலைத்தாசருக்கு எதிர்கால அருட்சுனையாக அமையுமா?

ஒரு சிறு சம்பவத்துடன் இந்த ஆய்வுரையை முடிக்க விரும்புகின்றேன். 1965ம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் தோமஸ் அடிகளின் பணிகளின்பேரில் ஆர்வம்கொண்ட அருட்திரு பீற்றர் அ.ம.தி அடிகள் தோலகட்டி சகோதரர்களுக்கு வருடாந்த ஞானதியானத்தைப் போதித்துக்கொண்டிருந்தார். சிற்றாலயத்தின் பின்புறத்தில் உள்ள அறையில் அவர் தங்கியிருந்தார். இரு அறைகளுக்கும் பொதுவான ஒரு சாரளம் அமைந்த பக்கத்து அறையில் நான் உறங்க நேர்ந்தது. ஓர் இரவு, ஓர் அரவம் என்னைத் துயிலெழச் செய்தது. என் மின்குமிழை இயக்கிப் பார்த்தபொழுது நேரம் காலை இரண்டு மணி. திரும்பக்கேட்ட அரவம் மனிதக்குரலெனப் பகுத்துணர்ந்தேன். அப்போது ஈனக்குரலில் "பீற்றர் அடிகளே சேமம் எவ்வாறு?" என வினவியது. பீற்றர் அடிகள் மறு உத்தாரமாக "உங்கள் சேமம் எவ்வாறு?" என உசாவினார். இந்த ஈனக்குரல் தோமஸ் அடிகளாருடையது என்பதை நான் உடனே மட்டுக்கட்டிக்கொண்டேன். ஏனெனில் பல வருட காலமாக இக்குரலொலி எனக்குப் பழக்கமாக இருந்ததாகும்.

இந்த மௌன தியானிகளின் சபையின் ஆண் பெண் கிளைகள் இலங்கையிலும், இந்தியாவிலும் செழிப்படைந்திருக்கின்றதென்றால் அதன் நிறுவுனர் தமது பணியில் தனித்திருக்கவில்லை என்ற உண்மை புலனாகிறது. ஆசிய நாடுகளில் திருச்சபையின் விருத்திக்கு தோமஸ் அடிகள் இறைவனின் கரங்களில் ஓர் எத்தனமாக விளங்குகிறார் என்பது அறியக்கிடக்கிறது".

இவ்வாறு எல். ஆர். அன்ரனி ஆண்டகை அவர்கள் இறையடியார் தோமஸ் சுவாமியைப்பற்றி தனது சிறுவயது அனுபவங்கள் தொடக்கம் பலவற்றை வெளிப்படுத்தி இந்த இறையடியாரின் புனிதத்தன்மைக்கு மெருகூட்டியுள்ளார்.

## உங்களுக்குத் தெரியுமா?
## மறையறிவுப் போட்டி- 99

இம்மாதத்துக்கான வினாக்கள் திருவெளிபாட்டின் 13ம் அதிகாரம் முதல் 22ம் அதிகாரம் வரையிலான பகுதிகளிலிருந்து தொகுக்கப்படுகின்றன.

ஆதிக்கிறிஸ்தவர்கள் உரோமைப் பேரரசினால் துன்பப்படுத்தப்பட்டவர்கள் என்பதை நாம் ஆரம்பத்தில் பார்த்தோம்.

உண்மையில் இது இறை விசுவாசத்திற்கும் தீமைகளுக்கும் ஏற்பட்ட - ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற ஒரு யுத்தம்தான். அது இன்றும் நடந்துகொண்டிருக்கின்றது. நன்மைக்கும், தீமைக்கும் எதிரான போர். அன்புக்கும், வன்செயலுக்கும் எதிரான போர்.

ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொருவிதமான தீமைகள், சாத்தானின் கருவிகளாக மாறிவிடுகின்றன. இந்நாட்களில் மது, போதைப்பொருள், பரத்தமை, அகங்காரம், வன்மம், பகை ஆடம்பரம், ஆசை, அரசியல் எல்லாம் சாத்தானின் கருவிகளாகக் கோரத் தாண்டவமாடுகின்றன.

கூடிச்செபித்தல், பகிர்ந்துண்ணல், சொத்துக்களை பொதுமைப்படுத்தல், ஆசை தவிர்த்தல் என்று வாழ்ந்த மக்களுக்கு சவாலாக இருந்தவை உரோமைப் பேரரசின் ஆட்சியதிகாரமும், பெரிய அளவிலான வலிமையும், செல்வமும், செல்வாக்கும் ஆகும்.

13: 1 - 4 இல் குறிப்பிடப்படும் கடலிலிருந்து வெளிப்படும் விலங்கு உரோமைப் பேரரசைச் சுட்டிநிற்கின்றது. ஏழு தலைகள் உரோமையின் 7 பெரிய அரசுகளையும், 10 கொம்புகள் பத்துச் சிற்றரசுகளையும் குறிக்கின்றன. மணிமுடியும், ஆபரணங்களும் செல்வாக்கையும், செல்வச் செழிப்பையும் சுட்டிக்காட்டுகின்றன. அதன் கொடுமையையும், கொடூரத்தையும் குறிக்கும் வார்த்தைகள்தான் - அவ்விலங்கு சிறுத்தையைப்போலிருப்பதும் கரடியின் கால்களையும், சிங்கத்தின் வாயைக் கொண்டிருப்பதும் ஆகும்.

நீரோ மன்னன் உரோமைத் தலைவர்களுக்குப் பயந்து கிழக்கு நாடுகளில் தஞ்சமடைந்தான். அதுதான் பாம்பின் தலையில் ஒன்று படுகாயப்பட்டிருந்ததாகக் குறிப்பிடப்படுகின்றது. ஆனால் படுகாயம் குணமாகிவிட்டது. என்பது அவன் உயிருடன் இருக்கின்றான் என்ற சேதியாகும்.

### இனி நமது வினாக்களுக்கு வருவோம்.

1. வலக்கையிலோ, நெற்றியிலோ பெயரை அல்லது அது குறிக்கும் எண்ணைக் குறியிடாதவர்களால் என்ன செய்யமுடியவில்லை?
2. அறுநூற்று அறுபத்தாறு என்ற எண் எதைக் குறிக்கிறது?
3. நடுவானில் பறந்துகொண்டிருந்த வானதூதர் அறிவித்த எல்லா மக்களுக்குமான நற்செய்தி என்ன?
4. இறுதியான எந்த வாதைகளோடு கடவுளின் சீற்றம் முற்றிலும் தணியும்?
5. மூன்றாம் வானதூதர் தம் கிண்ணத்திலிருந்ததை எதன்மீது ஊற்றினார்?
6. கருஞ்சிவப்பு விலங்கின்மீது அமர்ந்திருந்த பெண் எதைக் குடித்து வெறிகொண்டிருந்தாள்?
7. 18ம் அதிகாரம் எந்த நகரின் வீழ்ச்சியைப் பற்றிக் கூறுகிறது?
8. மணமகள் அணியுமாறு பளபளப்பான தூய்மையான விலையுயர்ந்த மெல்லிய ஆடை அவருக்கு அளிக்கப்பட்டது. அந்த ஆடை எது?
9. அலகை என்றும் சாத்தான் என்றும் அழைக்கப்பட்ட அரக்க பாம்பை வானதூதர் எத்தனை வருடங்களுக்குக் கட்டிவைத்தார்?
10. இறந்தோருள் சிறியோர் பெரியோர் அரியணையின்முன் சூழ்ந்திருக்க வாழ்வின் நூல் திறந்து வைக்கப்பட்டது. அதில் என்ன எழுதியிருந்தது.?

### இல. 97 இற்கு 13 பேர் விடையளித்திருந்தனர்

### இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவு செய்யப்பட்ட அதிஸ்ரசாலி :

*வெலிச்சோர் மயூறினி, பொன்தீவுகண்டல், முருங்கன்.*

### பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள்

01. எஸ். பிரான்சிஸ் ரமா.
02. வி. மேரி கொன்சியா,தெற்கிலுப்பைக் குளம், வவுனியா.
03. கிறிஸ்ரின் ஏஞ்சல் டலிமா, 1ம் வட்டாரம், பேசாலை.
04. ஸ். மெலானி, யோசவ்வாஸ் நகர், தோட்டவெளி.
05. தே. சுகிந்தா, இலுப்பைக்குளம், நேரியகுளம்.
06. அருட்சகோதரி மேரி பற்றீசியா, ஆலயவீதி, தோட்டவெளி.
07. வி. ஆன் சௌமியா, 5ம் வட்டாரம், விடத்தல்தீவு.
08. அ. ஜஸ்மின் ஷறோன், ஆவணம், நானாட்டான்.
09. அ. மடுராஜினி, துள்ளுகுடியிருப்பு, பேசாலை.
10. பி. யூஜிற்றா, இசைமாலைத்தாழ்வு, முருங்கன்.

### இல. 97இற்கான சரியான விடைகள்

1. மனம் மாறாதவர்கள் தண்டிக்கப்படுவர் (3:3). 2. மண்ணுலகில் வாழ்வோரைச் சோதிக்க உலகின் அனைத்தின்மீதும் வரவிருக்கும் சோதனைக் காலத்தில் அது காப்பாற்றப்படும் (3:10).
3. அவர்களைக் கண்டித்துத் திருத்துகிறார். 4. அரியணையில் வீற்றிருந்த இருபத்து நான்கு மூப்பர்கள் (4:11).
5. கோடிக்கணக்கான வானதூதர்கள் (5:12) 6. ஏழு (5:1). 7. யேசு 8. I. பச்சைக் குதிரை II. சாவு (6:7-8) 9. ஒரு இலட்சத்து நாற்பத்தாறாயிரம் பேர். 10. அரியணையில் வீற்றிருக்கும் எங்கள் கடவுளிடமிருந்தும் ஆட்டுக்குட்டியிடமிருந்துமே மீட்பு வருகின்றது என்று சொல்லிப் பாடினார்கள் (7:10).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.112

## சீராக் ஆகமம் 31 முதல் 51 அதிகாரங்கள்

உங்கள் விடைகளை பத்திரிகை உங்கள் கைக்கு கிடைத்து ஒரு வாரத்திற்குள் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | 02 | | | | 03 | | |
| | ✱ | | 04 | | | | | | |
| | 05 | | | | | | | | |
| | | 06 | | | 07 | 08 | | 09 | 10 |
| | 11 | ✱ | | 12 | 13 | | 14 | | 15 |
| | | 16 | | | 17 | | 18 | | |
| 19 | | | | | | | | 20 | |
| | 21 | | | | | | | | 22 |
| 23 | | ✱ | | | | | 24 | ✱ | |
| | 25 | | 26 | 27 | | | 28 | | |

(___என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதை கவனத்தில்கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

1. உமக்காகப் பொறுமையுடன் காத்திருப்போருக்கு ...... அளியும்.
2. .................. மீதுள்ள விழிப்பு உடலை நலியச் செய்கிறது.
4. ............... வகை மக்களினத்தாரை என் உள்ளம் வெறுக்கிறது.
5. அவர்கள் .................. துயில் எழுகிறார்கள்.
14. அதனால்தான் எல்லாக் ................. களினின்றும் நீர் வடிகிறது.
16. எல்லா நீர்நிலைகளிலும்___வளரும் .................. புல்___பிடுங்கி எறியப்படும்.
19. .................. யாழும் இன்னிசை எழுப்புகின்றன.
21. .................. பெயரால் உரைக்கப்பட்ட இறைவாக்குகளை நிறைவேற்றும்.
23. ............ படைகளுக்கு அடையாள___வெளியில் அது மிளிர்கின்றது.
13. நுகமும் கடிவாளமும் .......... யின் கழுத்தை வளைக்கின்றன.
28. .................. வாழும் மிகப்பெரிய விலங்குகளும் உள்ளன.

### வலமிருந்து இடம்

7. உங்கள் .................. தந்தையர்___ நாணம் கொள்ளுங்கள்.
12. கருஞ்சிவப்பு உடையும் .................. முடியும் அணிந்தோர் முதல்___வரை.
15. தன்னுடைய ஒளிக்கதிர்களால் ..................க் குருடாக்குகிறது.
17. ஞான .................. லைப்பார் அதை உண்டாக்கினவரைப் போற்று.
20. ..................புரியக்கூடிய___ தீமை புரியாமல்விட்டவர் யார்?
26. அநீதியைக் கைவிடுதல் பாவக் ..................ப் பலியாகும்.
18. கட்டளைகளை மீறுவோர் .................. முடிவில் அழிவர்.
22. .................. தேனும்___அழைத்து வந்தனர்.

### மேலிருந்து கீழ்

1. அங்கே விந்தையான, வியப்புக்குரிய .................. உள்ளன.
3. அவருடைய சொல்லால் தண்ணீர் .................. நின்றது.
9. ஒரு .................. விட மற்றொருத்தி___தோன்றுவாள்.
11. இவ்வாறு அந்த நாடு அவருடைய .................. வலிமையை அறிந்துகொண்டது.
4. உன்னத .................. திருமுன் மன்றாடுவர்.
19. ஆண்டவருக்குப் பணி செய்யவும் .................. ஊழியம் புரியவும்___இவ்வாறு செய்தார்.
10. நறுமணம் வீசுங்கள் .................. பாடுங்கள்.
21. .................. உழைப்பின் முதற்கனிகளைக்___பார்க்காதே.
23. .................. திறந்துவேண்டுவர். தங்கள்___மன்றாடுவர்.
17. அவற்றை அழகு செய்வதில் .................. இருக்கிறார்கள்.

### கீழிருந்து மேல்

6. ஓனியாவின் .................. சீமோன்___திகழ்ந்தார்.
8. உன் உழைப்பின் முதல் ............... களைக் கொடுப்பதில் கணக்குப் பார்க்காதே.
9. .................. அழகு அவளுடைய___மகிழ்விக்கும்.
10. தன்னிறைவு கொண்டோர் தொழில் .................. ஆகியோருடைய___இனிமையானது.
11. நீதிமான்களின் .................. ஏற்றுக்கொள்ளத்தக்கது.
13. நாம் .................. கேட்டு வியப்படைகிறோம்.
18. கொடை வழங்கும்போதெல்லாம் .................. மலர்ச்சியோடு கொடு.
24. தம் நாள்களில் அவர் .................. விடுவிப்பாராக.
25. .................. வெளியில் அது மிளிர்கின்றது.
26. திராட்சை___ .................. காலம்வரை___ இன்புற்றிருந்தது.
27. திராட்சை இரசம் பரிமாறப்படும் .................. உனக்கு___ கொள்ளாதே.
28. அடக்கமற்ற மகள்மேல் .................. கருத்துமாய் இரு.

## விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி இல. 110ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில்

பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:



**முதலாம் பரிசு:**
பி. நிசாந்தினி,
இத்திக்கண்டல், அடம்பன்.



**இரண்டாம் பரிசு:**
எஸ். டயானா,
பெரியகுளம்,
பறப்பான்கண்டல்.

**மூன்றாம் பரிசு:**
ஜே. எஸ். லிற்வினியா,
மாதா கோவில் வீதி,
தலைமன்னார்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 42 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 33 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 110ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

01. எஸ். மேரி குலோஜினி மொறாய்ஸ், 1ம் வட்., வங்காலை
02. க. யூலியன், இசைமாலைத்தாழ்வு, முருங்கன்.
03. எ. கரோலின் கிர்ப்திகா, 41, மரியாள் வீதி, திருகோணமலை.
04. அ. டிலோஜனா, சூரியகட்டைகாடு, நானாட்டான்.
05. ஜி. அல்பேட், வெல்கம் லேன், பாலையூற்று, திருகோணமலை.
06. அ. மடுராஜினி, துள்ளுகுடியிருப்பு, பேசாலை.
07. பி. மரியவளன் (நிதன்), நறுவிலிக்குளம், நானாட்டான்.
08. எஸ். மேவின், பெரியகுளம், பறப்பாங்கண்டல்.
09. வ. றொணி, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
10. எஸ். றினோளா குருஸ், தியோகு வீதி, தாழ்வுபாடு, மன்னார்.
11. பி. நிறோமி, இத்திக்கண்டல், அடம்பன்.
12. எஸ். நிஷாந்தினி கூஞ்ஞ, 8ம் வட்டாரம், பேசாலை.
13. எஸ். நிசாளினி, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
14. மே. பி. றோ. கிறிஸ்ரோபர், 18, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
15. அ. பறுணாந்து தவறாசா, இத்திக்கண்டல், அடம்பன்.
16. றொ. ஆன் மியூறிகா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
17. சி. நோயால் கிறிஸ்ரி றோச், மாவட்ட நீதிமன்றம், மன்னார்.
18. பி. நிலக்சினி, இத்திக்கண்டல், அடம்பன்.
19. எ. சகாயறாஜன், சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
20. எஸ். டிசியா குலாஸ், பவுல் வீதி, தாழ்வுபாடு, மன்னார்.
21. பி. திரேசா றீற்றா, இத்திக்கண்டல், அடம்பன்.
22. ம. யஸ்ரீன் பிரபாகர், பெரியகுளம், பறப்பாங்கண்டல்.
23. அ. டிலோஜன், சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
24. பி. நிலாளன், இத்திக்கண்டல், அடம்பன்.
25. அருட்சகோதரி மேரி பற்றீசியா, ஆலய வீதி, தோட்டவெளி.
26. வ. கெலன் தர்சிக்கா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
27. இசைக்கியேல், ஜோசப்வாஸ் நகர், தோட்டவெளி.
28. ஜே. எஸ். சுகன்யா, மாதா கோவில் வீதி, தலைமன்னார்.
29. அ. ஒசின் சோபியா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
30. றொ. பற்றிக் விதுஷன், சூரியகட்டைக்காடு, நானாட்டான்

# தலைநகரில் தமிழ் குருக்கள் தங்கும் இல்லத்தின் வரலாறு

தருபவர் : அருட்திரு மங்களராஜா

தலைநகர் கொழும்பில் தமிழ் குருக்கள் தங்கி நிற்கும் பொறளை கிறிகறிஸ் வீதியில் உள்ள கட்டிட வளாகத்தில் அண்மையில் புதிய கட்டிடத்தொகுதி திறந்துவைக்கப்பட்டுள்ளது. இந்த வளாகத்தின் வரலாறுபற்றி திருச்சபை வரலாற்றாசிரியரான அருட்திரு. மங்களராஜா அடிகளார் தரும் பின்வரும் தகவல்கள் சுவாரஸ்யமானவை :

"யாழ் மறைமாவட்டத்திற்குச் சொந்தமான கட்டிடத்தொகுதி அடங்கிய காணியொன்று கொழும்பு பொறளையில் உள்ள சுவிஸ் நாட்டு தூதரகத்திற்கு அருகாமையில் உள்ளது. இந்த வளாகம் கத்தோலிக்க திருச்சபையின் பரோபகாரிகளில் ஒருவராகிய அச்சுவேலியைச் சேர்ந்த சித்தம்பலம் காடினர் அவர்களால் யாழ் மறைமாவட்டத்திற்கு எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை யாழ் ஆயராக இருந்த காலத்தில் வழங்கப்பட்டது.

வடக்குக் கிழக்கைச் சேர்ந்த தமிழ் மாணவிகள் கொழும்பில் தங்கியிருந்து கல்வி கற்கவேண்டிய சூழ்நிலையில் அவர்களுக்குத் தங்குமிட வசதி கொழும்பில் தேவைப்பட்டது. இத்தேவையை நிறைவுசெய்ய ஒரு விடுதியை இந்த வளாகத்தில் நடாத்துவதற்கு திருச்சிலுவைக் கன்னியர் முன்வரவே அவர்கள் 1961ஆம் ஆண்டு இப்பணியைத் தொடங்கினர்.

இப்பின்னணியில் யாழ்ப்பாணத்தில் இருந்து பல்வேறு தேவைகளுக்காக கொழும்புவரும் அருட்பணியாளர்கள் தங்குவதற்கான விடுதி வசதியின் தேவை மிக முக்கியமாக உணரப்பட்டது. எனவே இந்த வளாகத்திலுள்ள விடுதி தொடர்ந்து திருச்சிலுவை கன்னியர்கள் பராமரிப்பில் இயங்க, அருகிலே குருக்கள் தங்குவதற்கான ஒரு கட்டிடம் முன்னாள் ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களால் அமைக்கப்பட்டது. இக்கட்டிடத்தின் பெரும்பகுதியான செலவை யாழ் மறைமாவட்டம் ஏற்றுக்கொண்டது. மன்னார் மறைமாவட்டத்தையும், திருமலை மட்டுநகர் மறை மாவட்டத்தையும் சார்ந்த குருக்களுக்கும் தங்குமிடம் தேவைப்பட்டதால் இவ்விரு மறை மாவட்டங்களிலிருந்தும் சொற்ப பங்களிப்பு பெறப்பட்டது. இவ்வாறு கட்டப்பட்ட கட்டிடம் 1990ம் ஆண்டு தொடக்கம் பாவனையில் இருந்துவந்தது.

காலப்போக்கில் பெருகிவந்த குருக்களின் எண்ணிக்கைக்கு இக்கட்டிடம் போதாமல் இருந்ததால் புதியதொரு கட்டிடம் கட்ட யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தமது குருக்களின் ஆலோசனையுடன் தீர்மானித்து 2009ம் ஆண்டில் இருந்து நிர்மாணப் பணிகள் ஆரம்பமாயின. 12 தனியறைகள் கொண்ட இக்கட்டிடத்தின் வரைபடம் அருட்பணி. வேதநாயகம் (அ.ம.தி.) அவர்களால் வரையப்பட்டது."

## அதிர்வுகள் ....... 10ஆம் பக்கத் தொடர்ச்சி

இதனைச் சொல்கிறபோதுதான், 'சில பெரியவர்கள் தாங்கள் சிறியவர்களாகி விடுவோமோ என்ற பயத்தில், பல சிறியவர்களைப் பெரியவர்கள் ஆக்காமல் வைத்திருக்கிறார்கள்' என ஒரு பெரியவர் கூறுகிறார்.

இக்கட்டத்தில், "தனி மனிதன் நோய்வாய்ப்பட்டால் சிகிச்சை அளிக்கலாம். ஒரு தேசத்தின் ஒழுங்கும், சனநாயகமும் நோய்வாய்ப்பட்டால் யாரால் திருத்த முடியும்?" என நா. பார்த்தசாரதி எழுப்புகின்ற கேள்வி சிந்திக்கத்தக்கது.

முன்னாள் இந்தியப் பிரதமர் அன்னை இந்திரா காந்தி தன் அமைச்சர் ஒருவரிடம் 05 (ஐந்து) நிமிடங்கள் மட்டும் பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றும்படி கேட்டிருந்தார். எனினும் அவர் சரியாகப் 15 (பதினைந்து) நிமிடங்கள் உரை நிகழ்த்தினார். இதனால் இந்திரா காந்தியின் அதிருப்திக்கு ஆளானார். வருத்தமுற்ற அமைச்சர் அவ்வுரையை எழுதி ஆயத்தம் செய்து கொடுத்த தன் செயலரிடம், "உம்மிடம் ஐந்து நிமிட உரையை அல்லவா கேட்டிருந்தேன். நீர் ஏன் பதினைந்து நிமிட உரையை எழுதினீர்?" எனக் கோபம்கொண்டு ஆவேசத்தோடு கேட்டார். அவன், "நான் ஐந்து நிமிட உரையைத்தான் எழுதினேன். ஆனால், அம்மூலப் பிரதியோடு நீங்கள்தான் இரண்டு 'போட்டோ கொப்பி'களையும் (பிரதிகள்) தரச் சொன்னீர்கள்!" எனப் புன்முறுவலோடு பதிலளித்தான்.

எழுதிக்கொடுத்த உரையை மூன்று தடவை திரும்பத் திரும்ப வாசிப்பதுகூடத் தெரியாமல் பேசியிருக்கிறார் என்றால் இப்பேர்ப்பட்டவர்களின் 'அரசியல் அக்கறை'யை, 'அரசியல் சாணக்கிய'த்தை என்னவென்பது! அன்னை இந்திரா காந்தியின் இந்த அமைச்சரைப்போல எத்தனை, எத்தனை அமைச்சர்கள், புத்திஜீவிகள், மேன்மை தங்கிய மேதைகள் நம் அமைச்சர் அவையில், நம் ஆலோசனைக் குழுக்களில், நம் ஆணைக்குழுக்களில் இருக்கிறார்களோ ....!

## கார்மேல் கன்னியர்களின் முதல்வர் .... 1ம் பக்கத் தொடர்ச்சி

மன்னார், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு உட்பட இலங்கையில் உள்ள 37 கார்மேல் அருட்சகோதரிகளின் இல்லங்களையும் அவர்கள் நடாத்தும் நிறுவனங்களையும் இவர் சந்திப்பார் என அறியமுடிகிறது.

டிசம்பர் மாதம் 7ஆம் திகதி தனது இலங்கை விஜயத்தை நிறைவுசெய்துகொண்டு இவர் தலைமைப் பணியகமான இந்தியாவுக்கு திரும்பவுள்ளார். இவருடன் இச்சபையின் நிதியாளரும் வருகை தந்துள்ளார். அருடசகோதரி ஆகத்தா மேரி அவர்கள் கார்மேல் சபையின் பத்தாவது முதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது.

கார்மேல் அருட்சகோதாரிகள் மன்னார் மறைமாவட்டத்தில் முருங்கன், அடம்பன், பம்பைமடு ஆகிய இடங்களில் பணியாற்றுகின்றனர்.

## இல.110 இற்கான சரியான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ✱ | எ[6] | ச் | ச[12] | ரி | ல் | யரி | ரை | த[4] | லை |
| கே[22] | தே[30] | ள் | வு | ஓ[23] | செ[16] | னே | ✱ | ய | பே[20] |
| ளி | சூ[7] | வா[21] | ல் | ர் | ஏ[19] | ழ | ✱ | வு | ழை |
| ய | ✱ | ய் | வி | வ[8] | ளி | மை | தி[27] | ய | ✱ |
| ர் | போ[32] | ✱ | லோ | சா[11] | ✱ | து | ரு | ங் | பு[24] |
| ச[10] | சா[26] | யரி | சி[1] | ட் | ன் | கோ[15] | ர் | மு[34] | லி |
| ✱ | லி | ண் | ✱ | சி | நா[18] | ✱ | ச | க | ரு |
| டி | ம் | க[3] | று[33] | ட் | கா | க[29] | ர | ம் | பெ[28] |
| ல | ✱ | மி[17] | க் | மா[25] | க | ர | அ[5] | ✱ | ண |
| ம[9] | ளி | த | ர் | ✱ | கோ | ழ் | யா[31] | ய | தூ[13] |

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.111ற்கான முடிவுகளை 2011ம் ஆண்டு டிசம்பர் மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

## மணிவிழாச் சேவை நிறைவில் .......... 5ஆம் பக்கத் தொடர்ச்சி

மன்னார் மாவட்டத்தின் நானாட்டான் பிரதேச வஞ்சியன்குளம் கிராமத்தை பிறந்தகமாகக் கொண்ட இவர், ஐந்து வருட காலங்கள் மட்டும் கொழும்பில் பணியாற்றியபின் மிகுதி தனது சேவைக்காலம் முழுவதும் மன்னார் மாவட்டத்து மக்களுக்காக தனது அர்ப்பணிப்பான சேவையை நல்கியுள்ளார்.

நான்கு வருடங்கள் மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபராகவும், இரு வருடங்கள் மடு உதவி அரசாங்க அதிபராகவும் பணியாற்றியுள்ளார். இக்கட்டான அக்காலகட்டத்தில் இன்னலிலுள்ள மக்களுக்கான அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றுவதில் பல இடர்களை எதிர்நோக்கியும்கூட, சிறப்பான பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அதேவேளை பன்னிரண்டு வருடங்கள் மாந்தை மேற்கு பிரதேசசபை விசேட ஆணையாளராக இருந்து ஆற்றிய நிறைவான சேவைகளை எந்நாளும் மறக்கமுடியாது.

கவிஞரும், எழுத்தாளரும், பேச்சாளருமாக விளங்கும் மன்னார் மணியென யாவராலும் அறியப்பட்ட இவர், தனது கவிதைக்காக தேசிய மட்டத்தில் சான்று பெற்றவராவர். இவரது இலக்கியப் பணிக்காக, மன்னார் தமிழ் செம்மொழி விழாவில் இலக்கிய விருது வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

தனது சேவைக்கால நிறைவில் மன்னார் பிரதேச செயலக நிருவாக அலுவலராகக் கடமையாற்றியவேளை, மேலதிக மாவட்ட பதிலாளராகவும் சேவையாற்றியுள்ளார். இவரின் அரச சேவைக்காலம் நிறைவெய்தினாலும் சமூக, இலக்கியப் பணிகளைத் தொடர வேண்டுமென வாழ்த்துவதில் 'மன்னா' மிக்க மகிழ்வெய்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

## 40ம் நாள் நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 21 | | 06 |
| 02 | | 11 |
| 1930 | | 2011 |



### திரு. நீக்கிலான் சூசையப்பு குரூஸ்
### பேசாலை

**"உயிர்த்தெழச் செய்பவனும் வாழ்வு தருபவனும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்".**
**(யோவான் 11:25)**

உமதினிய முகமெமது அகமிருந்து வாழும்
பதமுமதை கண்ணீரோடு சதாகாலம் தொழுவோம்.
கமலன் பாதம் தொழுதேற்ற விண்ணுலக மெய்தீர்
நிதமெமது வாழ்வோங்க நிமலனை நீர் வேண்டீர்.

*அன்னாரின் ஆன்ம ஈடேற்றத்திற்காக 16.12.2011 அன்று காலை 6.00 மணிக்கு புனித வெற்றிநாயகி ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.*

***பிரிவால் துயருறும்: அன்புப் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.***

## இங்கிலாந்து அரச குடும்பத்தினர். ....
1ஆம் பக்கத் தொடர்ச்சி

இங்கிலாந்து அரசரோ, அரசியோ இங்கிலாந்துத் திருச்சபையுடன் ஒன்றிப்பில் இருக்க வேண்டும். ஏனெனில் அவரே அத்திருச்சபையின் தலைவராக உள்ளார் என கடந்த ஒக்ரோபர் 28ஆம் திகதி இந்த மாற்றங்கள் தொடர்பாக அறிவிக்கும்போது இங்கிலாந்துப் பிரதமர் டேவிட் கமரோன் தெரிவித்தார்.

## தமிழ் கத்தோலிக்க செய்தி .......
1ஆம் பக்கத் தொடர்ச்சி

இலங்கைச் செய்திகள் - உலகச் செய்திகள் - இணைப்புக்கள் வழி இலங்கை மறைமாவட்டங்களின் இதர இணைய விபரங்கள் - கத்தோலிக்க பாடல்கள் - கானொளிகள் - படங்கள் - விளம்பரங்கள் என்ற பல பகுதிகளுடன் இவ் இணையத்தளம் இயங்குகிறது.

தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா இணையத்தள அறிமுக விழா கடந்த நவம்பர் மாதம் 26ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு யாழ் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள சவுந்தரம் மீடியா சென்ரரில் நடைபெறும். பிரதம விருந்தினராக யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் கலந்துகொண்டு இணையத் தளத்தினை ஆரம்பித்துவைத்தார்.

உங்கள் இணையத்தள இணைப்பு விபரங்களை தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா இணையத்தளத்தில் இலவசமாக வெளியிட விரும்புவோர் தபால் மூலமாகவோ, மின்னஞ்சல் (infortcnl@gmail.com) மூலமாகவோ அனுப்பிவைக்கலாம்.

## திருச்சபையின் வரலாற்றில் .....
1ம் பக்கத் தொடர்ச்சி

மதங்கள் வன்முறைக்கு வழிவகுப்பதால் மதங்களே வேண்டாம் என்று கூறும் போக்கு உலகில் பெருகிவருகிறது. வன்முறை வளர்க்கும் கடவுளும், மதங்களும் தேவையில்லை என்று கூறும் பல குழுக்களின் மத்தியிலும், வன்முறைகள் பெருகிவருகின்றன. வன்முறையின் மற்றொரு வகை இதுவே. கடவுளையும், மதங்களையும் புறக்கணித்து வாழ்பவர்கள் மத்தியில் நிலவும் இந்த வன்முறை இன்னும் ஆபத்தானது. தங்களை மீறிய எதுவும் உலகில் இல்லை என்ற எண்ணத்துடன் இவர்கள் வன்முறையை மேற்கொள்ளும்போது, அது எல்லைமீறிய வகைகளில் வெளிப்படுகிறது.

## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுளையும், மற்றும் பிறந்தநாள், திருமண யூபிலி நினைவுகளையும் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவு - படுத்துகின்றோம்.

**கட்டண விபரம் :**
கறுப்பு வெள்ளை 4,500/= கலர் 7,500/=

### மறைபரப்பு ஞாயிறுதின செயற்பாடுகளில்
# முன்னுதாரணமாகத் திகழும் மன்னார் பேராலயம்

## இவ்வாண்டு ஐந்து இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான நிதி சேகரிப்பு!



பங்குத்தந்தை
அருட்பணி. பி. ஜேசுராஜா

"திருமறையை பரப்புவது எமது தலையாய கடமை" என்னும் கருப்பொருள் தாங்கி மறைபரப்பு ஞாயிறு தினத்தை மன்னார் பேராலய பங்கு மக்கள், பங்குப் பெருவிழா என மதித்து வருடா வருடம் கொண்டாடிவருவது வழக்கம்.

சுமார் 1,800 குடும்பங்களைக் கொண்ட 13 அன்பிய வலயங்களில் செறிந்து வாழும் கத்தோலிக்க சமூகம் ஒன்றிணைந்து, ஆண்டவர் யேசுவில் கொண்டுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு, நற்செய்தி அறிவிப்புக் கடமையினை உணர்ந்து செயற்படுவதில் முன்னேறி வருகின்றார்கள்.

"நாங்கள் எங்களைப்பற்றி அல்ல, இயேசுக் கிறிஸ்துவைப் பற்றியே அறிவிக்கின்றோம். அவரே ஆண்டவர் என பறைசாற்றி வருகின்றோம்" (2 கொரிந்தியர் 4:5) எனும் வார்த்தையின் அழைப்பை ஏற்று பேராலயப் பங்கு மக்கள் ஒன்றுபட்டு பங்குத் தந்தையர்களுடன் சேர்ந்து திட்டமிட்டு மறைபரப்பு ஞாயிறு தினத்தை 23.02.2011ல் அனுசரித்தனர். மறைபரப்பு ஞாயிறு அன்று காலைத் திருப்பலியானது மறைக்கல்வி இயக்குனர் அருட்பணி. பிரான்சிஸ் றெஜினோல்ட் அடிகளாரின் தலைமையில் கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. பலியைத் தொடர்ந்து மக்கள் தங்கள் அன்றாட வாழ்வுக்கு தேவையான காலை, மதிய, இரவு உணவு வகைகள், காய்கறி, இறைச்சி, பல்பொருட்களை ஆலய வளவில் அன்று இயங்கிய விற்பனை நிலையங்களில் பெற்று தமது இல்லம் எடுத்துச் சென்றனர். 13 வலயங்கள், பக்தி சபைகள் ஏனைய குழுக்களின் விற்பனை நிலையங்களில் முழுவதையும் பெற்றுச் சென்ற செயற்பாடு பகிர்தலை வெளிப்படுத்தியது.

இளைஞர் குழாம், மறையாசிரியர் குழு, ஆண்கள் தோழமைக் குழு, அன்பியப் பணியாளர், மரியாயின் சேனையினர், பவுலடியார் செபக்குழுவினர், பீடப்பணியாளர் குழாம், குருமட மாணவர்கள், விடுதிச்சாலை மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் பொன்ற அனைவரும் ஆர்வத்தோடு இதில் ஈடுபட்டனர்.

பீடப்பணியாளர் நடத்திய "நரகம்" என்னும் கண்காட்சி பகல், இரவு, மறுநாள் என்று மக்கள் களைகட்டி நிலைகொண்டு கண்டு களித்திட்ட காட்சி சிறப்புற அமைந்தது. அந்நாளில், மாலைவேளை கலை நிகழ்ச்சிகளைக் கண்டு களித்திட, என்றும் இல்லாதவாறு பங்கு மக்கள் பெருமளவில் வருகை தந்திருந்தனர். அன்பியப் பெண் பணியாளர்களின் மீனவ நடனத்தை "வன்ஸ் மோர்" "மீண்டும் ஒருமுறை ஆடுங்கள்" எனப் பாராட்டும் அளவிற்கு மக்களின் ஆரவாரம் இடம்பெற்றது. திருமறையை ஒட்டிய கலைநிகழ்ச்சிகள் என்றால் வழக்கமாக மாணவர்களைத்தான் மேடையில் பார்க்கலாம். ஆனால் அன்றைய நிகழ்வுகளில் வெண்மை நிறம் கொண்ட தலைகளையும், கறுப்பு நிற டை பண்ணிய தலைகளையும் காண முடிந்தது. சமூகத்தொடர்பு அருட்பணி மைய இயக்குனர் அருட்பணி. தமிழ்நேசன் அடிகளார் அன்றைய கலைநிகழ்வின் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரை வழங்கி சிறப்பித்தார்.

அன்று மதியம் கொட்டிய மழையும் சற்று நேரத்தில் வற்றிக் காய்ந்த தரையும் ஆண்டவர் அருளே என்று பேராலயப் பங்குத்தந்தை அருட்பணி. பிலிப் ஜேசுராஜா தமது உரையில் இறைவனுக்கு நன்றி கூறி மக்களை உற்சாகப்படுத்தினர்.

மறைபரப்புக்கென பேராலய மக்கள் காணிக்கையாக சந்தையூடாக மற்றும் நன்கொடையாக பெருமகிழ்வுடன் உவந்தளித்த நிதியின் மொத்தத் தொகை ரூபா. ஐந்து இலட்சத்து முப்பத்திரண்டாயிரத்து முந்நூற்று இருபத்து எட்டு (532,328.00) ஆகும்.

பங்கு மக்களுக்கு நன்றிகள் பல்லாயிரம் என பங்குத்தந்தை அடுத்தவார ஞாயிறு திருப்பலியில் கூறி மக்களை உற்சாகப்படுத்தினார்.

## செபமாலைக் கன்னியர்களின் .....
1ஆம் பக்கத் தொடர்ச்சி

இவர் 13.05.1982இல் அருட்சகோதரியாக முதலாவது வாக்குத்தத்தத்தையும் 13.05.1988இல் நித்திய வாக்குத்தத்தத்தையும் பெற்றுக்கொண்டார். துறவற வாழ்வில் 25வது நிறைவு விழாவை 02.06.2007இல் எளிமையாகக் கொண்டாடினார்.

இச்சபையின் பதில் முதல்வராக இந்திய மாகாணத்தைச் சேர்ந்த அருட்சகோதரி றோஸ் மேரி அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார். முதல்வரது ஆலோசகர்களாக இந்திய மாகாணத்தை சேர்ந்த சகோதரி மேரி பவுலின், தென் மாநிலத்தைச் சேர்ந்த மேரி கெலனா, வட மாநிலத்தை சேர்ந்த மேரி எலிசபெத் ஆகியோர் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இப்பொதுச்சங்கமானது இச்சபையின் தலைமை இல்லத்தின் ஆயரும், யாழ் ஆயருமாகிய மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் தலைமையில் நடைபெற்றது. புதிய முதல்வர் தேர்வினையும் ஆயர் அவர்களே தலைமையேற்று நடாத்தினார். இத்தேர்வின்போது ஆன்ம ஆலோசகரான அருட்பணி. எட்வின் வசந்தராஜா (அ.ம.தி) அவர்களும், செபமாலைத் தாசர் சபையின் முதல்வரான அருட்பணி. ஸ்ரீபன் (செ.தா) அவர்களும், ஆன்மீக குருவாகிய அருட்பணி. பி. பி. பிலிப் (அ.ம.தி) அவர்களும் உடன் இருந்து உதவினர்.

## மன்னார் மண்ணின் புதல்வியரான ....
3ஆம் பக்கத் தொடர்ச்சி

ஆட்காட்டிவெளிப் பங்கு குமனாயங்குளம் கிராமத்தைச் சேர்ந்த அருட்சகோதரி றொசாறியோ (அ.கா) அவர்கள் கடந்த 29.04.1986 அன்று இந்தியாவில் தனது முதலாவது அர்ப்பணத்தைச் செய்தார். இவ்வாண்டு மே மாதம் 18ஆம் திகதி குமனாயங்குளம் புனித தோமையார் ஆலயத்தில் யூபிலி நன்றித் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார். இவர் கடந்த 11 வருடங்களாக (2000 - 2011) அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரியில் அதிபராகப் பணியாற்றி வருகின்றார். இவர் அடம்பன் ம.ம.வி (1986 - 1989), அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி (1989 - 1995), பதுளை தமிழ் ம.வி 1995 - 1998), திருகோணமலை புனித மரியாள் தேசிய பாடசாலை (1998 - 2000) ஆகிய இடங்களில் தனது கல்விப் பணியை ஆற்றியுள்ளார்.

நானாட்டான் பங்கு பள்ளங்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த அருட்சகோதரி மரிய ஜீவந்தி (அ.கா) அவர்கள் கடந்த 07.01.1986 அன்று தனது முதலாவது அர்ப்பணத்தைச் செய்தார். இவ்வாண்டு ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதி நானாட்டான் புனித ஆரோக்கிய மாதா ஆலயத்தில் யூபிலி நன்றித் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார்.

இவர் கடந்த 5 வருடங்களாக யாழ்ப்பாணத்தில் மிகவும் பிரசித்திபெற்ற ஆரம்பப் பாடசாலையாகிய புனித டொண் பொஸ்கோ பாடசாலையில் அதிபராகப் பணியாற்றி வருகின்றார்.

கடந்த ஆறு வருடங்களாக (2005 - 2011) யாழ் டொண் பொஸ்கோ ஆரம்பப் பாடசாலையில் (ஒரு வருடம் ஆசிரியராகவும், 5 வருடங்கள் அதிபராகவும்) பணியாற்றிவரும் அருட்சகோதரி ஜீவந்தி அவர்கள் மட்டக்களப்பு 1986 - 1988), கல்முனை (1988 - 1994), தாளையடி (1994 - 1997), கரவெட்டி (1998 - 2005) ஆகிய இடங்களில் கல்விப் பணியாற்றி வந்துள்ளார்.

## டொண் பொஸ்கோவின் திருப்பண்டம்......
3ஆம் பக்கத் தொடர்ச்சி

25ஆம் திகதி காலை 11.30 மணிக்கு செட்டிகுளத்திற்கும், மதியம் 1.30 மணிக்கு முருங்கன் டொண் பொஸ்கோவிற்கும் 6.00 மணிக்கு மன்னார் பேராலயத்திற்கும் 26ஆம் திகதி காலை 10.00 மணிக்கு வவுனியா புனித அந்தோனியார் ஆலயத்திற்கும் இத்திருப்பண்டம் வருகை தந்தது.

25ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு மன்னார் பேராலயத்திற்கு வருகை தந்த இத்திருப்பண்டம் இரவு முழுவதும் பேராலயத்தில் வைக்கப்பட்டு காலை 6.00 மணிக்கு மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து காலை 8.00 மணிக்கு வவுனியா நோக்கி திருப்பண்டம் தாங்கிய வாகனம் புறப்பட்டுச்சென்றது.

## ம.து.ம. சங்கத்தின் ஏற்பாட்டில் ....
5ஆம் பக்கத் தொடர்ச்சி

மேலும் அவர் கூறுகையில், இம்மாணவர்களில் நான்கு பேர், பல்கலைக்கழகத்தில் கல்விகற்று வருவதும் குறிப்பிடத்தக்கது. எமது ஏனைய பல்கலைக்கழக உதவித்திட்டத்தின்கீழ், இதுவரை 12 மாணவ, மாணவியர்கள், பல்வேறு துறைகளில் மன்னார் துயர்துடைப்பு மறுவாழ்வுச் சங்க நிதியுடன் கல்விகற்று வருகின்றனர். அத்துடன் ஆறு தொண்டர் ஆசிரியர்களுக்கு பின்தங்கிய பாடசாலைகளில் கல்வி போதிப்பதற்கு வேதனங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் இடம்பெயர்ந்த மாணவ, மாணவியர்களுக்கு கல்விக்கான உதவித்திட்டத்தின்கீழ் 25ற்கும் மேற்பட்ட சிறார்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டதாக கூறினார்.

ம. து. ம. சங்கச் செயலாளர் திரு. சின்கிலேயர் பீற்றர் கருத்துத் தெரிவிக்கையில், அரிப்பு, முள்ளிக் குளத்தில் வாழ்ந்த மக்கள், நாடோடிகளாக இல்லிடமின்றி அலைந்து திரிவதாகவும், கடும் மழை காரணமாக இவர்களின் ஓலைக்கொட்டில்கள் பாதிக்கப்பட்டதனால், மன்னார் நகரில் வாழும், 35 குடும்பங்களுக்கு, தலா 200, கிடுகுகள், வீதம் வழங்கப்படவுள்ளதாகவும், மீனவ கிராமமான தேவன்பிட்டி கிராமத்தில், படித்த இளம் பெண்களுக்கு 6 மாத தையல் பயிற்ச்சி நடைபெறுவதாகவும், இவர்களுக்கான சான்றிதழ்கள் எதிர்வரும் தை மாதத்தில் வழங்கப்படவுள்ளதாகவும், அடம்பனில் உள்ள வாமதேவபுரத்தில் விதவைகள் மற்றும் பாதிக்கப்பட்ட 20 குடும்பங்களுக்கு சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், உதவிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், மடு கல்வி வலயத்தின் கீழ் G.C.E. O/L, G.C.E. A/L, 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் மாணவ, மாணவியரின் மீட்டல் பயிற்ச்சிக்கு உதவிகள் வழங்கப்படவுள்ளதாகவும் மடு, முள்ளிக் குளத்தில் அமைந்துள்ள மாதர் அபிவிருத்திச் சங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க முன்பள்ளிக்கு தளபாடங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் கூறினார்.

மன்னார் மக்களினால் அமைக்கப்பட்டு கடந்த 25 வருடங்களாக சேவையாற்றி வரும் மதுமச சங்கத்தில், நல் இதயம் படைத்த சமூக மேம்பாட்டு ஆலோசனைகள் வழங்கக் கூடிய பொதுமக்கள் தாமாக முன்வந்து அங்கத்தவர்களாக சேர்ந்து பாதிக்கப்பட்ட எம்மின மக்களுக்கு சேவையாற்ற முன்வருமாறு அழைப்புவிடுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தென்பகுதி சர்வமத குழுவினர் மன்னார் வருகை

## மன்னார் சமூகத்தொடர்பு அருட்பணி மையத்தில் வரவேற்பு





தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் தென்பகுதியைச் சேர்ந்த 40 பேர்கொண்ட சர்வமதக்குழுவினர் வடபகுதிக்கான சமாதானச் சுற்றுலாவை மேற்கொண்டனர். இந்தச் சுற்றுலாவின் ஒரு பகுதியாக இக்குழுவினர் மன்னாருக்கும் விஜயம் செய்தனர். காலி, மாத்தறை, குருணாகல் மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த சர்வமதத் தலைவர்கள் மற்றும் சமூகத் தலைவர்கள், இக்குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

கடந்த செப்ரம்பர் மாதம் 20ஆம் திகதி வருகை தந்த இவர்களை மன்னார் சர்வமதக் குழுவினர் வரவேற்றனர். மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையத்தில் இடம்பெற்ற இந்த வரவேற்பு நிகழ்வில், மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்களும் மற்றும் மன்னார் சர்வமத உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

மன்னார் குழுவினர் வருகை தந்த தென்பகுதிக் குழுவினருக்கு, வடபகுதியில் நிலவும் தற்போதைய பிரச்சினைகளை, மக்களின் கஸ்ரங்களை எடுத்துக்கூறினர்.

மன்னார் மக்கள் சார்பாக பனை ஓலையால் செய்யப்பட்ட அன்பளிப்புப் பொருட்கள் தென்பகுதிக் குழுவினருக்கு வழங்கப்பட்டன.

இச்சந்திப்புக்கான ஏற்பாடுகளை மன்னார் மறைமாவட்ட சர்வமத ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்திரு. தமிழ் நேசன் அடிகளாரும், சர்வமதப் பேரவையின் மாவட்ட இணைப்பாளர் ஆர். பி. ஆர் நிறுவனத்தைச் சேர்ந்த திரு. சீ. தயாளராஜன் அவர்களும் மேற்கொண்டிருந்தனர்.

மன்னார் திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்ற


# அற்றைத் திங்கள்

## கூத்துருவ நாடகம்

முல்லைக்கு தேர் ஈந்த வள்ளல் பாரி மன்னனின் வீர வரலாற்றினை, ஈழத்தின் பல்வேறு கூத்து மரபுகளின் ஒன்றிணைப்பின் ஊடாக வெளிப்படுத்திய அரங்கப் படைப்பு!








மன்னார் திருமறைக் கலாமன்றத்தின் சிறுவர், இளைஞர்களின் கலை வளர்ச்சிக்காக 'அற்றைத் திங்கள்' என்னும் கூத்துருவ நாடகத்தினை யாழ் திருமறைக் கலாமன்றம் மாபெரும் படைப்பாக மன்னார் நகர மண்டபத்தில் அரங்கேற்றம் செய்தது.

கடந்த ஒக்டோபர் மாதம் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு முதல் காட்சியும், மாலை 2.30 மணிக்கு இரண்டாவது காட்சியும் இடம்பெற்றன.

முதல் காட்சியினை மன்னார் உதவி மாவட்டச் செயலாளர் திரு. எம். பரமதாசன் அவர்களும், இரண்டாவது காட்சியை மன்னார் தமிழ்ச் சங்கத் தலைவரும், மன்னா ஆசிரியருமான தமிழ் நேசன் அடிகளாரும் ஆரம்பித்துவைத்து உரையாற்றினர். இந்நிகழ்வினை மன்னார் திருமறைக் கலாமன்ற இணைப்பாளர் திரு. ஐ. சி. ஏ. ஜோண் பொஸ்கோ அவர்களும், அவருடைய குழுவினரும் சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தனர்.

## 'ஆசிரியர் தலையங்கம் ஓர் அறிமுகம்'

# ரூபன் அடிகளாரின் நூல் வெளியீட்டு விழா







யாழ் பல்கலைக்கழக ஊடக விரிவுரையாளரும், பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் இயக்குனரும், பாதுகாவலன் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியருமான அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை அவர்களின் "ஆசிரியத் தலையங்கம் ஓர் அறிமுகம்" என்ற நூல் வெளியீட்டு விழா கடந்த ஓகஸ்ட் 19ம் திகதி யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள விசப் சவுந்தரம் மீடியா சென்றறில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கி. விசாளரூபன் முதன்மை விருந்தினராகவும், மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மைய இயக்குனர் தமிழ் நேசன் அடிகளார் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர்.

இந்நூலிற்கான ஆய்வுரையை யாழ் பல்கலைக்கழகம் ஊடகக் கற்கைநெறி உதவி விரிவுரையாளர் கிருத்திகா தர்மராஜா அவர்களும், வலம்புரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ந. விஜயசுந்தரம் அவர்களும் நிகழ்த்தினர்.


# மன்னா

## உங்கள் வாசற் படிகளைத் தட்டுகின்றது!

"யாம்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"

## மன்னாவை அறிமுகம் செய்யுங்கள்

உங்கள் உறவினர் நண்பர்களுக்கு மன்னாவை அறிமுகம் செய்யுங்கள். உங்கள் உறவினர் அல்லது நண்பரின் பெயர், முகவரிகளை தெளிவாக எழுதி சந்தாப் பணத்தையும் எமக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் உறவினர், நண்பரின் வீடுதேடி மன்னா பறந்து செல்லும். உள்நாட்டில் உள்ளவராயின் ஒரு ஆண்டுக்குரிய சந்தாப்பணமாக இலங்கை ரூபா 800ஐயும் வெளிநாட்டில் உள்ளவராயின் ஒரு ஆண்டுக்குரிய சந்தாப்பணமாக இலங்கை ரூபா 3000ஐயும் அனுப்பவும்.

சந்தாப்பணத்தை மன்னா பணியகத்தில் நேரடியாகவோ அல்லது காசுக்கட்டளை மூலமாகவோ அல்லது காசோலை மூலமாகவோ அனுப்பலாம்.

காசோலை மூலம் அனுப்புவதாயின் வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd. Mannar.
பணம் பெறுபவர் பெயர் : The Editor - MANNA.
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782 என்று குறிப்பிடவும்.



இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு மன்னார் பிரதான வீதி 17ம் இலக்கத்திலுள்ள கற்றறால் - வாழ்வுதயம் அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org